உ

கடவுள் துணை.

உரோமரிஷி நாயனர்

அருளிச்செய்த

வயித்தியம் - ருா.

இவை,

திருவெண்காடு

ஆறுமுக சுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

சென்னை,

A. தீனதயாள முதலியார்

அவர்களால்,

சென்னை,

ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1923. [அணா 0-10-0

அகராதி.	பக்கம்.	செய்யுள்.
அஞ்சத்தைலம்	92	372
அஞ்சனபாஷாணவைப்பு	73	293
அஞ்சனம்	104	421
அஷ்டசித்தித்தைலம்	88	354
அஷ்டகண்மச்சக்கரம்	94	381
ஆக்கிரஷணம்	108	432
ஆனையிட்டது	29	112
ஆறுவகைசெயநீர்	47	186
இடுமருந்து	111	452
இந்திரகோபச்செம்பு	54	212
இரசசிந்தூரம்	45	156
இரச்சிந்தூரம்	13	118
இரவிமதிமுப்புவிபரம்	5	17
இலிங்கக்கட்டுச்செந்தூரம்	49	192
இலிங்கக்கட்டுமெழுகு	12	241
இலிங்கப்போக்கு	23	90
உச்சாடனம்	107	435
உருத்திரகற்பம்	108	310
உன்மத்தின்வயிரவற்றியானம்	102	407
எரிப்புக்குதிட்டம்	21	81
ஏழாம்பிண்டம்	96	403
கந்தகத்தைலம்	41	159
கந்தகபற்பம்	39	154
கபாலவைரவன்வசியம்	101	411
கருங்கோழியண்டம்	49	119
கருவூமத்தின்விவரம்	108	109
கற்பம்	75	31
காரீயச்செந்ணீரம்	44	132
குடோரிவைப்பு	71	281
கெவுரிகட்டு	49	191
சட்டமுனி	42	104
சதுரக்கள்ளிகற்பம்	78	114
சாரமெழுகுமெய்யும்விபரம்	17	65
சாரம்	47	183
சிங்கிச்சுண்ணம்	15	119
சிங்கிவைப்பு	74	297
சூடன்வைப்பு	72	285
தம்பசைசக்காமறைப்புமை	72	401
தம்பனம்	101	408
தலைமுழாத்தைலம்	81	126
தாளகக்கட்டுத்தைலம்	91	241

தாளகச்சிந்தூரம்	16	140
தாளகச்சுண்ணம்	18	190
துருகசுண்ணம்	24	95
துருகவைப்பு	65	259
தேவிச்சக்கரம்	10	17
நாகக்கட்டு	32	121
நாகக்கும்பிசெயநீர்	33	128
நூல்	2	4
நூற்றுருகுப்பு	124	59
பிரசண்டவைரவற்றியானம்	105	433
புருஷருக்குஸ்திரீவசியம்	101	450
பூசைவிதி	42	41
பூமிநாதம்விளைவுநிலவிபரம்	3	9
பூரணலேகியம்	84	119
பூரவைப்பு	99	274
பூநாகச்சத்து	51	212
பெண்ணீடுமாணீடு	110	447
பேதனத்தின்பொ	19	442
மவுனப்பெருமை	83	114
மறைப்புமை	111	460
மறைப்புமைநீக்குமை	13	420
மாரணத்தின்சக்கரம்	101	429
மாரணத்தைலம்	106	401
மாரணத்தைலம்	193	175
முப்பூவின்கருவின்விபரம்	3	8
மூதண்டக்கியாழம்	81	125
மோகினிமந்திரம்	97	195
மோகினிமந்திரம்	109	444
ரசவணிசத்தூட்டும்விபரம்	29	101
ரோரிஷிதெரிசனம்	87	150
லிங்கக்கட்டுமெழுகு	22	81
லிங்கப்போக்கு	23	90
வசிகரத்தின்திலர்தம்	91	193
வசியத்தைலம்	91	368
வசியமை	112	457
வசியவாடை	68	399
வாதத்துக்குவாதியுப்பு	9	32
விந்துதம்பனம்	113	459
வீரமெழு	20	78
வீரவைப்புதிராவகம்	66	262
வெடியுப்புசுண்ணம்	49	180
வைரவர்தியானம்	300	405
வைரவன்பூசை	25	97

உ

சிவமயம்.

உரோமரிஷி நாயனார்

அருளிச்செய்த

வைத்தியம் - ௫00.

காப்பு.

விருத்தம்.

மூலமுதலாதாரமுடிவினின்ற
 மூர்த்தியெனுங்கணேசரதுபாதங்காப்பு
தாலமெலாங்கடந்துநின்றதாயின்பாதஞ்
 சனகாதிநால்வரதுபாதம்போற்றி
காலமெனும்பிறப்பிறப்புங்கடந்துநின்ற
 கருணைதருநந்தீசர்பாதம்போற்றி
ஆலமறையுண்டகண்டர்போற்றி
 ஐஞ்ஞூற்றையானுரைக்கஅம்பாள்காப்பே. 1

அம்பரத்திலாடுகின்றவையர்பாதம்
 அனுதினமுமனதினில்வைத்தருளும்பெற்று
தம்பரத்திலெனையாண்டபுசண்டர்பாதஞ்
 சதாநித்தம்பூசைபண்ணித்தாசனாகி
பம்பரம்போலுலகமெல்லாமாட்டிவைக்கும்
 பராபரத்தின்கிருபையதாற்பாசநீக்குஞ்
செம்பருத்திப்பூவதுபோற்சிவந்துநின்ற
 சின்மயத்தின்பாதமலர்சோதிகாப்பே. 2

சோதியெனுஞ்சுடரொளியாய்நின்றதேவி
 சொற்பெரியநாதர்கள்பாதம்போற்றி
வாதியெனும்பேர்படைத்துநின்றோர்க்கெல்லாம்
 வகைவிவரமாய்த்தெரியவசனித்தேன்யான்

ஆதியெனும்பராபரத்தின்கிருபையாலே
ஐஞ்ஞூற்றின்றிரந்தேர்ந்துவறியவென்றும்
பாதிமதிதரித்தசிவன்பாதம்போற்றி
பராபரத்தினிறைந்துநின்றபாதம்காப்பே. 3

நூல்.

ஆதாரமானதொருமூலத்துள்ளே
அகண்டமகாமேருவெனநின்றமூர்த்தி
பாதாரந்தனைப்பணிந்துவைந்நூற்சொல்வேன்
பரவெளியினின்றதொருபரனைப்போற்றி
காதாரகேட்டுணர்ந்துவென்னையாண்ட
கடாட்சமதுநந்தீசர்கருணையாலே
தாதாரும்ரோமனென்றுபேரும்பெற்று
சாயுச்சியபதவிதனிற்சார்ந்தேன்பாரே. 4

பாரப்பாஞானமுதல்யோகமார்க்கம்
பரிபாஷைகருவகற்றிவாதப்போக்கு
காரப்பாஅட்டமாசித்தியோகம்
கருணைபெறவஞ்சனமும்வசியமாற்றஞ்
சீரப்பாமோடியிலேயனந்தம்பேர்க்கு
திறமானசரக்குவைப்புசெய்பாகங்கள்
ஆரப்பாவெனைப்போலசொன்னாரில்லை
அதனாலேயென்னூலையொளித்தார்பாரே. 5

ஒளித்தாரேசித்தரெல்லாம்பேசிக்கொண்டு
ஓகோகோகுருமுறையைச்சொன்னதாலே
கழித்ததொருவுப்பதனைச்சுன்னமாகக்
காட்டினேன்வழலையென்றகருவையெல்லாம்
விழித்தபொருளுட்கருவைவெளியதாக
விள்ம்பினேனாதாக்கள்மறைப்பையெல்லாம்
அழூத்தியேசாஸ்திரத்தையொளித்துப்போட்டார்
அருட்பெருகுங்கும்பமுனியையர்தானே. 6

தானானவழலையுப்புசுன்னஞ்சொன்னேன்
தண்மையென்றசெந்தூரஞ்சாரநீராம்
ஊனான அடிமுடியின்பொருளையெல்லாம்
உள்ளுணர்ந்து ஆராய்ந்துஉரைத்ததாலே

தேஞானவென்குருவும்புசண்டமூர்த்தி
சேயனெனரோமனெனப்பேருமிட்டு
காணாதபொருளையெல்லாமறைப்புநீக்கி
காட்டுவென்முப்பூவின்கருவைத்தானே. 7

முப்பூவின்கருவின்விபரம்.

கருவென்னவழலையென்றமுப்பூதன்னைக்
காணவென்றாலென்குருவைக்கருத்தில்வைத்து
உருவென்னவாதத்திலண்டபிண்டம்
உண்மையென்றகருவதனையுரைக்கக்கேளு
குருவென்னவென்றால்மனமேயாசான்
கூர்ந்துபார்நிலவுப்புகொடியவேகந்
தருவென்னநாதமென்னபூமிநாதஞ்
சமிசயங்களில்லையடாதாயுமாமே. 8

பூமிநாதம் விளைவின்நிலவிபரம்.

தாயானநாதமதுவிருக்குந்தானஞ்
சாற்றுகிறேன்யானுமதையறிந்தமட்டும்
சேயானமதலையைப்போற்சொன்னேன்யானும்
தீர்க்கமடாவலையதுதீரந்தன்னை
மாயாதேமன்மதனைப்பேதியாதே
மயக்கமதிற்சிக்காதேவாய்விடாதே
ஓயாதேதியானமதைமனத்துள்வைத்து
ஓகோகோவுவர்நிலத்தைப்பார்த்துவாரே. 9

வாரப்பாபூநீறுவிளையுந்தானம்
வரிசைபெறச்சொல்லுகிறேன்மறைப்பைநீக்கி
சேரப்பாவத்தலந்தான்சிவந்துகாணும்
சிவனுமையுமந்திடத்திற்சேர்ந்துவாழ்வார்
காரப்பாவந்திடத்திற்பூமிநாதங்
கதிரதுபோற்பொங்குமடாபருவந்தன்னில்
ஆரப்பாவந்திடத்திற்செல்லும்போது
அதிகமடாசோதியதுவமர்ந்தவாறே 10

அமர்ந்ததுவுமேதெனவேதியானத்தாலே
யல்லாதால்மனிதரங்கேசெல்லப்போமோ
சிவந்தசவம்போற்றிரிந்தசுணக்கணால்
சீறுமடாவந்திடத்திற்செல்லப்போகா

நமன்றனக்கு நமனுகத்தியானஞ்செய்து
நாதாந்தசத்தியதுநாட்டம்விட்டால்
சுமந்தலுத்தமாடது போனின்றுயானுற்
சோதியடாவுன்னிடத்தில்தோணுவாரே. 11

தோணுதுவென்றுசொன்னேனேதனுலே
சுத்தமனதில்லாததோஷத்தாலே
காணுதுவென்றுசொன்னேன்மக்காள்நீங்கள்
கன்னியதுபூசையைநீமறந்ததாலே
கோணுதேயவளுடையபூசைசெய்ய
குடியிருந்துவத்தலத்திற்பார்க்கும்போது
ஆணுதவனுடையசோதிதானும்
அந்திட்டத்திற்போகுமடாவறிந்துபாரே. 12

அறிந்துகொண்டுதம்பனத்தைதியானஞ்செய்து
ஆத்தாளைப்பூசித்துவருளும்பெற்று
சொரிந்தமலர்போனிற்குஞ்சோதிதன்னை
சுருக்காகநீயெடுப்பாய்புட்பம்போல
பரிந்துமிகவெடுத்ததனைப்பீங்கானுள்ளே
பக்குவமாய்வைத்ததனைசொல்லக்கேளு
பிறிந்ததுவும்போகாதுவுன்னைவிட்டு
பூரணியைப்பூசைபண்ணிபுகலக்கேளே. 13

கேள்ப்பா அப்பும்உப்புமொன்றுய்ப்போச்சு
கிருபையிதிற்சொல்லிட்டேன்வழலைமார்க்கம்
தேளப்பாகொட்டுதல்போற்சுன்னமாச்சு
சிவசிவாமுப்பூவின்குருவுமாச்சு
நாளப்பாகளிச்சுன்னமிதுவுமாச்சு
நாதமடாசவர்க்காரக்குருவுமாச்சு
வாளப்பாயிதையெடுத்துவைத்துக்கொண்டு
மைந்தனேசரக்குகளைமாட்டியூதே 14

ஊதவேசரக்குவகைவெந்துநீறு
மொருகோடியிற்பாஷாணங்கட்டிப்போகும்
பாதையிலேயிதைவிட்டாற்பாதையில்லை
பக்குவமாய்ச்சொல்லிவைத்தேனிந்நூலிற்

போர்கையிலேசொல்லிவிட்டேனென்றுசொல்லி
புகழ்முனிவர்தானொளித்தாரிந்தநூலை
பேதையைப்போலவரிடத்திற்றொண்டுபண்ணி
பின்புநான்வாங்கிவந்தேன்பேணிப்பாரே. 15

பேணியேயென்னூலைவெளியில்விட்டால்
பிழைவருமேயுன்குலந்தானீனமாகும்
ஊணியேவெகுகோடிநரகில்வீழ்வாய்
ஓகோகோசாபமதுபடிக்கும்பாரு
ஆணியேமனதில்வைத்துக்காத்தாயானால்
அரனானதுவசமாகியருளுஞ்செய்வார்
பாணியெனுமீஸ்வரியாள்கிருபையுண்டு
பராபரத்தில்வைத்திடுவாள்பாருபாரே. 16

இரவிமதி மூப்பூ விபரம்.

பாரப்பாமூப்பூவின்கருவைச்சொன்னேன்
பருவமதுசொல்லுகிறேனின்னங்கேளு
ஊரப்பாவுவர்மண்ணைவாரியென்ன
உள்ளபடிவாதமதுக்காகாதப்பா
நேரப்பாயின்னமொருகனவைக்கேளு
நிகழ்த்துவேன்பிண்டமதுமூப்பூச்சுன்னஞ்
சேரப்பாபொற்சிலைபோல்பெண்ணைப்பாரு
சென்றவள்தான்கெற்பத்தில்பிண்டமாமே. 17

பிண்டமென்றாலிளங்கொடியாண்முதலாம்பிண்டம்
பெருமைபெறத்தானெடுத்துச்சொல்லக்கேளு
அண்டமெனுமாத்மாவிலஞ்சானபிண்டம்
அப்பனேயதுவவியவிழுந்துதானால்
குண்டமெனும்பீங்கானிலெடுத்துவைத்து
கூர்ந்துபார்பெண்ணாகில்மதியுமாகும்
பிண்டமதிலாணாகில்ரவியுமாச்சு
பெருமார்க்கஞ்சொல்லுகிறேன்பெருமைதானே. 18

காணப்பாபிண்டமதைக்கொண்டுவந்து
கடுகுபொடியாய்நறுக்கிப்பாண்டத்திட்டு
தோணப்பாயிதுக்கடுத்தசெயநீர்தானும்
சொல்லுகிறேனேழையன்யானறிந்தமட்டும்

வேணப்பாவுருப்புப்படிதானைந்து
வெள்ளைகற்சுன்னமதுபடிதான்மூன்று
ஊணப்பாவுப்பதுவும்படிதான்மூன்று
உத்தமனேயிதுமூன்றுமொன்றாய்ச்சேரே. 19

ஒன்றாகவிதுமூன்றும்பாண்டத்திட்டு
உத்தமனேசிறுபெண்ணீர்படியீரெட்டு
நன்றாகக்கூடவிட்டுக்கலக்கிக்கொண்டு
நாலாநாள்தெளிவதனையிறுத்துவாங்கி
பண்டானவடுப்பில்வைத்துதீயைமூட்டு
பருவமுடன்குழம்புபோல்வருதல்கண்டு
ஒன்றானபீங்கானில்வழித்துவாங்கி
விபரமாய்ரவிமுகத்திலுலரவையே 20

உலரவைத்துவுப்பதுதான்பலமீரெட்டு
உத்தமனேசாரவகைசொல்லக்கேளு
அலரவைத்தநவாச்சாரம்வீரம்பூரம்
அப்பனேவெடியுப்புசீனஞ்சூடன்
மலரவைத்தவெள்ளைமுதற்றுருகோரெட்டு
மைந்தனேவகைக்கொன்றுபலமொன்றாக
சலரவைத்துபொடிசெய்துவுரலிலிட்டு
கண்டித்ததலைப்பிண்டங்கலந்துவையே. 21

கலந்துமேகட்டப்பாறையினாற்குத்திக்
கண்ணிலிடுமையதுபோற்கண்டித்தேதான்
மலர்ந்துமேமெழுகதுபோலானபின்பு
மைந்தனேபாண்டத்திலிட்டுமூடி
கலந்துமிகமண்ணறைந்துசீலைசெய்து
நாற்சாணாகுழிவெட்டிப்புதைத்துப்போடு
அலர்ந்துமேநாற்பதுநாட்சென்றபின்பு
அப்பனேயெடுத்துரைப்பார்செயநீராமே. 22

ஆகுமேயந்நீரைப்பீங்கானுள்ளே
அப்பனேவிட்டுநீரவியில்வைத்து
எகுமேயுப்பதுதானென்னசொல்வேன்
என்பிள்ளாய்கன்னமென்றால்கொடியவேகம்

போகுமோரவிபீசமிதுதானப்பா
புகலுவாருவரென்றும்வண்ணுனென்றும்
வேகுமேபட்டவிடமெல்லாந்தீயாய்
வேதாந்தசத்தியென்றுமிதற்குப்பேரே. 23

பேரானஅடியென்றுமூலமென்றும்
பேசாதசாரமென்றுமனந்தானென்றும்
மாருனமாதவிடாய்வழலையென்றும்
மகாபெரியமாலென்றும் யோனியென்றும்
பாருன்பிண்டமென்றுப்புளிதானென்றும்
பருவமுடன்சூரியன்றன்பீசமென்றுஞ்
சாருனசாகாதகால்தானென்றுஞ்
சாற்றுவாரிதனுடையநாமந்தானே. 24

தானுனஈசனுப்புவிபரங்கேளு
சாற்றுகிறேன்முன்போலப்பெண்ணைபார்த்து
தேனுனஅண்டமதுஆண்தானப்பா
சேரவேமுன்போலநொறுக்கியேதான்
ஊனுனவுப்பதுதான்முன்போற்செய்து
உத்தமனேயதுதன்னுல்கனநீராடுங்
கோனுனமுன்போலசரக்கைக்கேளு
குறிப்பாகபூமிபுடம்வைத்திடாயே. 25

வைத்திட்டுமுன்போலச்செயநீர்வாங்கி
மைந்தனேகுடோரியொருபலமும்போட்டு
மெய்த்திட்டமாகவேதான்உப்பாய்ப்போகும்
வேணபடியிதன்பெருமைவிள்ளப்போமோ
கைத்திட்டமானபலனிதற்குநாமங்
கதிரென்றும்ஞானியென்றுங்காரமென்றும்
பொய்த்திட்டுபோகாமற்சொன்னுரையா
போக்கோடேவென்குருவும்புசண்டர்தானே. 26

தானென்றும்அங்கியென்றும்மாதியென்றும்
தான்வெள்ளைச்சுண்ணமென்றும்வீரமென்றும்
ஊனென்றவெடியுப்புவூமையென்றும்
உத்தமனேவேகாததலைதானென்றுங்

கானென்றவாகாசக்கம்பியென்றுங்
வருமென்றும்வஸ்துவென்றுங்காட்டுவார்கள்
பானென்றசமாதியுப்புநிலவுப்பென்றும்
பரிதிமுத்துச்சிப்பியென்றும்பாடினரே. 27

பாடினரவரவர்களனேகம்பேர்கள்
பண்பானசாத்திரங்களனேகங்கோடி
தேடினரென்னுடைவைந்நூர்தன்னை
சிவசிவாகாணுமலொளித்தார்சித்தர்
ஆடினரிதைக்கண்டபெரியோரெல்லாம்
அண்டமுதற்பத்மளவுமனேகமுண்டு
ஓடினர்பொதிகமலைஐயர்தாமும்
ஓகோகோஅவர்கொடுத்துஉரைத்திட்டாரே. 28

உரைத்திட்டமொழிகேட்டுசித்தரெல்லாம்
ஒடுக்கமதில்வைத்திருந்துபார்க்கும்போது
கரைத்திட்டவெல்லாமப்பொருளையெல்லாங்
கண்டுமேசாத்திரங்கள்கட்டினர்கள்
மறைத்திட்டுப்போகாமலின்னமொன்று
மைந்தனேசொல்லுகிறேன்மார்க்கங்கேளு
முறைத்திட்டந்தப்பாமல்முன்போற்பெண்ணை
முயற்சியாய்பார்த்தெடுத்துமுறையைக்கேளே. 29

கேளப்பாஅவளுடையநாதந்தானுங்
செட்டியாமுதற்றரந்தானெடுத்துவந்து
கோளடாவாரமதிலாதிவாரங்
கொண்டுவந்தாலதின்பெருமைகூறுவேன்யான்
ஆளப்பாஆணுமல்லபெண்ணுமல்ல
அப்பனேஅலியுமல்லவறிந்துகொள்ளு
வாளப்பாயிதையெடுத்துஉப்பாய்பண்ண
வகைசொன்னாகத்தீசர்மார்க்கந்தானே. 30

தானென்றநந்தீசர்முறையைக்கேளு
தண்மைபெறவெந்தனுக்குச்சாற்றினர்பார்
கோனென்றவையரவர்சொன்னபோக்கு
கூறுவேன்ஐந்நூற்றில்குறைவராமல்

ஊனென்றநாதமடா பீங்கானுள்ளே
யுத்தமனேகொண்டுவந்துசொல்லக்கேளு
பானென்றரவிபீசம்விராகனென்று
பதமாகப்பொடித்திட்டுச்சொல்லக்கேளே. 31

வாதத்துக்கு ஆதியுப்பு.

கேளடாசூடனதுகலைந்தானென்று
கெட்டியாய்ப்பூரமதுபலந்தானைந்து
வாளடாசீனமதுபலந்தான்மூன்று
மயங்காதேகொச்சியென்றவீரமூன்று
தூளடாசெய்துநீபீங்கானுள்ளே
சுரோணிதத்திற்கலக்கியேசொல்லக்கேளு
பாளடாபோகாமற்சீலைமண்செய்
பக்குவமாய்க்குழிவெட்டிப்புதைப்போடே. 32

போடுநீபட்சமதுகடந்துதானல்
பூரணியைப்பூசைபண்ணியப்பால்வாங்கே
ஆடுநீகோடிவித்தையிந்தநீரில்
அம்மம்மாவாச்சரியமாயினாதம்
ஓடுநீயிந்நீரைரவியில்வைக்க
ஓகோகோவுப்பாகுமுண்மைசொன்னேன்
சூடேநீயிந்தவுப்பைகண்டபோதே
சொரூபமென்றசித்தியெல்லாமிதற்குள்ளாச்சே. 33

ஆச்சப்பாவிப்பூவைமறைத்தார்சித்தர்
அதிகமாமுப்பூவின்சுன்னத்தாதி
போச்சப்பாஇதைவிட்டதோஷத்தாலே
போக்கோடேவாதமுறைபொருளுங்காணார்
நீச்சப்பாநிலையாதகேணியாகுட
நீற்றினத்துக்காதியடாவிந்தவுப்பு
பேச்சப்பாபேசாதமவுனவுப்பை
பேசினதாலென்னூலைமறைத்தார்பாரே. 34

பாரேநீவாதத்துக்காதிசொன்னேன்
பருவமுடன்சேர்க்கும்வகைசொல்லக்கேளு
காரேநீமுன்னுரைத்தரவிமதியின்பீசங்
கருத்துணர்ந்துநீயெடுப்பாய்களஞ்சியாறு

சேரேநீயிம்மூன்றுமொன்றாய்ப்போட்டு
தீர்க்கமாய்க்கல்வத்திலரைக்கக்கேளு
வேறேநீயெண்ணாதேமெலிந்திடாதே
மெய்தளர்ந்துபோகாதே வெண்புழுகுகூட்டே 35

கூட்டவேகளஞ்சியதுமூன்றைப்போட்டு
குளிரவேகல்வத்திலாட்டும்போது
மாட்டவேமையதுபோலாகும்பாரு
மைந்தனேரவிமுகத்தில்வைக்கும்போது
ஆட்டவேபொங்கியதுசுன்னமாகும்
அப்பனேபீங்கானில்பதனம்பண்ணு
வாட்டமென்னவொன்றல்லோமுப்பூச்சுன்னம்
வந்துதடாவிதின்பெருமைவழுத்தப்போமோ. 36

தேவிசக்கரம்.

போமென்றமுப்பூவின்சுன்னந்தன்னைப்
புகழ்பெறவேபீங்கானில்வைத்துமூடி
ஆமென்றயாத்தாளைப்பூச்சுன்னம்
அதிரமென்றசக்கரத்தைசொல்லக்கேளு
வாமென்றமுக்கோணமிட்டுமேலே
வளையமொன்றுவதின்மேலேயிதழ்தானெட்டு
வேமென்றவறுகோணமதின்மேலிட்டு
வீசுவாயதின்மேலெட்டிதழும்போடே. 37

போடவேயதின்மேலேமூன்றுவரைகீறி
புகழ்பெறவேகோட்டையதில்வாகனுலு
ஆடவேமுக்கோணமறுகோணத்தில்
அப்பனேசூலமிட்டுச்சொல்லக்கேளு
நாடவேமுக்கோணவிதழுனுள்ளே
நாதாந்தசத்திகளையெட்டும்போட்டு
சாடவேயறுகோணமிதழெட்டுக்குள்ளே
சதானந்தவயிரவர்களெட்டுஞ்சாற்றே. 38

சாங்றவேயறுகோணமீதினுச்சி
தண்மைபெறவஷ்டதிக்குப்பாலகரைநாட்டு
போற்றவேயிதழ்சந்துநடுமையத்துள்
போட்டிடுவாயட்டசெகந்தன்னைத்தானும்

காத்தருளவேணுமென்றுமுக்கோணத்தில்
கருணைபெறவிதழ்சந்துக்கருவைக்கேளு
ஆற்றவேயந்திடத்திலட்டநாகம்
அப்பனேயிதழெட்டுவரையக்கேளே. 39

கேளடாமுக்கோணநடுமையத்துள்
கிருபைபெறவட்டமிட்டுச்சொல்லக்கேளு
கோளடாவாராமலாயிபீசம்
குறிப்பாகத்தானிடுவாய்கூறுவேன்யான்
பாளடாபோகாது அகாரந்தன்னை
பார்க்கவேயதினடுவிலிருத்திப்போது
கேளடாவதின்சுழியின்மேலேதானுங்
கீர்த்திபெறப்பேதனமுங்கிறிடாயே. 40

சீறியேயகாரமுடிதன்னிலேதான்
கிலீயுமென்றுபோட்டுவிடுயேகபீசம்
ஆறவேயப்பீசமுச்சிமீதில்
அப்பனேயஃகெனவுஞ்சுழித்துப்போடு
தேறவே ஆயினதுபீசமாச்சு
சிவசிவாயிதின்பெருமைசெப்பார்செப்பார்
மாறவேயகாரவடிபீசந்தானும்
மைந்தனேயிம்மென்றுவைத்திடாயே. 41

வைத்திட்டமுக்கோணமுச்சிமீதில்
மைந்தனேஸ்திரீயென்றுவைத்துப்பின்னுங்
கைத்திட்டமாகத்தானிருமூலைக்குங்
சுணக்காய்-ஸ்ரீம்-ஐம்-மென்றுகட்டுவாய்நீ
மெய்த்திட்டயானதொருவறுகோணத்தில்
வேதாந்தவட்சரத்தைவிளம்பக்கேளு
பொய்த்திட்டுப்போகாது-ஐ-ம்-ந-ம்-கூம்
புகழுள்ள-ரம்-ஹாம்-மென்றுபோடே. 42

போடவேமுச்கோணவிதழெட்டுக்குள்
போடுகிறவட்சரத்தைப்புகலக்கேளு
ஆடவே-சூ-ஆ-ஓ-உ-வென்றுபோட்டு
அப்பனே-க-ளு-ய-ஐ யென்றுதானே

கூடவேணுமென்றால்வேல்வட்டத்துள்
கூறுவேனிம்மென்றுமெட்டுப்போட்டு
நாடவேயிதழ்நுனியினுச்சிமீதில்
நாட்டுகின்றவட்சரத்தைநான்சொல்வேனே. 43

சொல்லுவேன்-சூம்-கூம்-றீம்-நும்-மென்றுதானே
சொற்பெரிய-தம்-வம்-யம்-பிம்-மென்றுபோடு
வெல்லுவேனென்றுவனம்பதறிடாமல்
விதித்துப்பாரிதழ்சந்திநட்சரங்கடன்னை
சொல்லுவேன்-கூம்-றீம்-தாம்-வாம்-வம்மென்று
சுருதியாம்-யம்-லம்-பிம்-மென்றுகட்டி
கொல்லுவேனென்றாலும்கொல்லப்போமோ
கூத்துவன்றனுக்கினையுங்குலைந்துபோமே. 44

போகுமோவாசலதிற்கிழக்குத்தொட்டு
பூட்டுகிறவட்சரத்தைபுகலக்கேளு
ஆகுமே-ஸ்ரீம்-ரம்-மீம்-ஷம்-மென்றுதானே
அருள்பெருக-வம்-யம்-லேம்-ஹரீம்மென்றிட்டு
தாகுமேயாபானதேவதைகடன்னை
சக்கிரத்திலேவிதித்துதாக்கும்போது
வேகுமேயண்டமெல்லாஞ் சாபமிட்டால்
வேதாந்தபூரணியைப்பூசித்தோர்க்கே. 45

பூ சை வி தி.

பூசிக்கவேணுமென்றார் சொர்னமீதில்
போக்சோடேயட்சரங்கள்புகழாய்க்கீறி
ஆசிக்கவேணுமென்றாலாத்தாடன்னை
அப்பனேபூசைசெய்யும்வகையைக்கேளு
வாசிக்குமைந்தர்களேபூமிதன்னில்
வளமாகத்தான்மெழுகிநெல்லுமிட்டி
நேசிக்கும்வாழையிலையதன்மேற்போட்டு
நேர்ப்பாகப்பச்சரிசிநிரம்பக்கொட்டே. 46

கொட்டவேயதின்மேல்வெள்ளிலைபரப்பிக்
கூடுநடுமையஞ்சக்கரத்தைவைத்து
ஒட்டவேயதின்பேரில்தாமரையின்பூவை
ஒகோகோசாத்திவிடுவுறுதியாக

முட்டவேகும்பமதிற்சலத்தைதமோர்ந்து
முப்புரிநூல்தனைச்சுற்றிமாவிலையுஞ்சாத்தி
கட்டவேவஸ்திரமுந்தேங்காய்வைத்து
கருணைதரவேணுமென்றுமஞ்சள்சாத்தே. 47

சாத்தவேயக்ஷரத்தையதின்மேலோட்டி
தன்மைபெறச்சுகந்தமதைநிறையச்சாத்தி
காத்தருளவேணுமென்றேதர்ப்பைதன்னை
கட்டியேமுக்கோணம்போலச்சாத்தி
சேர்த்தருளவேணுமென்றேயுன்னிடத்தில்
திரிபுரைக்குப்பாற்பழங்கள்பலகாரங்கள்
பாத்தருளவேணுமென்றுதேவிமுன்பு
பரிவாகவாமம்வைத்துப்பூஜைபண்ணே. 48

பண்ணவேதேங்காயையுடைத்துவைத்து
பரபானமத்தனையும்படைத்துமீந்த
துண்ணவேமுப்பூவின்சுன்னந்தன்னை
யுறுதிபெறவவளுடையமடியில்வைத்து
கண்ணவேபரிமளங்கள்கஸ்த்தூரிவகைகள்
கருணைபெறத்தான்சாத்திசொல்லக்கேளு
ஒண்ணவேஎன்தாய்க்குதூபதீப
மென்பதுதானுங்கொடுத்துசொல்லக்கேளே. 49

கேளடாமேளவாத்தியத்தினாலுன்
கிருபைதரவேணுமென்றுதியானஞ்செய்து
கோளடாவாராமலாத்தாள்பீசங்
கூறுவேன்ஐயுங்கிலியுஞ்சவ்வுமென்று
வாளடாசவ்வுங்கிலியும்ஐயுமென்றுவாக்கு
வரபரமேஸ்பரிவருகவருகவென்று
பாளடாபோகாதுதியானஞ்செய்நீ
பரிவாகவாயிரத்தொண்ணூருத்தான்போடே. 50

போடவேயென்தாயாரமிராமிதானும்
பொங்கியேயானந்தம்பொழிவாள்பாரு
ஆடவேயவளுடைகூத்தையெல்லாம்
அறைகிறேனானுமதையறிந்தமட்டும்

கூடவேயென்னிடத்திற்குடியாய்வாழும்
கூற்றுவனுற்றமைப்பணிந்தகொடுமையாலுந்
தேடவேயுன்னைப்போலெங்களுக்கு
தெய்வமதுவேறுண்டோதேவியென்னே. 51

எண்ணவேயென்தாயாரிருந்தவீடு
யேழைமதிபோகாதாளென்னைப்பெற்றாள்
உண்ணவேநவகோணந்தன்னில்வாழும்
ஒகோகோவவளுடையரூபந்தன்னை
நண்ணவேயென்னாலேசொல்லப்போமோ
நாதாந்தரூபியவள்நாட்டந்தன்னை
சொன்னவரும்புத்தியிலேயதிகமப்பா
சொற்பெறியாள்வாமியவள்ரூபந்தானே. 52

தானென்றபுத்தியிலேயிவளைப்போலே
சமர்த்தியடாஐவரையுமாண்டதேவி
ஊனென்றஉலகமதிற்குடியாய்வாழ்ந்த
வுத்தமியாளம்பரத்திலாடுஞ்சோதி
பானென்றமதிதனையும்பிறையாய்ச்சூடி
பாதாளச்சக்கரமும்படைத்தரூபி
நானென்றமதியமுதமீந்தாள்பாரு
நாதாந்தபிரணவத்தின்நாட்டந்தானே. 53

தானென்றவவள்பதத்தில்மனதைவைத்து
சதாசித்தம்பூசைபண்ணித்தாசனுகி
வானென்றமவுனவெளிஞானந்தன்னை
வசனித்தாளெந்தனுக்குமாயரூபி
கோனொன்றும்வாராமலென்னையாண்ட
கொடுஞ்சூரிநிட்டூரிகொடியகாமி
பாழொன்றுமாகாதுவிவளைக்கண்டார்
பரனுனதுவசமாவார்பாருபாரே. 54

பாரேநீயவளுடையதொழிலைக்கேளு
பருவமுடனேவரையும்பலகையாக்கி
நேரேநீமதிகம்பங்கால்கனுட்டு
நெட்டுவேளைசதாசிவத்தையதிலேபோட்டு

பாரேநீரவிமதியுப்பதுகாய்ப்போட்டு
பன்னிரண்டுராசியையும்வடமாய்க்கோர்த்து
சேரேநீசேடனைத்தான்மெத்தையாக்கி
செழுஞானவுஞ்சலிலே சென்றாள்பாரே. 55

பாரப்பாவுஞ்சலிலேயிருந்துகொண்டு
பரமசிவனுடிவரப்பார்த்தாள்பாரு
காரப்பாவவராமொட்டைப்பார்த்து
கருத்துடனேதானழைத்துமடியில்வைத்தாள்
பேரப்பாவண்டமெல்லாமிவளேயாண்டாள்
பேதையடாவிளங்கண்ணிபெதும்பையாகு
கூறடாவென்றாலுங்கூறப்போமே
கொடியிடையாள்சத்தியதுகோலந்தானே. 56

கோலமெல்லாமிவளுடையகோலமல்லால்
கொண்டவனையம்பலத்திலாடச்சொன்னாள்
ஜாலமெல்லாமென்தாயார்ஜாலமல்லால்
தானுமதுவேறுண்டோசாகரங்கடன்னிற்
பாலமெல்லாங்கடந்துவெளியம்பரத்திநின்ற
பரஞ்சுடரேநிற்குணமேபண்புள்ளானே
காலமெனும்பிறப்பிறப்புங்கடந்துநின்ற
காரணியேநாரணியேகனியேயென்னே. 57

எண்ணவேயுன்னையுந்தான்பூசைபண்ண
வீசனுல்முடியாதுவெவராற்கூடும்
மண்ணெனவும்விருஷமுதற்சாகரங்களெல்லா
வானெனவுமக்கினியின்மயமுமாகி
கண்ணெனவுமொளியாகிமமுதமாகிக்
கரமகளேரூபமுமாய்க்கருத்துமாகி
பெண்ணெனவுநின்றதொருவென்தாயாகி
பேரிளம்பெண்ரூபமுமாய்ப்பெற்றாள்பாரே. 58

பாரப்பாவிவளைப்போலெவர்களுக்கும்
பாருலகிற்கிடையாதுபார்ப்போர்க்கேழை
சேரப்பாவிவளைநான்காணும்போது
சிறுபிள்ளையைந்துவயதுள்ளதேவி

ஆரப்பரவாத்தாளையிப்போகண்டால்
அதிலேயுந்தான்சிறுபிள்ளையாவாளப்பா
காரப்பாவிவளுடையபாதந்தன்னை
காணுமலென்ளுங்கலங்கினரே. 59

கலங்கையிலேபீரணியும்-ஆ-ஊ-வென்று
காட்டினுள்சத்தவொலிநாதந்தன்னை
மலங்கியேமவுனத்திலிருந்துகொண்டு
மாசற்றசோதிதனைமனதில்வைத்து
கலங்கியெனுமெட்டெழுத்தின்முடிவினின்ற
சச்சிதானந்தகுவள்ளத்தாயார்தன்னை
குனுங்கியதோராட்டமெல்லாந்தேடிப்பார்த்து
கூகூவென்றவருமுறையிட்டாரே. 60

முறையிட்டசத்தமதைக்கேட்டபோது
முக்குணத்திமுன்பின்னுய்முழித்துப்பார்த்து
சறையிட்டவானந்தவெள்ளம்பொங்கி
கருணைதந்தோமெனவழைத்தாள்கையினுலே
பறையிட்டவாத்தாளைத்தொழுதுபோற்றி
பாதமதிற்பணிந்தார்களைவர்தாமுங்
குறையிட்டகுறைகளெல்லாந்தான்றவிர்த்துக்
கூப்பிட்டுவமுதமதைக்கொடுத்தாள்பாரே. 61

கொடுக்கையிலேதான்வாங்கியமுதமுண்டு
குறிப்பாகவவள்மதத்தைமனதில்வைத்து
அடுக்கவேயாதாரவெளியிற்சொக்கி
ஆத்தாளுமையருமாயறிவாரென்று
நடுக்கவேமனதுதான்பேதியாமல்
நான்சொன்னபடியேநீபூசைசெய்வீர்
கொடுக்கவேவேணுமென்றுஆத்தாள்தானுங்
கூப்பிட்டுமுப்பூவைக்கொடுப்பாள்பாரே. 62

பாரேநீயவள்பதத்தைப்பூசைபண்ணி
பன்னீருஞ்சந்தனமுங்கலந்துகொண்டு
வாரேநீகும்பத்திற்சொரிந்துபின்னும்
வண்மையுடனேமத்தியாகுதிசையைச்செய்து

சேரேநீவில்வத்தாலர்ச்சனையுஞ்செய்து
சித்திக்கவேணுமென்றுதீபங்காட்டு
வேறேநீமனமொன்றிற்பாய்ந்திடாமல்
வேதாந்தசத்தியைநீபூசைபண்ணே. 63

பூசைசெய்துமுப்பூவின்சுன்னந்தன்னை
புகழ்பெறவெயொடுக்கமதிலடக்கஞ்செய்து
ஆசைகொண்டப்பாத்திரங்கள்வழக்கமாகி
ஆத்தாளைப்பூசைசெய்துவருளைப்பெற்று
பாஷையெனும்பரிபாஷைகருக்களெல்லாம்
பாடுவேன்தனித்தனியேசரக்குவேதை
பேசையிலேயிக்கருவைச்சொன்னயானால
பிளந்தெறியுமுன்சிரசும்பேணிப்பாரே. 64

சாரமெழுகுசெய்யும்விபரம்,

பாரப்பாமுப்பூவின்சுன்னந்தன்னைப்
பணம்போலத்தானெடுத்துச்சொல்லக்கேளு
ஆரப்பாசாரமதுபலந்தானென்று
அப்பனேவாய்நீராலரைத்துக்கொண்டு
காரப்பாவத்திப்பால்கவசங்கட்டி
கைமுறையாய்த்தீவாட்டமெழுகாய்ப்போகுஞ்
சேரப்பாசொர்னமென்றரேக்குதன்னைச்
சென்றதின்மேற்சுத்திநீதிரும்பிவாட்டே. 65

சாரம் நவாச்சாரம் சொர்னம் தங்கரேக்கு.

வாட்டையிலேமெழுகதுவாம்ரேக்குதன்னை
மிருவிநன்றாயுட்கொண்டுவாங்கும்பாரு
ஓட்டையிலேரேக்கதனைப்பலமரையேதின்றால்
உறுதிபெற்றமெழுகதனையுரைக்கக்கேளு
ஆட்டையிலேயாத்தாளைப்பூசைபண்ணி
அப்பனேமதிதனிலே நூற்றுக்கொன்று
நாட்டையிலேயேழரையுமாகுமாகும்
நந்தீசர்சொன்னபடிநாம்சொன்னோமே. 6

சொன்னதொருசாரமதுவின்னங்கேளு
சூட்டுவேன்முப்பூவைவிராகனென்று
எண்ணமுள்ளசாரமதுபலந்தானென்று
யெடுத்துநீயண்டமென்றவென்கருவினாலே

முன்னமுள்ளகுருவதனையாட்டிக்கொண்டு
முழுதுமதைக்கவசமிட்டுரவியில்வைத்து
அன்னமெனுமூன்றெருவிற்புடத்தைப்போடு
அப்பனேநீயறிபதுசுன்னமாமே. 67

ஆமென்றசாரமதையெடுத்துக்கொண்டு
அதிற்பச்சைசாரமதுமூன்றுபங்கு
போமென்றவெள்ளருக்கண்பாலாலாட்டி
புகழ்பெறவேபீங்கானில்வழித்துவப்பி
நாமென்றபனியில்வைக்கச்சயநீராகும்
நயம்பெறவேகுப்பிதனிலடைத்துக்கொண்டு
தாமென்றசாரமதுபலந்தானொன்று
தாக்கடாதீயைவைத்துசுருக்குத்தானே. 68

தானென்றசாரமதுகருக்குபோட
தட்டுண்டுசுட்டமடாசாரந்தானுந்
தேனென்றசாரமதுசெவந்துகாணுஞ்
சிவசிவாசெந்தூரமென்சொல்வேன்
ஊனென்றசாரமதுகல்வத்திட்டு
உத்தமனேதாளகமுங்கொதிகூட்டி
பானென்றகெவுரியதுரேக்கைத்தானும்
பலமதுதான்காலாகப்பார்த்திடாயே. 69

பார்த்துநீகல்வமதிலிட்டுக்கொண்டு
பகரவேமுன்செயநீர் தன்னாலாட்டி
சேர்த்துமேசாரமதைத்தானரைத்துத்
திரும்பவதைவழித்துநீவட்டுபண்ணிக்
காத்துமேலாடாமல்ரவியில்வைத்துக்
காய்ந்தபின்புகாடையெருபுடத்திற்போடு
ஆத்துமேசெந்தூரமென்னசொல்வேன்
அரஹராவாதமிதிலைமந்தவாறே. 70

வாறானசெந்தூரந்தனையெடுத்து
மைந்தனேயாத்தாளைப்பூசைசெய்து
ஆறானசெம்பதனில்நூற்றுக்கொன்று
அணைந்திடவேமாற்றுமாறரையுங்காணும்

கூ.றீனவெள்ளியிலைம்பத்துக்கொன்று
கொடுத்திடவேபத்தரையுங்குறையாதப்பா
சிரானசெந்தூரங்குன்றியுண்ணு
திரேகமதுவலுத்துவிடுந்திறஞ்சொன்னேமே. 71

சொன்னதொருசெயநீரிலின்னங்கேளு
சூடனதிற்பலமொன்றுசுருக்குப்போடு
கண்ணவேகரைந்ததுவுஞ்சுன்னமாகும்
காட்டாதேயொருவரிடங்கடக்கவைத்து
எண்ணமுள்ளவெடியுப்புநாலாங்காச்சல்
எடுத்துநீபலமதிலேசுருக்குத்தாக்க
கொன்றுதான்போடுமடாவெடியுப்பைத்தான்
கொடியதொருசுண்ணம்புகூட்டந்தானே. 72

கூட்டமென்னவீரமதிற்பலந்தானென்று
குழைத்துநீபூசிடுவாய்முப்பூச்சுண்ணம்
நாட்டமென்றசெயநீராலரைத்துப்பூசி
ரவிமுகத்தில்மூன்றுநாள்காய்ந்தபின்பு
வாட்டமில்லாசெயநீரால்சுருக்குப்போடு
மைந்தனேசாமமதுபோட்டாயானால்
காட்டமென்றசுன்னமதையென்னசொல்வேன்
கரையடங்கா வேதையடாகண்டுபாரே. 73

கண்டுமேசுன்னமதுமூன்றுமாச்சு
கதிரென்றும்மதியென்றுங்கனல்தானென்றும்
பண்டுமேயுரைத்தவொருயிதுதானப்பா
பாடினாரவரவர்களனத்தம்பேரைத்
தொண்டுபண்ணித்திரிந்தாலுஞ்சொல்லார்சொல்லார்
சூட்சமடாயிதின்பெருமைசொல்லப்போமோ
மண்டுமேயண்டமதிற்றீயாமமங்கும்
மயங்குமேசராசரங்கள்மருவிப்பாரே. 74

மருவியதோர்சுன்னமென்றசுன்னந்தன்னை
மைந்தனேவகைவகைக்குக்கழஞ்சிவாங்கி
அருவியெனுஞ்செயநீரிற்கலக்கிக்கொண்டு
அப்பனேமுப்பூவில்விராகன்போடு

வெருவியேரவிமுகத்தில்முகூர்த்தம்வைத்தால்
வெகுண்டெழுந்துபோகுமடாசெயநீர்தானும்
சுருதியெனுமிதின்பெருமைசொல்லப்போமோ
சூட்டுவோம்பனியில்வைத்துசெயநீர்வாங்கே. 75

வாங்கியேகுப்பிதனிலடைத்துக்கொண்டு
வாய்பலப்பக்கல்லதனல்மூடிப்போடு
தாங்கியேபலமொன்றுவீரந்தன்னை
தனிசெயநீர்தனித்துவைத்துவாட்டுவாட்டு
பாங்கியெனும்வீரமதுமெழுகாய்ப்போகும்
பராபரைக்குமுதல்நாதம்பாருபாரு
தூங்கியேதிரியாதேரேக்கைச்சுத்தி
துப்புறவாய்நெருப்பூதிவாட்டுவாட்டே. 76

வரட்டையிலேரேக்கதனைச்சுழற்றிவாங்கு
மைந்தனேகாற்பலந்தான்செலுத்திப்போடு
ஊட்டையிலேரேகித்துமெழுகாய்ப்போகும்
உத்தமனேயிதன்பெருமையுரைக்கக்கேளு
நாட்டையிலேவெள்ளிதனில்நூற்றுக்கொன்று
நாட்டிடவேமாற்றதுவும்நாலேந்தாகும்
தேட்டையிலேயிதனைவிடத்தேட்டுமுண்டோ
சிவசிவாயிதன்பெருமைசெப்பொணாதே. 77

வீரமெழுகு.

ஒண்ணானவீரமதையின்னங்கேளு
ஒகோகோபலமதுதானெடுத்துக்கொண்டு
கண்ணானசெயநீரிற்றேய்த்துநீயுங்
கடுரவியிற்போட்டுவிடுதினந்தான்மூன்று
பணணானகெந்தகமும்பலந்தான்ரெண்டு
பற்றிநின்ற*விடந்தீஞ்சான்பலமிரண்டு
குண்ணாதேதானரைக்குகைபோற்பண்ணி
கொடியதொருவீரமதைவைத்திடாயே 78

வைத்துமேசீலமண்ணுயேழுஞ்செய்து
மைந்தனேயெருவைந்திற்புடத்தைப்போடு
பொய்த்துமேபோகாதுகட்டிப்போகும்
போக்கோடேயிதையெடுத்துச்சொல்லக்கேளு

---

* விடந்தீஞ்சான் - கொல்லேப்பல்லி.

ஐந்துமேபோகாதுகல்வத்திட்டு
அப்பனேதாளகமுஞ்சிலையுங்கெஞ்சி
செத்துமேகவுரியைத்தான்கூடப்போட்டு
சேர்சூததங்கமென்றேர்க்குபோடே 79

போடவேவெடியுப்புநரகந்தானும்
போட்டிடுவாய்களஞ்சியன் அரைதான்வீதம்
நாடவேயிதுவெல்லாமொன்றாய்ச்சேர்த்து
நாட்டுவாய்கல்வமதிலரைக்கக்கேளு
ஆடவேமுருக்கம்பூச்சாற்றினாலே
அப்பனேநாற்சாமமரைத்திட்டேதான்
சாடவேரவிமுகத்திலுலரவைத்து
தன்மைபெறக்காசியென்றமேருக்கேற்றே. 80

எரிப்புக்குத்திட்டம்.

ஏற்றிலேவாலுலகையிற்றுளிவைத்து
இதமாகப்பொடிமணலைக்கொட்டுகொட்டு
ஆற்றியேநான்குவிரலாழங்கொட்டி
அப்பனேயதின்மேலேகுப்பிவைத்து
நாற்றிசைமணலிட்டும்பந்தனஞ்செய்து
நடுமூக்குயிருவிரல்தான்தெரியவிட்டு
காற்றசையாவிடந்தனிலேயடுப்பையிட்டு
கருவெல்லாம்விரகதனாற்றீபைமூட்டே. 81

மூட்டியேதீபம்போலெரிநேர்ப்பாக
முதற்சாமம்தான்கடந்துவிரண்டாஞ்சாமம்
ஆட்டியேபிருவிறதுகமலம்போலே
அப்பனேசாமமதுகடந்துதானால்
சூட்டியேநால்விறகுயிருசாமந்தான்
தோணவேதானெரித்துசொல்லக்கேளு
மாட்டியேராக்காலமாறப்போடு
மைந்தனேபனிரெண்டுசாமந்தானே 82

தானென்றவெரிப்புக்குவிறகைக்கேளு
தன்னுடையதட்டைவிரற்பிரமாணந்தான்
வானென்றவிறகுக்குநீளங்கேளு
மைந்தனேநாற்சாணுமட்டமாக்கி

ஊனென்றவெரியுப்புதிட்டஞ்சொன்னோம்
ஒகோகோசெந்தூரத்துண்மைகேளு
மானென்றகுப்பியைத்தானன்கானாலில்
மைந்தனேயெடுத்துவரவைத்திடாயே. 83

எடுத்துமேயாத்தாளைபூசைபண்ணி
யேகாந்தவைரவனைத்தியானஞ்செய்து
தொடுத்ததொருதொழில்களெல்லாஞ்சித்தியாக
தோணவேவேணுமென்றுதொழுதுபோற்றி
அடுத்திருந்துவெனைகாக்கவேணுமென்று
அர்ச்சித்துகுப்பியைத்தானுடைக்கும்போது
புடத்திருந்தகுப்பியைத்தானுடைக்கும்போது
பூரணமாஞ்செந்தூரம்புகலக்கேளே. 84

கேளப்பாசெந்தூரமருணன்போலாங்
கிருபைபெறதானெடுத்துவைத்துக்கொண்டு
கேளப்பாவாராமற்குன்றியுண்ணு
கொடுஞ்சுறுக்குகாயசித்திகூறப்போமோ
வேளப்பாயிதையெடுத்துவைத்துக்கொண்டு
வெள்ளிதனக்காயிரத்துக்கொன்றுபோடு
சூளப்பாமாற்றதுவுமிருபதாகுஞ்
சொல்லுவேனிதன்பெருமையின்னந்தானே. 85

லிங்கக்கட்டுமெழுகு.

தானென்றசெம்பினிலேநூற்றுக்கொன்று
தான்கொடுக்கமாற்றென்னவிருபதாகும்.
வானென்றநதலோகவினங்களெல்லாம்
மாட்டிடவேயேழுறையுங்குறையாதப்பா
கோனென்றவிடைக்காட்டாரிந்தகற்பங்
கொண்டல்லோகோடியுகம்வாதம்பார்த்தார்
தேனென்றமொழியாள்தானெனக்குச்சொல்லி
செப்பினேன்கமலமுனிதனக்குத்தானே. 86

நானென்றலிங்கமதுகம்பியாக
நன்றாகத்தெரிந்தெடுத்துபலமதொன்று
தானென்றசெயநீரால்சுறுக்குப்போடு
தயவாகசாமமதுபோட்டாயனல்

வானென்றலிங்கமதுகட்டிப்போகும்
மைந்தனே*குருக்குவிரைதைலம்வாங்கி
ஊனென்றலிங்கத்திற்சுருக்குபோட
ஓகோகோமெழுகாகுமுண்மைதானே. 87

உண்மையுடமெழுகதனையெடுத்துக்கொண்டு
ஒருகழஞ்சிரேக்கதனையெடுத்துக்கொண்டு
நன்மையென்றரவிமுகத்தில்வைத்தாயானால்
நாள்மூன்றில்நின்றுவிடும்ரேக்குதன்னை
வண்மையெனவிதையெடுத்து*மதியிற்றுருக்கு
மைந்தனேநாரதனுக்கொன்றுதானும்
தண்மையென்றதங்கமதுவென்னசொல்வேன்
சரிமாற்றுபத்தரையுந்தப்பாவாறே. 88

வாறுகேளிம்மெழுகைக்குன்றியுண்ணு
மைந்தனேகோடிவகையிறுத்தும்பாறு
ஆறுமேயிம்மெழுகைச்சொன்னாரில்லை
அரனெனக்குசொன்னவித்தையுனக்குசொன்னேன்
சேருமேவித்தையதுவாலம்போலச்
செல்விழிகளருணனைப்போற்சிவந்துகாணும்
பாருமேமெழுகினதுதீரந்தன்னைப்
பாடிவிட்டேனென்னூறறிவின்னங்கேளே. 89

லிங்கப்போக்கு.

இன்னமுந்தான்சொல்லுகிறேன்லிங்கப்போக்கு
யென்குருவாம்புசுண்டரதுகிருபையாலே
சொன்னதொருலிங்கமதுபலந்தானென்று
சூட்டுவேன்முன்போலக்கட்டிக்கொண்டு
தண்ணவேகர்தகமுங்கெரிவுதுத்தம்
தாளகமும்பிமிளையுடன்சூதந்தானும்
பண்ணவேதங்கமென்றரேக்கைதானும்
பலமரைதான்வீதமடாசேர்த்திடாயே. 90

சேர்த்திட்டுக்கல்வத்திற்பொடியாய்ப்பண்ணி
செந்துருக்கம்பூச்சாற்றைதிரளாய்வார்த்து
கைத்திட்டமாகவொருநான்குசாமம்
கடுகவரைமறுநாளிற்சொல்லக்கேளு

---

* குருக்குவிரை-பிரமத்தண்டுவிரை.
* மதியில்-வெள்ளியில்.

வைத்திட்டசெயநீரால்ஜாமநான்கு
வரிசைபெறத்தானரைத்துச்சொல்லக்கேளு
பொய்த்திட்டுப்போகாமற்ருலரவைத்துப்
பொடிபண்ணிகாசியுடமேரும்போதே. 91

எத்தவேமுன்போலத்தாளிக்குள்ளே
என்மகனேமணலிட்டுக்குப்பிவைத்து
ஆத்தவேமுன்போலத்தீயைமூட்டு
அப்பனேபனிரெண்டுசாமமானல்
மாத்தவேதீயதனைநிறுத்திப்போடு
மறுநாளிற்குப்பியைநீவெளியில்வாங்கே
காத்தருளவேணுமென்றுதேவிமுன்னே
கடுகமென்றசெந்தூரம்வைத்திடாயே. 92

வைக்கவேதேவியதுசக்கிரத்தின்முன்
வாமம்வைத்துப்பூசைபண்ணிமனதுகூர்ந்து
மெய்க்கவேரிஷிசித்தர்முனிவர்க்கெல்லாம்
வேதாந்தபூரணியைதியானஞ்செய்து
தைக்கவேசொர்னமென்றசிமிழிளில்வைத்து
தானெடுப்பாய்செந்தூரம்விராகனென்று
கைக்கவேசெம்பதனைச்சுத்திசெய்து
கனகமதையைந்நூற்றுக்கொன்றுபோடே. 93

போடவேமாற்றதுவும்பதின்மூன்ருகும்
போக்கோடேவெள்ளுபிலாயிரத்துக்கொன்று
நாடவேமாற்றதுவுமிருபதாகும்
நாதாந்தசத்தியவணுட்டத்தாலே
சாடவேலிங்கமென்றசெந்தூரத்தைச்
சொல்லவேகுன்றநீயுண்டானல்
வாடவேவேண்டாங்காண்காயசித்தி
மைந்தனேகெவுனசித்தியாகுந்தானே. 94

துருசுச்சுன்னம்.

தானென்றதுருசினதுசுன்னங்கேளு
சமுசயங்களெண்ணுதேதாயைப்பூசி
வானென்றதுருசமதுபலந்தானென்று
மைந்தனேகொண்டுவந்துசொல்லக்கேளு

*பானென்றஜெயநீரிற்றேய்த்துத்தோய்த்து
பத்துநாளிரவிதனிற்போட்டாயானல்
கானென்றசுண்ணமதையென்னசொல்வோம்
கடுரவியில்வைத்தவுடன்சுண்ணமாமே. 95

*பானென்றது-சூரியன் நெருப்புத்திராவகம்.

சுண்ணமென்றதுருசிபைத்தானெடுத்துக்கொண்டு
சொல்லுவேன்கல்வத்திற்கொட்டியாட்டி
முன்னமென்றகருவதனிற்காசுபோடு
மூர்க்கமென்றசெயநீரைவிட்டேயாட்டு
வண்ணமென்னகாரமதையென்னசொல்வேன்
மைந்தனேபட்டவிடம்வெந்துபோகும்
கண்ணவேயிச்சுண்ணந்தனையெடுத்து
காளகண்டவயிரவனைப்பூசைபண்ணே. 96

வைரவன்பூசை.

பூசையிலேவைரவன்பூசையைக்கேள்
புகழ்பெரியநாதாக்கள்சொல்லார்சொல்லார்
ஆசைகொண்டுபூசையதுசெய்யவென்றல்
அப்பனேயென்கோணமிட்டுத்தீரு
பாஷைதனிற்கோடியுண்டிலக்கோயில்லே
பாடினதோர்சக்கரங்களனேகமுண்டு
பேசையிலேயித்தொழிலைப்பேசுவாரோ
பிரலாபஞ்சொர்னமென்றப்பீசந்தானே. 97

* பீசம்-அக்ஷரம்.

தானேதான்சொர்ன்னமென்றவயிரவத்தியானஞ்
சாற்றுகிறேனட்சரங்கள்சரிநின்றட
வானேதான்சொலித்ததுபோல்வாதவித்தை
வகையானவஷ்டகர்மசித்தியெல்லாஞ்
சேனேதானனேகமுண்டுகர்மவித்தை
செய்வதற்குச்சொர்னவயிரவனைப்பூசி
நாளேநீயென்றுசொல்லென்கோணத்துள்ளே
நாட்டுவாய்சக்கரத்தைநாட்டுவாயே. 98

நாட்டுவாய்நடுமையம்ஹிபுமென்றுபோடு
நலமானகீழ்த்திசையில்யமமென்றுபோடு
ஊட்டுவாயக்கினியின்மூலை தன்னி
லுத்தமனே இம்மென்றுவதிலேபோடு
நாட்டுவாய்தென்றிசையிலம்மென்றுபோடு
கருவானமூலை பிலேவம்மென்றுபோடு
சூட்டுவாய்மேற்றிசையிலிம்மென்றுபோடு
சொற்பெரியகுபேரனிலேஉம்மென்றுபோடே. 99

போடவேவடதிசையில்ஸ்தம்மென்றுபோடு
போக்கோட்டமூலையிலேகூம்உம்மென்றுபோடு
நாடவேயதின்மேலேரண்டுவறையிட்டு
நன்மைபெறவாசல்களும்நான்குவிட்டு
கூடவேணுமென்றுசக்கரந்தான்
குறிப்புடனேதங்கமென்றதகட்டிற்கீறி
ஆடவேவேணுமென்றுதொழில்கட்பூட்டி
அர்ச்சனைக்குவிபரமதையறிகிறேனே. 100

அறைகிறேன்மந்திரம்ஓம்சொர்னவயிரவா
அப்பனேயிப்படிநீதியானஞ்செய்ய
பறையுறேனுயிரத்தெட்டுருத்தான்போடு
பகிரண்டவயிரமுஞ்சித்தியாகும்
அரைகிறேனென்றுசொன்னேன்மந்திரத்தோடு
அப்பனேயட்டசித்துவஞ்சனமுமப்பா
கறைகின்றவுப்புமுதல்வாதப்போக்குங்
கைகண்டசித்தியடாகண்டுபாரே. 101

கண்டுமேசக்கரத்தைமுன்னேவைத்து
கடினமாய்கியானத்தைசெய்துக்கொண்டு
கண்டுமேசொன்னபடிசெய்தாயானல்
பாதங்கள்சொல்லுகிறேனின்னங்கேளு
கண்டுமேவாமமொடுசுத்திவைத்து
கனகம்போற்பூசையைநீசெய்யவேணும்
அண்டுமேவண்ணமொடுபலகாரங்கள்
அதிகமாய்வடபருப்புபாணகங்கள்
பண்டுமேயெனையாண்டகுருவேயென்று
பாக்கிலையுந்தேக்கிலையிற்படைத்திடாயே. 102

படைத்துமேதீபமொடுதூபங்காட்டி
பரமகுருநாதனெனப்பணிந்துபோற்றி
மடைத்தனமாய்த்திரியாதேவயிரவத்தின்பூசை
மறந்துவிட்டாலெத்தொழிலுமயக்கமாகும்
அடைத்தவொருவட்சரங்களனேகமுண்டு
அந்தந்தவிடங்களிலேயாருஞ்சொல்லார்
கடத்தவொருமறப்பில்லாதுன்னுக்கு
சாற்றுவேன்வயிரவத்தின்பூசைதானே. 103

தானென்றவயிரவர்களெட்டுபேரும்
தனித்துமேசக்கரத்தில்நின்றுபூசை
வானென்றஅட்டமாசித்திபெட்டும்
மைந்தனேவயிரவர்களெட்டுபேரால்
கோனென்றநீயிவர்கடன்னைபூசி
கூடிவருமட்டசித்திகைக்குள்ளாகுந்
தேனென்றவயிர்தமடாவிந்தபூசை
தேவிசொல்லநாம்செய்ததிறமிதானே. 104

திறமானபூசையிலேமனதேவைத்து
சித்திதரவேணுமென்றுதியானஞ்செய்து
உறமானஉன்மனதைபேதியாதே
ஓகோகோருத்திரனுமுண்மைசொல்வார்
பரமானபரமகுருதன்னைநீயும்
பணிந்துமேபாத்திரங்கள்வழங்கச்செய்து
சரமானசூரியனிற்பூசைபண்ணி
தான்வாங்குதுரிசினதுசுண்ணந்தானே. 105

சுன்னமென்றசுன்னமதைப்பதனம்பண்ணி
சூட்டுகுறேனிதைபெடுத்துதொழிலுமாட
கன்னமென்றகன்னக்கோலிதுவுமாகுங்
காட்டுவேனிதின்பெருமைகைக்கொள்ளாது
சொன்னதொருசூதமொருபலந்தானென்றில்
சூட்டுவேன்துருசினதுசுன்னந்தானும்
என்னவேபணவிடைதானெடுத்துக்கொண்டு
இதமானசூதமதிலிட்டுத்தாக்கே. 106

தாக்கவேவாய்நீராகவிட்டுத்தாக்கு
தட்டுண்டுசூதத்துசட்டிப்போகும்
பார்க்கவேவழித்தெடுத்துக்குகையில்வைத்து
பக்குவமாய்மூன்றெருவிற்புடத்தைப்போக்கி
சேர்க்கவேமணியதுதான்கதிர்போல்வீசும்
சிவசிவாரசமணியின்திறமைதன்னை
ஆர்க்கவேயாராலுமறியப்போமோ
அரனுடையவிந்துவதினுண்மைதானே. 107

தானே தானின்றதொருசூதந்தன்னை
சாற்றுகிறேன்கெவுனமதிற்றுண்டியோட
மானே தான் தரித்தசிவன்விந்தின்போக்கை
மறைத்தார்கள்சித்தரெலாம்வாய்பேசாமல்
சேனே தான்மெத்தவுண்டுபூமிதன்னில்
சிவசூதங்கொடித்தாக்கான்மெத்தநன்று
ஊனே தான்பிறந்தெடுத்தசூதமானால்
உயர்த்தியடாமெத்தநன்றுவுண்மைதானே. 108

கருவூமத்தின்விபரம்.

உண்மையென்றசூதமதுகிடையாவிட்டா
லுத்தமனேபரங்கிவைப்புலிங்கஞ்சூதந்
தண்மைபெறத்தானெடுத்துமணியாய்ச்செய்நீ
தாண்டுமடாயண்டவரைகிணற்றிருனும்
வண்மைபெறமணியெடுத்துசாரணையைத்தீர
மாட்டுகிறேனுதாக்கண்மறைப்பையெல்லாம்
பண்மைபெறச்சொல்லுகிறேன்கருவூமத்தம்
பாகமதையினுவிபரம்பாரும்பாரே. 109

பாரேநீகருவூமத்தின்பாகமேதோவென்றுள்
பைங்கொடியாட்கெற்பமடாமூன்றுங்கெற்பம்
காரேநீகொண்டுவந்துகத்தியாலே
கடுகதுபோல்கண்டித்துச்சொல்லக்கேளு
சேரேநீகுடனதுபலந்தானைந்து
திறமானவெண்காரம்பலந்தான்மூன்று
வாரேநீவெடியுப்புசாரஞ்சீனம்
வகைவுகைக்குபலமொன்றுமாட்டிடாயே. 110

மாட்டியேபிண்டமதிலிரேகித்தேதா
    மைந்தனேயபச்சட்டிக்குள்ளேவைத்து
ஆட்டியேவடுப்பெனிநீமெழுக்காய்போகும்
    அப்பனேயதையெடுத்துவைத்துக்கொண்டு
ஊட்டியேகவசமிட்டுமணிக்குத்தானம்
    உத்தமனேநூற்றிருபத்தொன்றுபோடு
காட்டியேகொடுக்காதேயார்க்காணும்
    கருவூமத்தின்கருவைக்காட்டொண்ணாதே. 111

ஆணையிட்டது.

ஒண்ணனகருவீனதுவிபரஞ்சொன்னேன்
    உத்தமனேயிதின்விபரமொருவர்சொல்லார்
கண்ணனபேர்களுக்குச்சொன்னையானால்
    கணகெட்டுமுன்சிரசுவெடித்துபோகும்
என்னணையென்றுமிகச்சாபமிட்டேன்
    இட்டதினார்பயந்தார்கள்சித்தரெல்லாம்
உன்னணைபூசித்துவெடுக்கவென்றால்
    முறைசொன்னரென்குருவும்புசண்டர்தாமே. 112

இரசமணிக்குச்சத்துஊட்டும்வகை.

தானென்றமணிக்குநீசாரணையைத்தீர்ந்தால்
    சத்துவகையூட்டுகிறவிபரங்கேளு
ஊனென்றபூநாகசத்துவொன்று
    உததமனேதாளகத்தின்சத்துவொன்று
வானென்றவுபசரங்களிருநூற்றைப்பத்து
    வகையானபாஷாணமறுபத்துநான்கும்
நானென்றவுப்புவகையிருபத்தைந்து
    நன்மையாகநவலோகமொன்பதுவுமாமே. 113

ஆகுமேமூலிகையின்சத்தோடொக்க
    அப்பனேநவமென்றபாஷாணந்தான்
போகுமேசத்துகளையெடுத்துக்கொண்டு
    புகழ்பெறியசூதமணிபலமொன்றுக்கு
தாகுமேகுகைதனில்வைத்துருகும்போது
    சரிசமனாய்க்கொடுத்துவிடுபூநாகச்செம்பு
வேகுமேயண்டமேலாமதியினாலே
    வெகுகோடியுருத்திரன்போல்விளங்குந்தானே. 114

விளங்குதேரசமணி தானுருகும்போது
    விரவியிடுயிந்திரமாங்கோபச்செங்கை
முழுங்கியேதவளைப்போலுள்ளக்கொள்ளும்
    மூர்க்கமுடன்கோபமுண்டோமுறையாது
களங்கில்லாசத்துகளைப்பின்னுலூட்டு
    கடுவேகமாகுமட்டாகெவுனத்துள்ளே
உளங்கவேமணிதனுக்குசங்குசத்தை
    யூட்டினல்கெவுனமதில்யோசையாமே. 115

ஓசையென்றல்வெகுவோசைசங்கினேசை
    ஒகோகோமதயானைவோடும்வேகம்
மூசையிலேயடைந்திருந்தகாற்றப்போலே
    முழிக்குமுன்னேகோடிவரைமுழுதுந்தாண்டும்
பாழையிலேபரிபாஷைகருக்களெல்லாம்
    பரிடிவைத்தேனின்னூல்தான்பதனஞ்சொன்னேன்
பேசையிலேயிப்பொருளைச்சொன்னையானல்
    பிசகுவருமுந்தனுக்குபேணிப்பாரே. 116

பாரப்பாவிம்மணிக்குவாத்தாள்பூசை
    பாங்குபெறச்செய்துநீசொல்லக்கேளு
சேரப்பாவயிரவன்றன்பூசையாலும்
    சித்தியடாயிதின்பெருமைசெப்பொணுது
ஆரப்பாவெனைப்போலசொன்னரில்லை
    ஆச்சரியமணியோசையென்னசொல்வேன்
பேரப்பாபேறதெல்லாமிரசுத்தின்பேறு
    பெருமையிதின்முடிவுசொல்லபோகாதென்னே. 117

இரகச்சிந்தூரம்.

போராதுசத்தினதுசெந்தூரத்தைப்
    பூட்டுகிறேன்காயசித்திபொருளுண்டாக
வேகாதாசத்தினதுமணிதானென்று
    விளங்கியதோர்தங்கமென்பூகெவுரிகாலுங்
சாகாதநாகமொன்றுவிராகனென்று
    தண்மையாங்கந்தகந்தாளகமுங்கூட்டி
நோகாதவெடியுப்புநாலுங்கேளு
    நுண்மையாம்பலங்காலாயவிதங்கூட்டே. 118

கூட்டியேகல்வத்திலிட்டுக்கொண்டு
குமறவேமாதளம்பூச்சாற்றினாலே
ஆட்டியேநாற்சாமமானபின்பு
அப்பனேரவியில்வைத்துபொடியாய்ப்பண்ணி
ஊட்டியேகாசியென்றமேரிற்றானும்
உத்தமனே*வாலுகையின்மேலேவைத்து
மாட்டியேநீயெரிப்பாய்நான்குசாமம்
மைந்தனேயிராக்காலமாறப்போடே. 119

*காசி-காசிகும்பி.

* வாலுகை-அடுப்பு.

போடவேயிப்படியேமூன்றுநாட்டான்
புகழ்பெறவேபன்னிரண்டுஜாமமானால்
நாடவேநாலாநாளிறக்கிப்பாரு
நன்மையென்றசெந்தூரமென்னசொல்வேன்
தேடவேவருணன்போற்சிவந்துகாணும்
சிவசிவாவிதன்பெருமைசெப்பொணாது
ஆடவேவேணுமென்றாலாத்தாள்மான்பு
ஆர்சித்துபூசைசெய்துவப்பால்வையே. 120

வைக்கவேவடுவுக்குப்பூசைபண்ணி
மைந்தனேசெந்தூரங்குன்றியுண்ணு
மெய்க்கவேயுன்றிரேகமென்சொல்வேன்
வெண்மதிபோலாகுமடாமண்டலத்தில்
தைக்கவேவெள்ளியிலாயிரத்துக்கொன்று
தானிட்டவேயிருபத்தைந்தாகுமாற்று
எய்க்கவேவேணுமென்றால்செம்புதன்னில்
யீந்திடுவாயைந்நூற்றுக்கொன்றுதானே. 121

தானென்றமாற்றதுவும்பனிரண்டாகும்
சாற்றுவேனிதன்விபரமின்னங்கேளு
பானென்றமதிபோலநவலோகங்கள்
பழுக்குமடாநூற்றுக்குவொன்றுதாக்கு
ஊனென்றவிதன்பெருமையாருஞ்சொல்லார்
உரைத்தேனேமனிதரெல்லாம்பிழைக்கவென்று
கானேனுமென்றுசொல்லிவிட்டிடாதே
கருத்துகந்துவைந்நூறும்பாருபாரே. 122

பார்க்கவேசொல்லுகிறேனாகந்தன்னை
பலப்பத்துதானெடுத்துசொல்லக்கேளு
ஆர்க்கவேசாரநீற்தன்னிலேதான்
அப்பனேயைந்துமுருக்கிச்சாய்த்து
எர்க்கவேதானெடுப்பாய்கட்டிப்போகும்
என்மக்காணாதத்தின்பெருமைகேளு
சேர்க்கவேகட்டியதோர்நாகந்தன்னைப்
செப்புகின்றவிபரமதைச்செப்புறேனே. 123

செப்புகிறேன்கட்டியதோர்நாகந்தன்னை
திறலவேபலமொன்றுகைக்குள்வைத்து
முப்புரமேதானெரித்த*வீசன்விந்து
மூண்மையென்றதங்கமடாபலந்தானொன்று
தப்புகிறேனென்றுனுந்தப்பப்போமோ
தாயுடையவிந்துவடாகெந்திதானும்
உப்பென்றவெடியுப்புநாலாங்காய்ச்சல்
உறுதிபெறத்தானெடுத்துச்சொல்லக்கேளே. 134

*ஈசன்விந்து-இரசம்,

கேளடாநாகத்தையுருக்கிக்கொண்டு
கெட்டியாய்த்தங்கத்தையதிலேசேர்த்து
கோளடாவாராமற்கல்வத்திட்டு
கொட்டினால்தூளதுபோலாகும்பாரு
பாழடாபோகாதுசரக்கெல்லாந்தான்
பலங்கால்தான்வீதமடாயெடுத்துக்கொண்டு
வேளடாயெரித்தசிவன்மூலிச்சாற்றில்
விட்டரைப்பாய்சாமமதுநான்குதானே. 125

*சிவன்மூலி-சிவனார்வேம்பு.

தானென்றநால்சாமமறைத்தபின்பு
தான்ரவியில்காய்ந்தபின்புசொல்லக்கேளு
மானென்றபொடியாக்கிமேருகேற்றி
மைந்தனேவாலுகையில்வைத்துநீயும்
கோனென்றமுன்போலவெரிநீயப்பா
குமறவேபனிரண்டுசாமந்தீயை
பானென்றகுளிரவிட்டுநான்கானாளிற்
பார்வதியைப்பூசைபண்ணியப்பால்வாங்கே. 226

வாங்கியதோர்சிந்தூரமென்னசொல்வேன்
மைந்தனேகொஞ்சிவப்புகண்ணேகூசுந்
தாங்கியேதானெடுத்துக்குன்றியுண்ணு
தப்பாதுகாயசித்தியிதுவேயாகும்
ஏங்கியேதிரியாதேநவலோகங்கள்
என்னசொல்வேன்பத்தரைக்குயேறுமாற்று
பாங்கியெனுமென்தாயார்சொல்லகானும்
பரிபாஷைகருநீக்கிப்பாடினேனே. 127

நாககுப்பிசெயநீர்.

பாடியதோர்வகையேதுவின்னங்கேளும்
பலம்பத்துநாகமதையுருக்கிக்கொண்டு
கூடியேவருகவென்றுமிரசத்தைவாங்கி
கூட்டவேபலமூன்றுமொன்றாய்ச்சேர்த்து
நாடியேகல்வத்திலிட்டுக்கொண்டு
நவசாரசெயநீரைவிட்டுஆட்டி
சாடியேநாற்சாமமரைத்தாயானல்
தான்மெழுகாம்பதமதிலேவட்டுப்பண்ணே. 128

பண்ணியேரவிமுகத்திற்காயவைத்துப்
பருஞ்சுக்கான்சுண்ணும்பினடுவேவைத்து
எண்ணியேயெருவைந்திப்புடத்தைப்போடு
யென்னசொல்வேன்சுண்ணமென்றூற்கொடியவேக
வள்ளியென்றுஞ்சாரமென்றும்பச்சையைந்து
மைந்தனேசுன்னமைந்தும்வகையாய்க்கூட்டி
உன்னியேசீனமுடன்வெடியுப்புங்கார
முத்தமனேவகைவகைக்குப்பலமுங்காலே 129

நாலானவகையெல்லாமொன்றாய்ச்சேர்த்துக்
கல்வமதிற்றூனரைக்ககருவைக்கேளும்
பாலானபாலாகுஞ்சதுரக்கள்ளிப்
பாலதினூற்றூனரைத்துப்பாகங்கேளுஞ்
சாலானபிங்கானிலப்பிநீயுந்
தண்மைபெறப்பனிதனிலேவைத்தாயானல்
வாலானவாருதியாம்பிங்கான்றன்னில்
வந்திறங்குஞ்செயநீரும்வாங்குவாயே. 137

வாங்கியேபீங்கானில்வைத்துக்கொண்டு
மைந்தனேதேவிமுன்புபூசைசெய்து
தூங்கியேதிரியாதேசெம்புதன்னைச்
சுத்திசெய்துசெயநீரில்வைத்துக்கொண்டு
தாங்கியேபத்தெருவிற்புடத்தைப்போடு
தப்பாதுமாற்றென்னுவாறரையுங்காணும்
நீங்கியேபோகாதுயிந்தவேதை
நினைவுவைத்தாத்தாளேப்பூசைபண்ணே 131

காரீயச்செந்தூரம்.

எண்ணவேகாரீயக்கட்டிவாங்கிப்
பருதியென்றசெயநீரிலுருச்கிச்சாய்த்து
கண்ணவேயைந்துதிரஞ்சாய்த்தாயானுற்
கட்டுமடாகாரீயங்கனகமாகுஞ்
சொன்னதொருகட்டியதுவெட்டையாகுந்
துடியடக்ககல்வமதியிட்டுக்கேளும்
எண்ணமுடன்தானிடிக்கநொறுங்கிப்போகு
மிதினுடனேசேர்க்கும்வகையின்னங்கேளே. 132

கேளேநீசெயநீரைவிட்டேயாட்டி
சேவலமாநினையாதேவிபரஞ்சேர்த்து
வாளேநீபூரமதிற்சூடம்பூரம்
வரிசைபெற்றவெடியுப்புவகையொன்றுக்குக்
கோளேநீவாராமற்கழஞ்சியொன்று
கொடியதொருகாரியங்களஞ்சிமூன்றும்
பாளேநீபோகாமலரைத்துநீயும்
பருவமுடன்மெழுகாகும்பதத்தில்வாங்கே 133

பதத்திலேவாங்கியல்லோவட்டாய்ப்பண்ணி
பண்பானபூநீறுங்கல்லுப்புச்சுண்ணம்
நிதத்திலேசமனுகவெடுத்துக்கொண்டு
நேர்ப்பாகவகலதனிற்பரப்பிவைத்து
மதத்திலேமாண்டதொருவங்கந்தன்னை
மைந்தனேநடுமையம்வைத்துப்போற்றி
செகத்திலேபோகாமல்சீலைமண்செய்
சிறப்பாகப்பத்தெருவிற்புடத்தைப்போடே. 134

புடத்திலேபோட்டவுடனீருய்ப்போகும்
போமடாசுண்ணமதுவேகமைந்தா
தடத்திலேவெறிகொண்டயானைக்கொக்குந்
தள்ளாடுஞ்சிங்கியடாவாதத்துக்கு
கொடத்திலேகட்டிவைத்தவரவம்போலக்
கொதிக்குமடாசரக்குகளைக்கண்டபோது
சடத்திலேயிதுவுமொருசடலமாகுந்
தாயானவங்கத்தின்றன்மைதானே. 135

சிங்கிசுண்ணம்.

தண்மையென்றவங்கத்தின்சுண்ணந்தன்னை
தானரைத்துப்பூசிவிடுசிங்கிக்கப்பா
வண்மையென்றவெருக்கிலையின்தன்பழுப்பு
மைந்தனேதானரைத்துப்பூசும்போது
வெண்மையென்றவெருக்கிலைபின்தன்பழுப்பு
வெகுசுருக்கில்வாதமதுவிள்ளப்போமோ
ஒண்மையென்றசுண்ணமிதிற்கோடிதொந்தம்
ஓகோகோசொல்லரிதுவுரைத்தேன்பாரே. 136

உரைக்கவேயின்னமொருசேதிகேளு
முத்தமனேவெள்ளையொருபலந்தான்மூன்று
மறைக்கவேயில்லையடாசெயநீராலே
மைந்தனேசுருக்கிடுநீஜாமமொன்று
நிறைக்கவேயிறுகியதுகட்டிப்போகும்
நேர்ப்பானவெள்ளியுடரேக்கைசசுத்தி
துரைக்குருவிற்பணவிடைதானெடுத்துக்கொண்டு
சூட்டடாரேக்கதனிலின்னங்கேளே. 137

* வெள்ளைசங்கபாஷாணம்.

கேளடாபாலமென்றவோட்டைவாங்கி
கிருபைபெறவுவர்மண்ணிற்கொதிக்கவைத்து
கோளடாவாராமல்பலந்தானிரண்டுங்
கூட்டுவாயானைக்கற்சிப்பிரண்டும்
வாளடாரண்டுமொன்ருய்க்கல்வத்திட்டு
மைந்தனேயெறியாலம்பாலாலாட்டி
சூளடாகுகைபோலபண்ணிக்கொண்டு
துப்பரவாயதினடுவிற்கட்டிவையே. 138

வைத்துமேயஞ்செருவிற்புடத்தைப்போடு
மருவியந்தரேக்குடனேயுருகிநிற்குஞ்
செத்துமேபோச்சுதடாபாஷாணந்தான்
செப்புகிறேன்வெள்ளித்தைத்திறமதாக
அத்துநீபோகாதேவெள்ளீயத்தி
லப்பனே::ம்பதுக்கொன்றுபோடு
சத்தவெள்ளிபிதற்கிடோசொல்லப்போமோ
துப்' றவாய்மாற்றதும்பத்துமாச்சே. 391

தாளகச்செந்தூரம்.

ஆச்சப்பாயின்னமொருகருவைக்கேளு
வப்பனேதாளகமுபலமுமூன்று
பேச்சப்பாபேசாதேகொண்டுவந்து
பிற்பலமாஞ்செய்நீரிற்ரேய்த்துக்கொண்டு
காச்சப்பாமூன்றுநாள்ரவியிற்போட
கண்டுண்டுபோவதற்குவகையைக்கேளு
மூச்சப்பாயோடாமல்முப்பூசுண்ணம்
முழுக்கவசமாய்க்கட்டிகுகையில்வையே. 140

கட்டியேமூன்றெருவிற்புடத்தைப்போடு
கட்டுண்டுவுருகியதுமணிபோனிற்குங்
கெட்டியாய்த்தங்கமொருபலத்தைவாங்கி
கிருபைபெறக்குகைதனிலேயுருகும்போது
மட்டில்லாதாளகத்தைகொடுத்தாயானல்
வாய்பிளந்துவாங்குமடாதங்கந்தானுங்
கொட்டியேகல்வமதிலாட்டும்போது
குறுகுறுத்துமணல்போலநொறுங்கும்பாரே. 141

பாரப்பாநொறுங்கியதோர்தாளகத்தைப்
பக்குவமாய்ச்செந்தூரஞ்செய்யக்கேளும்
நேரப்பாகெவுரியுடன்கெந்திரூதம்
நேர்ப்பானவெடியுப்புகிமிளைநாகம்
சேரப்பாயிவையெல்லாம்வகையொன்றுக்குச்
செப்புவேன்கழஞ்சிகிரைசேரக்கூட்டிப்
பேரப்பாமயிற்கொன்றைப்பூச்சாற்ருலே
பிரபலமாய்தானரைப்பாய்ஜாமம்நாலே. 142

---

* கழஞ்சி-நாற்பதுகுன்றியிடை.

நாலானசாமமரைத்தபின்பு
நன்றாகவட்டுப்போல்வில்லைபண்ணி
காலான்வோட்டில்வைத்துச்சீலைமண்செய்
கனக்கவேயேழுசீலைசெய்தபின்பு
ஆலானவஞ்செருவிற்புடத்தைப்போல
வப்பனேநீயறியதுசிந்துரிக்குஞ்
சூலானசூன்மிருந்துசெற்பம்போல
சொலிக்குமடாவாதமிதிலின்னங்கேளே. 143

கேளடாவெள்ளிதனிலூற்றுக்கொன்று
கிருபைபெறத்தான்கொடுக்கச்சொல்லக்கேளு
வாளடாமாற்றென்னவிருபத்தைந்து
மைந்தனேசெம்பிலேதான்பத்துக்கொன்று
சூளடாகொடுத்திடவேமாற்றுபத்தாஞ்
சொல்லுவோம்நவலோகமெல்லாந்தங்கம்
கோளடாவாராதுயிந்தப்போக்கு
குறிப்பாகமண்டலந்தான்பனங்காற்கொள்ளே. 144

கால்கொள்ளமண்டலத்திற்சித்தியாகுங்
கனகமிதில்வெகுகோடிகாணலாகும்
மால்கொள்ளுமங்கையடாவரிதாரந்தான்
மைந்தனேயிதன்பெருமையாருங்காணார்
நால்முகமாய்க்கொண்டதொருபிர்மாவாலு
நாயகியாணகமதையறியப்போமோ
பாலமுதுபோலேயடாயிந்தப்போக்குப்
பார்ப்பதற்குகெவுரியுடபாகங்கேளே. 145

கெவுரிபாஷாணக் கட்டு.

பாகமென்னகெவுரியொருபலமேதூக்கிப்
பாச்சடாசெயநீரில்சுருக்குத்தாக்கி
தாகமென்னசாமமொன்றிற்கெவுரிகட்டும்
தனையெடுத்துகல்வத்திலிட்டுக்கொண்டு
ஆகமென்னத்தாளகமுஞ்சிலையுங்கெந்தி
யப்பனேவெடியுப்புநாகந்தானு
மேகமென்றரேக்கதுதான்வகையொன்றுக்கு
மென்னசொல்வோம்பலங்கால்யெடுத்திடாயே. 146

* சிலை-மனோசிலை.

எடுத்துமேகல்வமதிலிட்டுக்கொண்டு
யென்னசொல்வேன்செம்பருத்தம்பூஞ்சார்விட்டுத்
தொடுத்துமேதானரைப்பாய்நாலுசாமந்
துவளவரைத்தேயுருட்டிக்காயப்போடு
அடுத்துமேபொடிபண்ணிச்சொல்லக்கேளு
மப்பனேகாசியென்றமேருக்கேற்றி
விடுத்ததொருவாலுகையின்மேலேவைத்து
விபரமாய்முன்போலே *தாளிக்கேத்த. 147

* தாளி-மிடா

ஏத்தவேதாளிக்குண்மணலைக்கொட்டி
யென்மகனேரண்டுவிரற்கனந்தானையா
ஆத்தவேஉப்புநன்றாய்ப்பொடித்துக்கொண்டு
வப்பனேமுன்சொன்னகனமேபோட்டு
காத்தவுடன்குப்பியைநீசுத்திக்கட்டிக்
கனக்கவேமணற்கொட்டிக்கழுத்துமட்டுஞ்
சேத்தருளவேண்டுமென்றுதாயைப்பூசி
சிறக்கவேஅக்கினியைத்திரும்பமூட்டே. 148

மூட்டயிலேதீபம்போற்கனலைமூட்டு
முதற்சாமங்கடந்தபின்யிரண்டாஞ்சாம
மாட்டயிலேகமலம்போலெரிநேர்ப்பாக
வப்யனேயிருசாமமானபின்பு
ஊட்டயிலேகடினமென்றக்கினியைக்கேளு
முத்தமனேயாறவிட்டுதிரும்பமூட்டு
நாட்டயிலேபிராக்காலமாறப்போடு
நாலாநாட்குப்பிதனைவெளியில்வாங்கே, 149

வாங்கடாகுப்பிதனையாத்தாள்முன்பு
வடுகனையும்பூசைபண்ணிசொல்லக்கேளு
தாங்கடாயவள்பதத்தையிருகையாலே
தாமரையின்பூவதினாலர்ச்சனையுஞ்செய்து
தேங்கடாவாசியைநீபிழுத்துவாங்கிச்
சிவசிவாதூபமொடுதீபங்காட்டி
பாங்கானசெந்தூரங்குன்றியுண்ணப்
பருவமதுயென்னசொல்லேவன்பரைசொல்வாளே. 150

சொன்னதொருமண்டலமேகொண்டாயானல்
  சோதியடாவுன்தேகஞ்சொல்லப்போமோ
கண்ணடாச்செந்தூரஞ்சித்தருக்குக்
  கருத்திறந்துயான்சொன்னேங்கண்டுபாரு
அன்னமென்றபச்சரிசிப்பாலுங்கூட்டி
  யப்பனேபத்தியமாய்க்கொண்டுவாநீ
என்னவேநரம்பெல்லாமிறுக்கிக்கொள்ளு
  மிதுக்கடுத்தகற்பமொன்றுமீடாகாதே. 151

ஆகாதகற்பங்களனேகமுண்டு
  வதிற்றெளிந்துசொல்லிவிட்டேன்யானுமய்பா
போகாதுகில்களைவிடுமாட்டாது
  போக்கதிலேசொல்லுகிறேனின்னங்கேளு
நோகாதுசடலமதுப்பேதியாது
  நொந்தாலுமிறுகுமடாசெந்தூரந்தான்
சாகாதுகருவியெல்லாமொன்றுப்போகுந்
  தாய்கொடுக்கயானுன்டேன்றண்மைதானே. 152

தண்மையென்றசெந்தூரம்வெள்ளிதன்னிற்
  றூனிடுவாயாயிரத்துக்கொன்றுதானும்
உண்மையென்றமாற்றென்னவிருபத்தஞ்சு
  உத்தமனேசெம்புதானிரும்பதாகும்
நன்மையென்றகுடவனிலேபத்தரையுமாகும்
  நாட்டினேன்நவலோகமெல்லாந்தங்கம்
வண்மைபெறச்சொல்லிவிட்டேனிந்தநூலின்
  மார்க்கங்ளின்னமுண்டுமருவுங்காணே. 153

குடவன்-பித்தளை.

கந்தகபற்பம்.

காணவேகந்தகந்தான்பலமுமூன்று
  கருணைபெற்றமுப்புவின்விராகன்மூன்று
தோணவேரண்டையுந்தானேட்டிவிட்டு
  துப்புறவாய்நெருப்பிலிட்டுவறுத்திட்டேதான்
பேணவேவெந்துருகிப்பற்பமாகும்
  பேசாதேபின்பெடுத்துக்கல்வத்திட்டு
ஊணவேதாளகத்தைச்சரியாய்க்கூட்டி
  யுத்தமனேநாகமதுபலமுங்காலே. 154

காலாவெனடியுப்புவிராகனென்று
கனகமெனுந்தங்கமொன்றுரேக்கதொன்று
பாலானசூதமடாவிராகனஞ்சு
பதிவானகெவுரியுமோவிராகன்ரண்டு
சேலானதுருசுமேவிராகனென்று
சேரவொண்ணுகல்வத்திலிட்டுக்கொண்டு
மாலானமூலிகையாம்விஷ்ணுகாந்தி
மைந்தனேசாற்றினலாட்டுவாயே. 155

ஆட்டியேயெண்சாமமரைத்தபின்பு
அப்பனேரவிமுகத்திற்காயவைத்து
சூட்டியேபொடிபோலரைத்துக்கொண்டு
சொல்லுவேன்காசியென்றபேருக்கேற்றி
நாட்டியே0வாலுகையிற்றுளிக்குள்ளே
நன்றாகமுன்போலேவைத்துக்கொண்டு
மாட்டியேதீயிடுவாய்பனிரண்டுசாமம்
மைந்தனே ஆட்டிவிட்டப்பால்வாங்கே. 156

0 வாலுகை-அடுப்பு. 0 ரவி-சூரியன்.

வாங்கியேகுப்பியைத்தானுடைத்துப்பாரு
மைந்தனேசெந்தூரமருணன்போலாம்
தாங்கியேவெள்ளியென்றசிமிளில்வைத்து
தானந்தவைரவணேபூசைபண்ணி
தூங்கியேதிரியாதேகுன்றியுண்ணு
சொர்னமடாவுன்தேகஞ்சொல்லப்போமோ
நீங்கியேபோகுமப்பாரோகமெல்லாம்
நிட்சயமாயுன்தேகநிலைக்கும்பாரே. 157

பாரப்பாசெந்தூரமாயிரத்துக்கொன்று
படும்செப்புக்கொடுத்திடவேமாற்றுப்பத்து
நேரப்பாவெள்ளியிலேமூவாயிரத்துக்கொன்று
சேர்ந்திடவேயிருபத்தஞ்சுமாற்று
பேரப்யாகந்தகந்தானுயிநாதம்
பெருமையதில்சொல்லவென்னுற்கூடா
நேரப்பாயிதன்பெருமை0மூலநாயன்
நிகண்டிலேசொல்லிவைத்தாரின்னங்கேளே 158

0 மூலநாயன்-திருமூலம்.

கந்தகத்தைலம்.

இன்னமுந்தான்சொல்லுகிறேன்கந்தகந்தானப்பா
யென்மகனேபலமொன்றுயெடுத்துக்கொண்டு
கன்னமுள்ளக்கருங்குன்றிவித்தேவாங்கிக்
கலந்திடுவாய்ப்பலமொன்றுகந்தகத்தினுள்ளே
சொன்னபடிகல்வத்திலிட்டுக்கொண்டு
துவளவரைசேங்கொட்டைத்தைலந்தன்னு
லெண்ணமேவெல்லுப்போற்பில்லைபண்ணி
யிதமாகபூபுடத்திற்றைலம்வாங்கே 159

* கருங்குன்றி-கறுப்புக்குண்டுமணி * பூப்புடம் குழிப்புடம்.

தைலமதுவாங்கியேமுப்பூச்சேர்த்து
தனித்தவொருகந்தகந்தான்பலமும்வாங்கித்
தைலமதுபொல்லாது கந்தகத்துக்கப்பா
தாண்மையாய்ச்சுருக்கிடவே மெழுகுமாகுந்
தைலமதுபோலேயடா மெழுகுதானும்
தப்பாமற்பலமறைதான் ரேக்கேயூட்டு
கைலேமுலேப்போலாடு மெழுகுதானுங்
கண்ணிமைக்குளண்டமெல்லாம் பொன்னுய்ப்போமே. 160

போகுமேமண்ணுமுதல் மலேகளெல்லாம்
பொன்மயமாய்ப்போகுமடா புகைபட்டாக்காற்
சாகுமேசரக்குள்ளே கட்டிக்கொள்ளுந்
தனித்தனியேவேதையது யோடும்பாரு
வேகுமேயண்டமெல்லாஞ் சுண்ணக்காடாய்
வெகுசுறுக்காய்ச்சொல்லிவைத்தேனிந்தநூலி
லாகுமேமெழுகுவதை செந்தூரம்போக்கு
மப்பனேகந்திவிட்டா லாகாதென்னே. 161

என்னவேவாதமுறைகருக்களெல்லாம்
மியம்பினேமன்னூத்திற் றெளிவதாக
சொன்னவொருகாரியங்கடிதற்கீடாச்சி
சொல்லிவைத்தேன்வேதாந்தமிதுக்கீடல்லா
முன்னோர்கள்கட்டினதோர் சாஸ்திரங்களெல்லா
முன்பின்னுய்த்தெரியாது மோசங்காணுங்
கண்ணுனசாஸ்திரங்கள்கோடியுண்டு
கருக்குருவுந்தெரியாமற்கட்டினுரே. 162

சட்டமுனி.

கட்டியதோர்காரியங்கள்பார்த்துபார்த்து
கருக்கிடையாய்தோணமற் கலங்கினார்கள்
ஒட்டிவைத்தசாஸ்திரங்கள் கோடியுண்டு
வொருவருக்குந்தெரியாம லலைந்தார்கோடி
வெட்டைவெளியாகவேதான் சட்டைநாதர்
விளம்பினார்தீட்சவிதி யிருநூற்றுள்ளே
தொட்டதொருகருக்களெல்லாம் வெள்ளையாய்ச்சொன்னார்
தொடுகுறிபோலாடுமடா யிந்தநூலே. 163

நூலானதீட்சவிதி யிருநூறுந்தான்
னொடிக்குமுன்னேபாடிவைத்தார் சட்டைநாதர்
சேலானதொன்றுமில்லை யிந்தநூலுஞ்
செப்பினேனிதனைவெகு தெளிவதாகப்
பாலானபாலதுபோல் வெண்மையாகப்
பாடினேன்மனிதரெல்லாம் பிழைக்கவென்று
காலானநூலறிந்து மூலநாயன்
சயிலாசவறையிற்போய்க்கூடினாரே. 164

கூடியேசித்தரெல்லா மிருந்துக்கொண்டு
கூட்டிவந்தார்சட்டைமுனி நாதன்தன்னை
பாடினதோர்நூலெடுத்துப்படிக்கச்சொன்னார்
பயனெல்லாந்தானறிந்து கோபமாகி
யாடியதோரம்பலத்திற் கிழித்தார்பாரு
மப்போயென்னாலே புசண்டர்வாங்கிச்
சூடியதோர்சடாமகுடந் தன்னிலேதாஞ்
சொருகிவைத்தாரொருவருக்குந் தோணாதன்றே. 165

தோணாதுவென்றுசொல்லியெடுத்துக்கொண்டு
சொக்கியேகுளிகையிட்டு பொதிகைமேவி
காணாதுவென்றுசொல்லிபொதிகநாதன்
கையிலேதான்கொடுத்தா ரன்னார்தன்னை
யாணாதுயாணுவத்தால்சொன்னாரென்று
மப்போதுகுகைதனிலேயொளித்தாரையா
வூணாதமவுனத்தைத் தியானஞ்செய்ய
தொருயுகந்தான்தொண்டுபண்ணி வாங்கினானே. 166

வாங்கியேகமலமுனி தனக்குயீந்தேன்
வாய்த்துதென்றுமவர்தானு மடக்கஞ்செய்தார்
நீங்கியேபிரபஞ்சந் தன்னைவிட்டு
நிலையானசாஸ்திரத்தில் சித்தனானர்
தாங்கியேயவருடைய மற்றோர்க்கெல்லாஞ்
சாத்திரனைந்நூற்றின் விபரமெல்லாந்
தூங்கியேதிரியாதேயூன்னூற்றன்னை
சோதித்தாற்சருக்களெல்லாந் தோணும்பாரே. 197

தோணுமேவாதமொடு ஞானஞ்சித்தி
சொல்தனக்குயெட்டாத மவுனஞ்சித்தி
யாணுமேகெவுனசித்தி காயசித்தி
யப்பனேயட்டமா சித்தியெல்லா
மூணுமேமனமதுதான் பேதியாம
லோகோகோகருக்களெல்லாம் வெளியாய்ச்சொன்னேன்
கோணுமேசெகஜால மாய்கையெல்லாங்
கொடும்பாழாய்போகுமடா யின்னங்கேளே 198

கருங்கோழியண்டம்.

கேளப்பாவண்டமதில் வித்தையொன்று
கேசரியாள்சொல்லிவைத்தா ளெந்தனுக்கு
கோளடாவாராம லண்டமென்ற
கோழியடாகருங்கோழி கொண்டுவந்து
வாளடாகந்தகந்தான் சுத்திசெய்து
மைந்தனேபலமொன்று யாவிநெய்யால்
நாளடாவிட்டரைத் திருட்டிக்கொண்டு
நாண்மூன்றுகொடுத்துவிடு சுத்தியாமே 169

சுத்தியாங்குக்கிடத்திற் றிரேகமெல்லாஞ்
சூட்டுவோம்பின்புசெய்யும் வகையைக்கேளு
பத்தியாமவுரியிலைப் புதுசாய்ப்பார்த்து
பலங்காலாஞ்*சூரிவிதை விராகனென்று
முத்தியாமிரசம்துதான் களஞ்சியொன்று
மூர்க்கமுள்ளவழுத்துமா வுளஞ்சிமூன்று
அத்தியாமுகவனைததான் பணங்துபோற்றி
யானியென்றகோழிக்கு மளிததிடாயே. 170

---

* சூரிவிதை - நத்தைசூரிவித்து

அளித்துமேயிருபதுநா ளானபின்பு
வப்பனேரசமதனை யிரட்டித்தேத்து
களித்துமேநாற்பதுநா ளானபின்பு
சொல்லுவோமிரசமதனை யதுக்கிரண்டு
மூளித்துமேதிரியாதே மோசமில்லை
மூற்கமுள்ளகோழிதன்னை யழித்துப்போட்டு
வளித்துமேமலங்களெல்லாம் எடுத்துக்கொண்டு
மைந்தனேதாளிக்குட் கரைத்திடாயே 171

கரைத்துமேரசமதனை யெடுத்துக்கொண்டு
கண்டித்திரசமதிற் பாதிலிங்கங்கூட்டி
யுரைத்துமேவுழுந்துமாய்ச் சரியாய்கூட்டி
யுத்தமனேபலமொன்று ணுண்மூருக
வரைத்துமேயிப்படியேச் சொலித்திவானி
வப்பனேமண்டலங்காற் கடந்தபின்பு
மரைத்துமேபோகாது மலத்தோடொக்க
மைந்தனேயிறங்குமடா ரசந்தான்பாரே. 172

பாரப்பாசந்தானுங் கட்டிப்போகும்
பருவமுடன்ரேக்கதனை யதற்குப்பாதி
சேரப்பாரசமணியைச் சுத்திக்கட்டி
சிமிள்போலேவெள்ளியிலே செய்துக்கொண்டு
காரப்பாவதில்வைத்து மேலேமூடி
கவுத்தியேசீலைமண் ணேழுஞ்செய்து
ஆரப்பாமூன்றெருவிற் புடத்தைப்போடு
அப்பனேகட்டியது மணியுமாமே. 173

கட்டியதோர்மணியெடுத்து வெள்ளிசெம்பிற்
காட்டுவாய்பத்ததுக் கொன்றுபோடு
மொட்டியதோர்மாத்துவு மெட்டுமாகும்
வுத்தமனேயதன்பெருமை யுரைக்கப்போமோ
மட்டிப்பாய்த்திரியாதே சொல்லக்கேளு
மைந்தனேசொல்லிவைத்தே னைந்நூற்றுக்கு
செட்டியாய்சாஸ்திரத்தை யுற்றுப்பாருங்
கிருபையாயுன்மனது குருவுமாமே. 124

குருவானசாஸ்திரந்தா னைஞ்னூறும்பாரு
கொட்டினேன்கருவையெல்லா மிந்தநூலி
லுருவானகுருத்தேட வேண்டாம்நீயும்
உத்தமனேசாஸ்திரந்தான் குருநூலாகும்
திருவானமாதவந்த நிர்த்தஞ்செய்வாள்
செகஜாலங்கூத்தைவிட்டுத் தெளிந்துநில்லும்
கருவானசாஸ்திரத்தைப் பார்க்கும்போது
காற்றிருப்பானுரோமனென்றுங் கண்டுகொள்ளே. 175

இரசசெந்தூரம்.

கொள்ளவேகோழிபைத்தான் சோதித்தாக்காற்
குருவென்றிரசதுதான் நியங்கிநிற்கும்
விள்ளவேயதையெடுத்துச் சொல்லக்கேளும்
வெண்மையாங்குகையில்வைத்து யுருக்கிப்பாரு
மள்ளவேயுருகியது மணிபோல்நிற்கும்
வப்பனேயதையெடுத்துச் சொல்லக்கேளுங்
கள்ளமென்றுயெண்ணாதே சொர்ன்னமையா
கண்டிடைக்குச்சரிகூட்டி யுருக்கிடாயே. 176

உருக்கியேசெந்தூர மாகச்சொல்வே
முத்தமனேகேந்தியது நாலத்தொன்று
தருக்கியேதாளகந்தான் மூனத்தொண்ணுத்
தான்கூட்டிக்குதம்பைசார் தனைவிட்டாட்டி
முருக்கிலைசார்முச்சாம மறைத்துகொண்டு
முதிராமன்மெழுகுபோல்வட்டுப்பண்ணி
யருக்கியகலில்வைத்துப் புடத்தைப்போடு
யாத்தாட்கும்வடுகனுக்கும் பூசைபண்ணே. 177

குதும்பைகூத்துங்குதம்பை.

பண்ணியேசெந்தூரம் பணங்காலுண்ணும்
பறக்குமேநோயெல்லா மண்டலத்தி
லெண்ணியேகாசித்தி யென்னசொல்வேன்
யேழையுஞ்சொல்லிவிட்டே னைஞ்னூற்றுக்குஞ்
புண்ணியமேசெய்தவர்க்கு யின்னூற்கிட்டும்
போக்கோடேகருக்களெல்லாம் நன்றாய்த்தோணுங்
கண்ணிலேகண்டபொருள் தன்னைப்போல
காட்டுமடாகருக்கண்முறை வாதந்தானே. 178

தானென்றசெந்தூரம் வெள்ளிநாற்றில்
தாக்கிடவேமாத்தென்ன பெட்டுமாகு
மூனென்ற*குடவனிலே பத்துக்கொன்று
முத்தமனேகொடுத்திடவே யாறுமாத்தா
மேனென்றசாத்திரங்கண் மெத்தவுண்டு
யிதமாகநாள்பார்த்தப் படியேசொன்னேன்
தேனென்றயமிர்தமடா யிந்தநாலு
செப்பினேன்சாத்திரத்தில் தெளிந்துநானே. 179

* குடவன் - பித்தளை.

வெடியுப்புச் சுண்ணம்.

தெளிந்துமேசொல்லுகிறே னின்னங்கேளுந்
திறமானவெடியுப்பு செயநீர்தன்னை
னெழிந்தவொருவெடியுப்பு யைந்தாங்காச்சன்
மோகமிதுசொல்லுகிறேன் முப்பூவின்போக்கு
கனிந்தவொருவுப்பென்று மிதற்கும்பேரு
கம்பியுப்புவெடியென்று மிதற்கும்பேரு
மொழிந்தவொருயடியென்று மிதற்கும்பேரு
மூத்தமனேயிதின்பெருமை யுரைக்கிறேனே. 180

உரைக்கவேகம்பியுப்புபலமோபத்து
உத்தமனேவயச்சட்டிக் குள்ளேவைத்து
நிறைக்கவே*சுணங்கனுட வெண்மலமும்மூன்று
நேராகதுரிசியது பலமுமொன்று
சிறக்கவே†சீனமொன்று ‡காறந்தானுந்
திரம்போலவெண்கார மிவைரெண்டுந்தான்
அறைக்கவேவகையொன்று பலமரைந்தான்கூட்டி
யப்பனேகல்வமதிற் பொடியாய்பண்ணே. 181

* சுணங்கன் - நாய் † காறம்-முப்புச்சுண்ணம்.

‡ சீனம்-படிகாரம்.

பண்ணவேவயச்சட்டி யடுப்பில்வைத்து
பாங்குபெறவுப்பதனை யதின்மேற்கொட்டி
கண்ணவேயடுப்பேற்றி யுப்புருகமட்டுங்
கசிந்துமேயுருகையிலே செப்பக்கேளும்
முன்னமேபொடித்தவொரு தூளேப்பா
முறைமுறையாய்த்தூவிவிடு புகையடங்கமட்டுஞ்
சொன்னவொருபொடியெல்லா மானபின்புந்
திப்பறவாய்தானெடுத்து யப்பால்வையே. 182

சாரம்.

அப்பாலேவைத்ததொரு வுப்பைமைந்தா
வறைக்கவேகல்வமதி லிட்டுக்கொண்டு
வெப்பானகாரமதை சொல்லக்கேளு
வெண்மையென்றகோழிமலங் கொண்டுவந்து
தப்பாதேயண்டத்தின் வெண்கருவைவிட்டு
தானறைப்பாயிருசாம மெழுகாய்ப்போகும்
முப்பானசாரமது *கங்கிபூட்ட
வுத்தமனே*யுவரில்வைத்து புடத்தைப்போடே. 183

* அங்கிகவசஞ்செய்து * யுவற்கலர்மண்ணு.

போடவேயைந்தெருவிற் புடத்தைப்போடு
பொங்காமல்வெடிபாமன் னிற்கும்பாரு
நாடவேயெடுத்ததனை நிறுத்துக்கொண்டு
நாட்டுவாய்வெடிதனக்கு நாலத்தொண்ணு
தேடவேபோகாது விந்தநீரை
திறமைபெறசொல்லிவிட்டே னிந்தநூலில்
கூடவே*யெலியலாம் பாலைவார்த்து
குமறவேதானரைத்துப் பீங்கானிலப்பே. 184

* எலியால்காட்டாமணக்கு.

அப்பியேபனியில்வைக்க செயநீராகும்
அப்பனேபீங்கானி லெடுத்துக்கொண்டு
தப்பியேபோகாது சரக்கெல்லாந்தான்
தட்டுண்டுகெட்டுமடா ஜெயநீராலே
வொப்பியேபாஷாண மொன்பதுந்தான்
ஒடுங்குமடாயிதினுடைய வாடைகண்டா
லப்பியேயிதைவிட்டு இன்னமொன்று
யறுவகையின்மைந்தனே செயநீர்கேளே. 185

ஆறுவகைசெயநீர்.

கேளடாவெடியுப்பு பலமோபத்து
கிருபைபெறவேணுமென்று வயச்சட்டிலிட்டு
தேளடாகொட்டுதல்போல் சுண்ணமாக
செப்புகிறேன்*சுதேசியுடகபாலம்வாங்கி
கோளடாவாராம லிருந்துக்கொண்டு
கூட்டுவாய்பலமொன்று வின்னங்கேளு
நாளடாதுருசோடு சீனக்காரம்
நலமானவெண்காரம் பூனீர்கூட்டே. 186

* தேசிகபாலப்-—சூதறமட்டை.

கூட்டியேநவாச்சாரம் வகையொன்றுக்கு
கூறுவேன்பலமொன்று பொடியாய்ச்செய்து
தாட்டியேமுன்பொடியோ டொக்கக்கூட்டி
யப்பனேவெடியுப்பு வுருகும்போது
வூட்டியேகொஞ்சமாம் தோண்டுக்கிண்டி
யுத்தமனேயுட்கொண்டு வாங்கும்பாரு
வாட்டியேபொடியெல்லாஞ் சென்றபின்பு
வழித்துமேகல்வமதி லிட்டுக்கேளே. 187

கேளடாநவாச்சாரம் பச்சையாக
கெட்டியாய்பலன்மருந்து யெடுத்துக்கொண்டு
நாளடாவெடியுப்பு சுண்ணத்தோடே
நன்றாகசேர்த்தரைப்பா யெருக்கன்பாலால்
சூளடாயிருசாம மறைத்துக்கொண்டு
துப்பறவாய்பீங்கானி லப்பியேதான்
வாளடாபனியில்வைக்க செயநீராகும்
மைந்தனேகுப்பிதனி லடைத்திடாயே. 188

அடைத்துமேவடுகனுக்குப் பூசைபண்ணி
யாத்தாளேதியானித்து சொல்லக்கேளும்
படைத்துமேயவள்பதத்தி லர்ச்சித்தேதாம்
பாங்குபெறகுப்பியைநீ யப்பால்வாங்கி
சடைத்துமேபோகாதோ யென்தாய்ப்பூசை
சதாநித்தியவள்பதத்தை தொண்டுபண்ணு
நடத்துமேயவளுடைய கிருபைதானும்
நாதாக்கணமறப்பையெல்லாம் நீக்குவாளே. 189

தாளகச்சுண்ணம்.

நீக்கவேமுன்னுரைத்த செயநீர்தன்னை
நீயெடுத்துச்சரக்குகளிற் றேய்த்துப்போடு
யாக்கவேகட்டுண்டு யிறுகிப்போகு
மாகராவாகமதில் எல்லாஞ்சொல்வேன்
சேர்க்கவேதாளகத்தை செயநீர்தன்னில்
திறமையாய்தான்துவைத்து ரவியிற்போடு
காற்கவேமூணுநா ளானபின்பு
காக்கிணதினிலேயறைத்து கவசம்போடே. 190

கெவுரிக்கட்டு.

போடவேசுண்ணமது யென்னசொல்வேன்
பொலிந்துமேநீறுமடா தாளகந்தான்
நாடவேதாளகச் சுண்ணந்தன்னை
நலமாகத்தானெடுத்துச் சொல்லக்கேளும்
தேடவேகெவரியைத்தான் ஜெயநீராலே
தீர்க்கமாய்தான் துவைந்து ரவியிற்போட்டுப்
பாடவேசாளகத்தின் சுண்ணத்தாலே
பலமாகக்கவசமிட்டுப் புடத்தைப்போடே 191

இலிங்கக்கட்டுச்சிந்தூரம்.

புடத்திலேகெவுரியுந்தான் கட்டிப்போகும்
பொருமியேசுண்ணும்பா யிருக்கும்பாரு
திடத்திலேசுண்ணமதை யெடுத்துக்கொண்டு
திறமையாயிலிங்கமதுக் கங்கியூட்டி
* விடத்தலையின்வேரரைத்து யதினமேல்காட்டி
விருதுபெறற்கஞ்செருவிற் புடத்தைப்போடு
தடத்திலேயதைப்போற் பாகையுண்டோ
தான்கட்டிப்போகுமடா லிங்கந்தானே. 192

* விடத்தலை விடத்தாறி.

தானென்றலிங்கமது கட்டிப்போகுந்
தனையெடுத்துக்கல்வத்தி லிட்டுக்கொண்டு
மூனென்ற * நாதமுடன் * வெடியுங்கூட்டி
முசத்தியாந்தாளகமுங் * கெந்திகூட்டி
மானென்றதங்கமடா ரேக்குதானு
மைந்தனேயொன்று பலங்காலாகத்
தேனென்றகட்டியதோர் லிங்கமென்று
சேரவேகல்வத்தி லிட்டுக்கேளே. 193

* நாதம் அரசம் * வெடி பொட்டிலுப்பு

* கெந்தி * கந்தம்

கேளடாயாறுநீர் தன்னாலாட்டிக்
கெட்டியாய்த்துட்டதுபோல் வட்டுபண்ணி
வாளடாமூன்றெருவிற் புடத்தைப்போடு
மார்க்கமாய்க்கட்டியது நிற்கும்பாரு
சூளடாமறுபடியுங் கல்வத்திட்டுத்
துடியானகந்தகத்தை யதிற்குட்பாதி

கேளடாவாராமற் கூட்டிக்கொண்டு
கொடுமைபெறப்பழஞ்சாற்று லாட்டித்தீரே. 194

* பழச்சாறு-எலுமிச்சங்கனிரசம்.

தீரவேரவிதனிற் காயப்போடு
திறமையாய்ப்பொடிபண்ணிக் * குப்பிக்கேற்றி
வாறவே * வாலுகையில் * தாளிவைத்து
மணலிட்டுக்குப்பியதி னுள்ளேவைத்து
ஆறவேபனிரண்டு சாமந்தானும்
அப்பனேமுன்போற் றெறித்தப்பின்பு
சேறவேமூன்றுநாட் குப்பிவாங்கித்
தேவியைபூசித் திடைத்துப்பாரே. 195

* வாலுகை-அடுப்பு * தாளி-மிடா.

பார்கவேசிந்தூர மென்னசொல்வேன்
பவளம்போலிருக்குமடா * தளத்தலேதான்
ஏற்கவேபணவிடைதாங் தேனிற்கொள்ள
என்னசொல்வேன்காயமது யிறுகிப்போகுங்
கார்க்கவேவாசிதா னடக்கும்பாரு
கண்கொள்ளச்சோதியது வேகமெத்த
சேர்க்கவேகுதிரையைத்தான் பூட்டிக்கொண்டு
திசைகளெட்டுவெல்லுமிது திறமிதாமே 196

0 தளம்-அடியில்.

திரமானசிந்தூரம் வெள்ளிநூற்றிற்
செறுத்திவிடுவிராகனிடை யொன்றுவீத
முரமானமாற்றதவு மெட்டுமாகு
மோகோகோவிதன்பெருமையுரைக்கப்போகுஞ்
சிரமான 0 வாகாசகப்பியாலே
செயிக்குமடாநவலோக மெல்லாந்தங்கம்
பரமானபராபரத்தின் வித்துவாகும்
பார்தனிலேவிள்ளாதே யெவர்க்குந்தானே. 197

0 ஆகாசகம்பி-கம்பியுப்பு

ஆர்க்குமேசொல்லாதே செயநீர்போக்கை
யரனெனக்குச்சத்தியமாய்ச் சொன்னவித்தை
சேர்க்கையாய்ச்சித்தரெல்லாங் கூடிக்கொண்டு
சிரமாகவருவகைநீர் தன்னையப்பா

பார்க்கவேயவரவர்கள் மறைத்துச்சொன்னார்
பாவம்வருமென்றுசொல்லி மனதிலெண்ணிக்
கார்க்கவேவேணுமென்று கிருபையாகிக்
கட்டினேன்சாஸ்திரத்தைக் கருதிப்பாரே. 198

கருதியேசித்தரெல்லாங் கூட்டிக்கொண்டு
காட்டினார்சாஸ்திரங்க ளனேகங்கோடி
உறுதியாய்வாசமது செய்யச்சொல்லி
யொளித்தார்கள்கருக்களெல்லா மொளித்துவைத்தார்
*பருதி*மதியுப்புதனை மனதுக்கேற்ற
படிசொல்லிவைத்ததினால் விபரமில்லை
அறுதியாய்ச்சொல்லிவைத்தார் பச்சையாக
அப்பனேயிதையறிந்து வாதம்பாரே. 199

* பருதி சூரியன் * மதி சந்திரன்.

வாதமென்னகொஞ்சத் ற் கிட்டுமோசொல்
மகத்தானபெரியோர்க்குத் தொண்டுபண்ணி
நாதமென்னநாகத்தின் விபரந்தன்னை
நாதாக்கண்பதமறிந்து விபரங்கேளும்
வேதமென்னவந்தரத்தின் பொருளுந்தோணும்
வேதாந்தசாஸ்திரத்தி னறிவுகாணும்
பாதமன்னவுப்பதனை யறியவேணும்
பரத்தினுடநிட்டையிலே பணந்துமில்லே. 200

நில்லென்றுயானுரைத்த சாஸ்திரத்தில்
நினைவாகமனதில்வைத்துக் குருவென்றெண்ணி
சொல்லென்றுநியானித்து பூசைச்செய்யச்
சோதித்துவுன்மனதிற் சொல்லுப்பாரு
கல்லென்றுகரடுமுத லுருகிப்போகுங்
கருத்தில்வைத்துயென்னூலைப் பார்ப்தபேர்க்குங்
கொல்லென்றுகூற்றுவனு மொதுங்கிப்போவான்
கொடியதொருசமாதியிலே யிருந்துபாரே. 201

பூநாகச்சத்து.

இருந்துமேபூநாகச் சத்தைக்கேளு
மென்னசொல்வேன் செம்மணலிற் * பூநாகந்தான்
பருத்துமேபெரிதாக விருக்கும்பாரு
பட்டவிடம்மதியைப்போற் சோதிகாணும்

நருத்தமேயைந்துபல மெடுத்துக்கொண்டு
நேராவின்பால்தனிலே போட்டாயானால்
வெருத்தமேமண்ணையெல்லாங் கக்கிப்போடும்
வேற்படவேபூநாகம் பிழிந்துவாங்கே 202

* பூநாகம்-நாக்குப்பூச்சி ⁎ மதி-செம்பு அதேசந்திரன்.

வாங்கியேகோவையிலைச் சாற்றிலூட்டி
மைந்தனே ⁎ ரவிமுகத்திற் காயப்போட்டு
நீங்கியேகருப்பாக விருக்கும்பாரு
நினைவாகக்காய்ந்தபின் யெடுத்துக்கொண்டு
தாங்கியேகல்வமதிலிட்டுநீயுஞ்
சார்வான * சூடனது லங்காற்போடு
ஒங்கியேமண்செய்து புடத்தைப்போடு
உத்தமனேயிருபத்திற் புடத்திற்காணே. 203

⁎ இரவி-சூரியன் ⁎ சூடன்-கற்பூரம்.

காணவேபுடமாறி யெடுத்துப்பார்க்க
கருப்பென்றநிறம்போகும் வெண்மையாகுந்
தோணவேபற்பத்தை யெடுத்துக்கொண்டு
சொல்லுவேன்சரக்குவகை யின்னங்கேளும்
வேணவேவெண்காரம்பல மரைதான்போட்டு
விருதுபோற்றுனரைப்பாய் காடிவார்த்து
ஊணவேவில்லையாய்த்தான் பிடித்துக்கொண்டு
வுத்தமனேபுத்தெருவிற் புடத்தைப்போடே. 204

போடவேபற்பந்தா னெடுத்துக்கொண்டு
புகழ்பெறவேகாடிதனிலூறவைத்து
நாடவேநாலாநாட்டெளிவிறுத்து
நாட்டுவாய் * சூதமது ⁎ களஞ்சியாது
ஒடவேவிட்டுநீ கையாற்றேய்த்து
உத்தமனேரசமதுதான் செம்பிற்றுக்கு
கூடவேரசமெல்லா மொன்றுய்த்தேய்த்துங்
கூட்டியேகெட்டியா யுண்டைசெய்யே 205

0 சூதம் இரசம் 0 கழஞ்சு-நாற்பது குன்றிடை.

செய்தவுண்டை 0 குகையில்வைத்துக் காரங்கூட்டித்
தீர்க்கமாயுருக்கிப்பார் செம்புமாகும்

கொய்தசெம்பைத்தானெடுத் துருக்கிப்பாரு
கோடிரவிபோலிருக்குஞ் சத்துவேகங்
தொய்தமென்றபூநாகச் செம்பையையா
சுருக்கமாய்ச்சொல்லுகிறேன் வேதைமார்க்கம்
வெய்தமென்றகுளிகைக்குக் கொடுத்தாயானல்
வேகமதாயதிவேகம் பசியுண்டாமே. 206

* குகை-மூசை * காரம்-செயநீர்.

உண்டானசெம்பிடைக்குத் தங்கங்கூட்டி
யுத்தமனேகுகைதனி லுருக்கும்போது
பண்டானநாகமடா நாலத்தொன்று
பருங்கண்ணை தானொடுங்கிக் கூட்டியிவாய்
குண்டானகலகமதி லுருக்கிச்சாய்ப்பாய்
கொட்டவேதூளாக நொருங்கும்பாரு
பண்டானதாளகமுங் கெவுரிகூட்டி
பண்பாககல்வமதி லரைத்திடாயே. 207

அரைக்கவேசெவ்வல்லி பூச்சார்விட்டு
அப்பனேநாற்சாம மரைத்தபின்பு
யுரைக்கவேரவிதனிற் காயப்போடு
உத்தமனேபொடிபண்ணிக் * குப்பிக்கேற்றித்
திரைக்கவேவாலுகையின்மேலேவைத்து
தீயெரிப்பாய்பனிரண்டு சாமந்தானு
மறைக்கவேவில்லையடா சிந்தூரத்தை
மைந்தனேராக்கால மாறப்போடே. 207

* குப்பி-புட்டி.

போடவேநாலாநாள் குப்பிவாங்கிப்
பூரணியைப்பூசித்து தியானஞ்செய்து
ஆடவேவேணுமென்ருல் சொல்லக்கேளு
அப்பனேகுப்பித்தா னுடைத்துப்பாரு
நாடவேசெம்முருக்கம் பூப்போலாகும்
நலமானசிந்தூரங் * குன்றியுண்ணு
தேடவேயனுபானந் தேனிலூட்டுச்
சிவசிவாயுன்தேக மருணனுமே. 209

அருணனென்றசிந்தூரம் வெள்ளிநூற்றில்
அளித்திடவேமாற்றென்ன பனிரண்டாகுந்

தருணமென்றவென் தாயைப் பூசைபண்ணச்
சகலகலைசித்தெல்லாஞ் சொல்வாள்தாயார்
கருணமென்றபஞ்சீகரண பூதத்தாலே
காட்டுவாளண்டபகி ரண்டமெல்லாந்
மருணமென்றநாலைவிட்ட தோஷத்தாலே
வந்ததடாபிரபஞ்ச மாயைதானே. 210

தானென்றபூநாகச் சிந்தூரத்தைச்
சாற்றினேன்சித்தருட சபையில்நின்று
கோனென்றசித்தரெல்லாங் கூட்டிக்கொண்டு
கொழுப்படாபாடினது வென்றுகேட்டார்
தேனென்றதக்ஷணத்திற் பொதிகைநாதன்
சின்மயத்தினுத்தரவாற் றெளிந்துசொன்னேன்
மானென்றவென்குருவும் புசண்டர்சொல்ல
வசனித்தேனனூற்றில் மகிழ்ந்துகாணே. 211

இந்திரகோபச்செப்பு.

காண்பதென்னனூற்றி லின்னங்கேளு
கனமானவிந்திரமாங் கோபச்செம்பை
ஆண்பதென்னபொருளென்று மெண்ணிடாதே
யாத்தாளுமப்பனுமே யணைந்தநாதம்
துண்பதென்னமின்னலுக்குள் * சோமனாலே
துப்பரவாய்ரவிபோலே காந்தியாச்சு
பாண்பதென்னபூமியிலே மெத்தவுண்டு
பார்த்துநீகொண்டுவந்து சொல்லக்கேளே. 212

* சோமன்-சந்திரன்-அதேசெம்பு.

கேளடாமயிமதுதா னிருபத்தஞ்சு
கிருபைபெறக்கல்வத்தி லிட்டுக்கொண்டு
நாளடாதுரிசியது பலந்தானாலு
நலமானவெண்காரம் பலந்தான்மூன்று
வாளடா * வெடியுப்பு பலமோரண்டு
வளமானவீரமது பலமுமொன்று
சூளடா * சூடோரியது பலமும்ரண்டு
சொல்லுவேனிவையெல்லாங் கல்வத்திட்டே. 213

* வெடியுப்பு-பொட்டிலுப்பு * சூடோரி

மாத்திரை.

இட்டுமேபூநாகம் பலந்தானென்று
இவையெல்லாம்விட்டரைக்க வகையைக்கேளு

கட்டுமேயவுரியிலேச் சாற்றாற்சாமங்
கருங்கோழிரத்தமதுமூன்றுசாமம்
மொட்டுமே ‖ யாடுதின்னுப்பாலேச்சாறு
முத்தமனே முச்சாமமரைத்துக்கொண்டு
வெட்டுமேவெள்ளாட்டு ரத்தமோடு
விழுதுபடத்தானறைப்பாய் சாமம்நாலே. 214

‖ ஆடுதின்னுப்பாலே ஆடுதொடாமூலி.

நாளானவாடுதின்னுப் பாலேச்சாறும்
நாற்சாமந்தானறைத்துச் சொல்லக்கேளு
பாலானசாறுவகை யரைக்கும்போது
பற்றவேகாய்ந்தபின்பு மறுச்சார்வாரு
சேலான § வெலிபாலம்பாலேவிட்டுத்
திரள்வரைமுச்சாமந் தீர்க்கமாக
காலானகாசதுபோல் வில்லேபண்ணிக்
கனத்ததொரு ‖ குகைதனிலமுத்திடாயே. 215

§ எலியால்-கட்டாமணக்கு ‖ குகை-மூசை.

அமத்தியேசரவுலேயில்வைத்துக்கொண்டு
அப்பனேதுரித்தியிட்டுச் சொல்லக்கேளு
சமத்தியென்றவென்தாயைப் பூசைசெய்து
சாதகமாய்வயக்கிண்ணீற்றுரித்திரண்டு
செமத்தியேகரியைநன்றாய்ச் செமத்தியூது
திரளவேகரிமனியா யிறங்கும்பாரு
கமுத்தியேமேலோடு கொண்டுமூடு
கட்டாகவஞ்சுதிர மூதிடாயே. 216

சரவுலே-சரம்வைத்தூதுதல்.

உவதியேமணிகளெல்லாம் பொருக்கிக்கொண்டு
வுத்தமனே § சறகெல்லாமழுந்தவூது
வாததிலேசத்தெல்லா மொன்றாய்ச்சேர்த்து
வப்பனே ‖ காரமிட்டுருக்கிப்பாரு
எற்கவேசெம்பையினி யென்னசொல்வேன்
யினிவானசூரியன்போற் காந்தியாகும்
பாகமாய்மதிதரித்த யீசன்செம்பை
பார்ப்பதற்குக்கண்ணுண்டோ பாருள்ளோர்க்கே. 217

---

§ சறடு-அழுக்கு ‖ காரம்-செயநீர்.

பார்தனிலிச்செம்பைக் கண்டபோதே
பரனுனதுவசமாவார் பாருபாரு
கார்காலந்தனிற்றழைத்த விருட்சம்போலக்
காணுமடாயெத்தொழிலுங் கண்கொள்ளாது
சீர்தனிலிச்செம்பை வெள்ளிநூற்றிற்
செலுத்திநீயொன்றிடவே மாற்றென்னசொல்வேன்
சோதனைக்குமாற்றென்ன விருபத்தஞ்சு
சிரமைமெத்தத்திரமைமெத்த யின்னங்கேளே. 218

கேளடாயிச்செம்பை மதவானைக்கீய
கீர்த்திபெறக்கொடுத்துவி டென்னசொல்வேன்
வாளடாசோடசமாங் கலையுண்டாச்சு
மைந்தனேகொடுமையென்றூற் கொடியவேகம்
சூளடாயண்டத்திற் செல்லும்போது
சோதியடாரவிகோடி காந்தியாகுந்
தாளடாயிச்செம்பை வைத்துக்கொண்டு
தான்செய்யும்வகைசொல்வே னின்னங்கேளே. 219

இன்னமுநான்சொல்லுகிறேன் செம்பிற்போக்கை
யிலக்காகச்சொல்லிவைத்தார் சித்தரெல்லாம்
முன்னமுநான்சொன்னதொரு தொழிற்களெல்லா
முப்பூவின்கருவதற் கொவ்வாதப்பா
கன்னமுள்ளசரக்குகளைக் காட்டிக்கொள்ளுங்
கண்டவுடன்பாஷாணஞ் செந்துப்போகும்
வன்னமுள்ளட்டசித்து வசியமுண்டாம்
மைந்தனேயிதின்பெருமை வாழ்த்துவேனே. 220

வாழ்த்துவேனிச்செம்பை ¶ குகையிலிட்டு
மைந்தனேயுருகையிலே பலமதொன்று
அழுத்தமுள்ளதங்கமடா பலந்தானென்று
அப்பனேநாதமொன்று கொடுத்தாயானால்
பழுத்தவொருமூன்றின முருக்கேகொண்டு
பாங்குபெறகல்வமதி லாட்டும்போது
கொழுத்தவொருகளங்கமது யொருங்கும்பாரு
கூறுவோமிதன்பெருமை கூறுவோமே. 221

¶ குகை-ஆதேமூசை.

கூறுவோஞ்சரக்குவகை யின்னங்கேளு
கொடியதொருகாளகமுஞ் 0 சிலையுங்கந்தி
தாறவேகெவுரியோடப் பிரேகத் 0 துத்த
மப்பனே 0 வெடியுடனே 0 சூதங்கூட்டி
நீறவே 0 குலாமலிச் சாறுதன்னால்
நீகழவேநாற்சாம மரைத்தபின்பு
ஆறவேமாங்துளிரின் சாற்றினாலே
அன்பாகவரைத்திடுவாய்சாமம்நாலே. 222

0 சிலைமனோசிலை 0 துத்தம்-பாற்துத்தம்.

0 வெடி-வெடியுப்பு.

0 குலாமல்லி-முட்செவ்வந்தி.

நாலானசாமமடா வரைத்தபின்பு
நலமாகக்காய்ந்தபின் சொல்லக்கேளு
சேலானதொன்றுமில்லை செம்பருத்தமபூச்சாற்
சிறக்கவேநாற்சாம மரைத்துக்கொண்டு
மேலானரவிதனி லுலறப்போட்டு
மேன்மையாய்பொடிபண்ணிக் குப்பிக்கேற்றி
சூலானசூன்மிகுந்து கற்பமாச்சு
சொல்லுவேனிதன்பெருமை சொல்லுவேனே. 223

சொல்லுவேன்வாலுகையின் மேலேவைத்து
துப்புரவேமுன்போற் பாகஞ்செய்து
வெல்லுவேன் 0 மூத்தீயின் விபரங்கேளு
வேதாந்ததீபமடா விளக்கும்நாலு
சொல்லுவேன்கமலம்போற் றீபந்தானுந்
திறமைபெறநாற்சாமந் தீர்ந்தபின்பு
அல்லுவேனுனுரைக்கிறேன் மூன்றுநாளில்
அப்பனேநாற்சாமம் கோரமாமே. 224

0 முத்தி கமலாக்கினி- கடாக்கினி-தீபாக்கினி

அகோரமென்றவக்கினிதா னுலுசாம
மப்பனேயெரித்தபின்பு சொல்லக்கேளு
வகாரமென்றசொல்லிதுக் குட்சொல்லபோமோ
மைந்தனேயிராக்கால மாரப்போட்டு
சிகாரமென்றவென்தாயார் பார்வதிபாதஞ்
சிறக்கவேபூசைபண்ணித் திறத்தைக்கேளும்
நகாரமென்றபட்டணத்திற் குடியிருந்த
நாதாந்தசத்திக்கு வாமம்வையே. 225

வாமம்வைத்துப்பூசைபண்ணிச் சொல்லக்கேளு
மார்க்கமாய்வைரவர்க்குப் பூசைசெய்து
ஓமம்வைத்துயென்குருவை யர்ச்சனைசெய்து
வுத்தமனேயென்னைநீ நினைந்துகொண்டு
காமம்வைத்தபேய்போல வலைந்திடாதே
கவுடுவைத்தால்வைரவனுஞ் சாபமீவார்
சோமம்வைத்தகுருநாதன் பூசைபண்ணி
சொல்லுவேன்குப்பியைநீ யப்பால்வாங்கே 226

வாங்கியகுப்பியைநீ யுடைத்துப்பாரு
மைந்தனேசிந்தூர மென்னசொல்வேன்
தாங்கியேயெடுத்துநீ சிமிளில்வைத்து
தாட்பாதத்திற்பூசைபண்ணிக் * குன்றியுண்ணு
தூங்கியேதிரியாதே காயச்சித்தி
சொலலுவேன் * மண்டலத்திற் சித்தியாகு
மோங்கியேநரைகளெல்லா வண்டுபோலா
மோகோகோசோதிநிற மாகும்பாரே. 227

* குன்றி-குண்டுமணி * மண்டலம்-நாற்பதுநாள்.

இவ்வடி ஆச்சரியக்கோல்.

சோதியென்றசிந்தூர வெள்ளிதன்னிற்
சொல்லுவேனயிரத்தி லொன்றுபோடு
மாதியென்றமாற்றதுதா னிருபதாகு
மப்பனேபச்சைவன்னங் கண்ணேகூசும்
வாதிகளேசிந்தூரஞ் செய்வீராகின்
மகத்தானசிவலோக!மெல்லாந்தங்கம்
நீதியாய்ச்சொல்லிவைத்தேன் சிந்தூரத்தை
நிலைத்ததொருசித்தரெல்லா மொளித்தார்பாரே. 228

ஒளித்தாரேசித்தரெல்லாம் பேசிக்கொண்டு
ஒகோகோயிந்திரமாங் கோபச்செம்பை
யொளித்தாரேகருக்கெல்லாம் வெளிவிடாம
லொருகுழிபாவெட்டிங்கே புதைத்தார்பாரு
களித்தானேயொருவருக்குந் தோணுதென்று
கபடமாயவர்மனங் கருதிக்கொண்டார்
வளித்தானேமையறனும் வகையறிந்தும்
வழிகண்டுபொர்ப்பதாற் றேனுந்தோணே. 229

தோணாதுவென்றுசொல்லி விட்டிடாதே
சொற்பெரியர்நாதாக்க ளாட்டமெல்லாங்
காணாதுகாணுமடா வுற்றுப்பார்த்தால்
கருவுதனைக்குருசொல்லக் காணவேணுங்
கோணாதுவென்னுடைய நூலைப்பார்த்தால்
கூறுவேன்கருமறைப்பு மொன்றுமில்லை
போணாதுபிரபஞ்சத் தன்னைப்பாரார்
பேரிம்பமுத்தியிலே சேர்க்கும்பாரே. 230

சேர்க்கவேசொல்லுகிறே னின்னங்கேளு
திறமாகச்சத்திவகை ஜெயநீர்தன்னில்
பார்க்கவெடியுப்பு நாலாங்காச்சல்
பரிவாகப்பல ‖ மீர டெடுத்துக்கொண்டு
ஆர்க்கவே ¶ யயச்சட்டிதன்னிலிட்டு
அப்பனேசரவுலையில் வைத்தூறு
கார்க்கவேவுசிகொண் டுருகும்போது
கதிரனாள் § கணங்கனுட ‖ கபாலம்வாங்கே. 231

* ரெட்டு பதினாறு.

* அயச்சட்டி - இருப்புபாண்டம்

* கதிரவனாள்-ஆதிவாரம் * சுணங்கன்நாய்

* கபாலம்-மண்டை.

வாங்கியேயுவர்மண்ணிற் சிறுநீர்விட்டு
மைந்தனேகலக்கியதைத் தெளியவாங்கி
ஒங்கியேவண்டவோ டதனைநீயு
மொருஜாமமூறவைத் துரைக்கக்கேளு
தாங்கியேயடுப்பேற்றித் தணலைமூட்டு
தயவாகவெண்ணெய்கக்கி வெளுத்திருக்குந்
தூங்கியேதிரியாதே கபாலவோட்டைத்
திறமாகத்தான்கழுவி யுலரப்போடே. 232

போடவேரவிதனிலே காய்ந்தபின்பு
புகழுவேன்மாவாக்கி யெடுத்துக்கொண்டு
தேடவேவேண்டாங்காண் பலந்தான்மூன்று
திறமானபூரமுட னன்னசேதி
நாடவேவளையலுப்பு யிந்துப்போடு
நலமானகருப்பூரஞ் சாரஞ்சேரு

வாடவேவகையொன்று பலமொன்றாக
வப்பனே || சீனமென்று காரமிரண்டே. 233

* சீனம்-படிகாரம்.

காரம்-வெங்காரம்.

ரெண்டானயிவையெல்லாம் பொடியாய்ப்பண்ணி
நேர்ப்பானகபாலமதிற் சேர்த்துக்கொண்டு
தண்டானவெடியுப் புருகும்போகும்போது
தாக்கடாவதனையுஞ் சுண்ணமாச்சு
குண்டானவிவையெல்லாங் கொண்டபோது
கூறுவேன்வழித்துயினி கல்வத்திட்டு
பண்டானவீரமது பலந்தானொந்து
பருவமாய்க்கூடவிட் டாட்டிடுவாயே. 234

ஆட்டுவாயெலுமிச்சம் பழச்சார்தன்னு
லப்பனேமிருசாம மரைந்தபின்பு
கூட்டுவாய்மாதலையின் பழச்சாற்றாலுங்
கொடியபுளிப்பாயிருக்கு மதினாற்சாமம்
நீட்டுவாய் || மயனம்போலானபின்பு
நேர்ப்பாகவில்லைதட்டி யுலரப்போடு
சூட்டுவாய்ரவிதனிற் காய்ந்தபின்பு
துப்பாரவாய்ப்பூநீற்றை புடத்திற்போடே. 235

* மயனம் போல் மெழுகுபோல்.

புடத்தையினிப்போடுகிற விபரங்கேளு
பூநீரையகலில்விரற்சனமேபோடு
தடத்தையினிச்சொல்வேன் மக்கணீங்கட்
டானிடுவாய்வில்லைதனைப் பூநீர்தன்மேல்
படைத்ததொருபூநீற்றை யதன்மேல்கொட்டி
பாங்காகவேயமுத்தி யோடுமூடி
சடைத்துநீபோகாதே யொருதானைந்திற்
றுளிடுவாய்ரவிபுட மாகும்பாரே. 236

ஆகுமடாபுடமாறி யெடுத்துக்கொண்டு
அப்பனேசாரமது பலந்தானஞ்சு
போகுமடாதிருகுகள்ளிப் பாலைவார்த்து
பொங்காமல்தானரைத்து பீங்கானிலப்பி
வேகுமடா பனியில்வைக்க ஜெயநீர்தானு
மென்சொல்வேன்வாருதிபோ லாகும்பாரு

தாகுமடாஜெயநீரைப் பீங்கானுள்ளே
தானடைத்துதேவிமுன் வைத்திடாயே. 237

வைத்துமேபூசைசெய்து யப்பாகேளு
வாகனசரக்குகளை தேய்த்துபோட்டால்
நைத்துமேசுத்தியது வென்னசொல்வேன்
நலமாகசரக்குசுத்தி திறமாம்பாரு
எத்துமுதற்செம்புவரை காசிற்றேய்க்க
விதமாககளிப்பற்று சுத்தியாகுஞ்
சேத்துமேசரக்குகளை கட்டுங்கட்டுந்
தீர்க்கமடாசொர்னநிறங் கொடுக்கும்பாரே. 238

டாரேநீ * கோமியண்டந் தன்னிலேதான்
பராபரியாடைலமது சொல்லக்கேளு
சேரேநீவீரமுடன் பூரங்காரந்
திறமானசீனமுடன் கௌரிச்சாரந்
தேரேநீலிங்கமுடன் வெடியுங்கந்தி
தீர்க்கபாந்தாளகமும் நாகஞ்சூதம்
வேரேநீயெண்ணாதே வகையொன்றுக்கு
மீறுதேபலமொன்று வீதஞ்சேரே. 239

* கோழியினண்டம்-கோழிமுட்டை.

வீதமென்னவகையெல்லாங் கல்வத்திட்டு
வெண்மையென்றகோழியுட னண்டம்வாங்கி
நீதமென்றயண்டமது வைம்பத்தொன்று
நிரமைநிறமஞ்சளென்ற நிறமாந்தன்னை
நாதமென்றமஞ்சணிறக் கருவினாலே
நயம்படவேசாமம்நா லரைத்தபின்பு
குதமென்றநெல்லுபோல் வில்லைதட்டி
துப்புறவாய்க்கலசமதி லடைத்திடாயே. 240

அடைத்துமே ‖ பூப்புடத்திற் றைலம்வாங்கி
யப்பனே ‖ வாலைதனைத்தியானஞ்செய்து
படைத்துமே † வஸ்துவொடு சுத்திசெய்து
பாலமுதுவடைபருப்பு பரமானங்க
ளுடைத்துமேதென்னங்காய் மற்றவர்க்க
முத்தளமால்புஷ்பத்தை நிறையச்சாத்தி
மடைத்தனமாய்ந்திரியாதே தியானஞ்செய்து
வந்திறங்குந்தயிலத்தை யின்னங்கேளே. 241

‖ பூப்புடன்-குழிப்புடம் ‖ வாலை-திராவகமிறங்கிங் கரகம்.
† வஸ்து-மதுபானம்.

கேளடாதயிலமது பீங்கானுள்ளே
    கெட்டியாய்த்தானிறங்கு மென்னசொல்வேன்
கேளடாவாராம லப்பால்வாங்கிக்
    கொடியதொருவீரமது பலமேலாட்டு
நாளடாகொடிரவியில்வைத்துநீயும்
    நான்மூன்றுங்கடந்தபின் னெடுத்துக்கொண்டு
சூளடாவயிரவனைத் தியானஞ்செய்து
    சொல்லுவேன்மதிதனிலே தடவிப்போடே. 242

போடவேமாற்றென்ன பத்தரையுமாகும
    போக்கோடேயிரும்புமுதற் பழுக்கும்பாரு
தேடவேபணமிடைதான் பனவெல்லத்திற்
    றின்னுவிடுகாயசித்தி யென்னசொல்வேன்
நாடவேமண்டலத்தி னரையுமாறும்
    நாதாக்கள் மலைதோறும் வைத்தார்பாரு
ஓடவேகெவுனமது சென்றியானு
    லூறிவருந்தயிலமதைக் காணலாமே. 243

காணலாஞ்சித்தருட மறைப்பையெல்லாங்
    கடிசானகெவுனமாங் குளிகையாலே
தோணலாமந்திடத்தில் செல்லும்போது
    தொண்டுபண்ணுநீயவரைக் காக்கவேணும்
மூணலாமுன்மனதை யந்திடத்தி
    லுறுதிவைத்துதவத்தினி லிருந்தீர்யானுற்
பூணலாஞ்சித்தர்வந்து தொந்தமாகிப்
    போக்கோடேயுதகமதை யீவார்பாரே. 244

ஈயவேவாங்கிவந்து காயசித்தி
    யிதமானபோக்குணக்குஞ் சொல்லுவார்கட்
டோயவேசித்தராற் சொல்லவேணும்
    தொண்டுபண்ணிநின்றவரை வணங்கவேணும்
மாயவேவேண்டாம்நீ யென்றுசொல்லி
    மைந்தனேயைந்நூற்றில் வாறுசொன்னேன்
சாயவேதயிலமொன்று விதற்குப்பேரு
    தப்பாதுதகமென்னுஞ் சாற்றலாமே. 245

இலிங்கக்கட்டு-மெழுகு.

சாற்றவேதயிலமதை யெடுத்துக்கொண்டு
    தப்பாமலிங்கத்துக் கங்கிபூட்டி
ஆற்றவேகறிபோட்டில் வாட்டுவாட்டு
    அப்பனேமெழுகாகுங் கட்டிப்போகும்

வாத்தவேவெள்ளிசெம்பி லீந்தாயானுன்
மாற்றென்னபத்தரை மாற்றுகாணுந்
தாத்தவேசரக்குகளிற் றேய்த்துப்போடு
சாருண்டுவதுமெழுகாக் கட்டுந்தாதே. 246

தாளக்கட்டுத்தைலம்.

கட்டவேசொல்லுகிறே னின்னங்கேளு
கருவானதாளகத்தின் தயிலந்தன்னை
கொட்டவேமுன்சரக்குப பலமும்பத்து
குமரவேசுத்திசெய்து சொல்லக்கேளு
ஆட்டவேகெவுரியுடன் வீரம்பூர
மப்பனேரசமுடனே வெடியுமொன்று
ஒட்டவேபன்றியுட கொழுப்பைவாங்கி
யுறுதிபெறத்தானறைப்பா யொன்றுய்த்தானே. 247

ஒன்றுனபலமொன்று வகையதொன்று
ஒக்கவேகல்வமதிற் கூடப்போட்டு
பன்றியின்கொழுப்பதனு லாட்டிக்கொண்டு
பக்குவமாய்ச்சாமமது நாலுந்தானும்
வென்றுனவில்லையது சிறுசாய்த்தட்டி
விதமாகரவிதனிலே சாமம்வைத்து
குன்றுனகலசமதில் வில்லைவைத்துக்
கூறுவேன்தனமேலே பூநீற்போடே. 248

போட்டுமேகலசமாய் சீலைசெய்து
புகழ்பெறவேதார்தனிலே மலர்தான்போடு
ஊட்டுமேவஞ்சுதமர் சவுக்கமாக
வுத்தமனேதாளிட்டு சலாக்கைவைத்து
நீட்டுமேகுழிதனையு மிருசாண்மட்டும்
நினைவாகத்தான்கிண்டி சேறுசெய்து
மூட்டுமேயதினுள்ளே பீங்கான்வைத்து
முன்குளியின்வாய்தனிலே கலசம்வையே 249

வையப்பாபீங்கானில் வாயில்நின்று
வட்டமாய்மண்ணதனுல் மூடிபோலே
மெய்யப்பாசொல்லிவைத்தே னின்னங்கேளு
வெண்மையாய்நாகசரங் கட்டைபோலே
பொய்யப்பாசொல்லவில்லை குழாய்போற்செய்து
பூட்டடாதமர்துகளை வாய்க்குந்தன்னிற்
செய்யப்பாசீலைமண் வலுவாய்ச்செய்து
தீர்க்கமாயேழுமண்ணுந் திரமாய்ச்செய்யே. 250

திரமாகச்செய்தபின்பு கலசந்தன்னைத்
தீர்க்கமாய்த்தாறுமட்டு மட்டமாக்கி
உரமாகமணற்பரப்பி யதின்மேலேளு
வுலைபொருந்தவாய்வளைய மோட்டைவைத்து
தரமாகயதைச்சுற்றிக் கவிழ்த்தாய்போலே
தார்கலையவதைமூடிக் கரியைக்கொட்டி
உரமாகக்கரிமேலே விராட்டியிட்டு
வுத்தமனேதீயிட்டுத் தியானஞ்செய்யே. 251

செய்யவேவைரவர் தியானத்தோடு
தீர்க்கமாய்ச்சத்தியையும் பூசைசெய்து
வெய்யவேயிவர்களுட தியானத்தாலே
வெருண்டெழுந்தத்தைல மிறங்கும்பாரு
நைய்யவேசரக்கெல்லாங் கரைந்துபொங்கி
நாகத்தின்வழியிறங்கித் தைலப்பிற்கும்
பொய்யென்றுபூசையைநீ மறந்தாயானால்
போக்கோடேதைலமது மிறங்காதெண்ணே. 252

எண்ணவேதைல மிறங்குமட்டு
மென்தாயார்பூசையைநீ மறந்திடாமற்
கண்ணவேவைரவர்கள் நெஞ்சில்வைத்து
கண்மூக்குமத்தியிலே கருத்தையூணி
பண்ணவேதியானத்தால் தைலந்தானும்
பார்க்கவேபீங்கானி லிறங்கிநிற்கும்
தண்ணவேதைலமதை யப்பால்வாங்கி
தானிடுவாய்வீரமதில் பலந்தானென்றே. 253

ஒன்றானவீரமதைப் பொடித்துவிட்டு
வுத்தமனேரவிதனிலே யொருநாள்வைத்து
குன்றானபீங்கானிற் பதனம்பண்ணிக்
கொட்டுவாய்ரேக்கதனைப் பலந்தானென்று
தன்றானசொர்னமென்ற ரேக்கையுந்தான்
தீர்க்கமாய்த்தோய்த்துவிடக் கலந்துபோகும்
பன்றானதைலமடா யென்னசொல்வேன்
பராபரியாள்நாதமென்று பேருமாச்சே. 254

போனதயிலமதைச் சித்தரெல்லாம்
பேசியேயொளித்தார்க ளெல்லாருந்தாம்
காரானகயிலாசச் சட்டைநாதர்
கட்டினார்தீக்ஷைவிதி யிருநூற்றுக்குள்

நேரானபுசண்டருட கிருபையாலே
நேர்த்தியாயிதைத்தெளிந் தைன்னூற்சொன்னேன்
வாரானதைலத்தின் பெருமைதன்னை
வசனித்தேனின்னமுந்தான் வகையைக்கேளே. 255

கேளடாதைலமதை மண்டலந்தான்
கிருபைபெற்றுக்கொண்டிடவே காயசித்தி
கோளடாவாராது நரையும்போகுங்
கொடியதொருதிரைகளெல்லாம் வாங்கும்பாரு
பாளடாபோகாது நரம்பையெல்லாம்
பப்பரம்போலாக விறுக்கிக்கொள்ளும்
வாளடாநமனுக்கு நமனாய்நின்று
வாழ்ந்திடுவாய் * கற்பாந்தகாலந்தானே. 256

தானென்றதைலமதை வெள்ளிற்செம்பிற்
றடவியேபுடம்போடப் புடத்திலேதான்
வானென்றமாற்றென்ன பத்துமாகு
மைந்தனேயிரும்புமுதற் பழுக்கும்பாரு
கோனென்றசரக்குகளு மெழுதுமாகுங்
கூறுவேன்கட்டினதுமிதுவேயாகும்
ஊனென்றதைலங்கள் செய்யும்போது
ஒழுங்காகவிம்முறைகள் செய்துகொள்ளே. 257

கொள்ளவேவாதமுறை கருக்கிளெல்லாங்
கூறுவேனிருநூற் றைம்பதுக்குள்
அள்ளவேமுப்பூவின் மார்க்கஞ்சொன்னேன்
அனேகமானகுறுக்குவழி பரிசினமுஞ்சொன்னேன்
மெள்ளவே () பூவெடுக்க விவரஞ்சொன்னேன்
வேதாந்தமனோன்மணியாம் பூசைசொன்னேன்
கள்ளமேவாராது இன்னங்கேளு
கருவானசரக்குவைப்பு காட்டுறேனே. 358

துருசுவைப்பு.

காட்டுவேன்வாதத்தி லாதியென்ன
கருவானதுருசுனுடவைப்புகேளுஞ்
சூட்டுவேன் 0 சீனமதுபலந்தானு
துப்பறவாம்வெடியுப்பு பலந்தானு

* கற்பகாலம்-கோடியுகம்.
() பூஇஃது-முதற்குறைமுப்பு
0 சீனம்-படிகாரம்.

கூட்டுவாய்க்கல்லுப்பு சேர்தானெட்டு
குமறவேபொடிபண்ணிச் சொல்லக்கேளும்
பூட்டுவேன்செம்பான பாண்டந்தன்னிற்
பொடித்திட்டுப்பழச்சாறுந்தயிரும்வாரே. 259

வார்த்துமேபழச்சாறு படிதான் 0 ரண்டு
மைந்தனே 0 கரிமேதைத்தயிர்தானென்று
பார்த்துமேசலகைகிட்டுச் சீலைமண்செய்து
பக்குவமாயரையளவு குழிதான்வெட்டி
கார்த்துமேயோட்டைவைத்துக் குதிரைலத்தி
கவியவேதான்மூடி மணலுங்கொட்டி
தூர்த்துமேண்மூடிவிட் டாறுதிங்கட்
டொச்சமறககளந்தபின்பு சொல்லக்கேளே. 260

சொல்லுவேன் துருசென்ற பேருமாச்சு
சொற்பெரியமூலரென்று பேருமாச்சு
வெல்லுவேன்வாதவித்தை தனக்கேயாதி
வேதாந்தசாரமென்று மிதற்கேபாரு
கொல்லுவேன்சூதத்தை யென்றுநின்ற
குடோரமுள்ளமதயானைக் கோவிக்கோவி
மில்லுவேன்சரக்குகளைத் தலைதூக்காமல்
மீரடங்ககட்டுகிற குருவுமாமே. 261

வீரவைப்புத்திரர்வகம்.

சுருவானவீரத்தின் வைப்புக்கேளு
கூறுவேன்வெடியுப்பு சேர்தானஞ்சு
உருவானசீனமது சேர்தானாறு
வுத்தமனேயிதிற்பாதி பொடித்துப்போடு
கருவானதிவையெலலாங் கல்வத்திட்டு
கடுகவரை [] மேனியென்றசாற்றினாலே
திருவானரவிதனிலே காயபபோட்டு
சீர்பெறவேபொடியாக்கிப்பானைக்கேற்றே. 262

எற்றியே ? வாலுகையின்மேலேவைத்து
என்னசொல்வேன்சக்கரமாம் வாலைதன்னை
போற்றியேபாண்டத்திற் கவிழ்த்துநீயும்
புகழ்பெறவேசீலைமண் வலுவாய்ச்செய்து

---

* ரண்டு-வடமொழி.

0 கரிமேதை-கருப்பெருமை.

[] மேனி-குப்பைமேனி.

? வாலுகை-அடுப்பு.

ஆற்றியேமண்ணாலே குழாவைப்பண்ணி
　　அப்பனேவாலையுட் மூக்கிற்சேர்த்து
வாத்தியேயென்தாயைப் பூசைபண்ணி
　　மைந்தனேபனலையிட்டுத்தீநீர்வாங்கே. 263

* வாலை-திராவமிரக்குகிறகுழா யாயுள்ளபாண்டம்

வாங்கையிலேசுத்தவெள்ளி வருகும்பாரு
　　மார்க்கமாய்வீசிவிட்டப்பால்நீயுங்
காங்கையிலேயதிகமானால்நீர்ச்சிவந்து
　　கடகடவென்றேயிறங்கும் பீங்கானுள்ளே
தாங்கையிலேயிவையெல்லாங் குடத்தில்வாங்கே
　　சார்வாகவைத்தபின்பு சொல்லக்கேளு
தூங்கையிலேகண்டதொரு சகுனம்போலச்
　　சொற்பனமாயெண்ணாதே யின்னங்கேளே. 264

கேளடாசூதமதுசேர்தானான்கு
　　கெடிபெறவேயேட்டில்வைத் திராவகத்தைக்குத்தி
சூளடாநெருப்பில்வைத்து வறுக்கும்போது
　　திப்பறவாய்மாவைப்போலாகும்பாரு
கோளடாவாராமற்சீனமூன்று
　　கொடியதொருவெடியுப்புபலமூன்று
வேளடாவெரிந்தசிவன் பூநீற்காலும்
　　|| வெள்ளையென்றபாஷாணம் பலமிரண்டே. 265

ரெண்டானவுப்பதனை வறுத்துப்போடு
　　நேரானசாரமது பலந்தானொன்று
தண்டானதுருசதுவும் பலந்தான்ரெண்டு
　　தான்வறுத்துப்போட்டுவிட் டின்னங்கேளு
தெண்டான்வன்னமென்றபேதிதானுஞ்
　　சேர்க்கவேசொல்லுகிறேன்பலமிரண்டு
குண்டானதிவையெல்லாஞ் சூதத்தூளிற்
　　கொட்டியேதானகலக்கிக் குப்பிக்கேற்றே. 266

எற்றியேவாலுகையின் மேலேவைத்து
　　யென்னசொல்வேன்கமலம்போற் றீயைமூட்டு
போறறியேசெந்தூரம் வைத்தாப்போலப்
　　போக்கோடேமண்ணளவு முருகுமட்டு

---

*தீநீர்-திராவகம்.
|| வெள்ளைபாஷாணம்-சங்குபாஷம்.

மாற்றியேமுச்சாமந் தீயைப்போடு
மப்பனேயடுப்பேற்றி மறுநாள்மூட்டு
தூற்றியேநாலாநாட் பனிரண்டுசாமந்
தப்பறவாய்த்தீமூட்டியப்பால்வாங்கே. 167

வாங்குவதுகுளிரநன்றுயாறவிட்டு
வாகுபெறவடுப்பைவிட்டிறக்கிநீயும்
தாங்குவதுபோலேநீ [] குப்பிதன்னைத்
தானுடைத்துப்பார்த்திடவேயென்னசொல்வேன்
பாங்குபெறதேங்காய்போலிருக்கும்பாரு
பருவமாய்த்தானுதிர்த்துப் பலந்தானெட்டு
ஏங்குவதுபோலேநீ யெண்ணிடாதே
யிதமாகச்சேர்க்கும்வகை யினிமேற்கேளே. 268

இனியதொருசரக்குவகை யின்னங்கேளு
இயல்பானகல்லுப்புப் பலந்தாறு
கனியதொருபூநீறு பலந்தான்ரண்டு
கண்டரென்றதுருசுதான் பலமும்நாலு
வனியனெனுஞ்சீனமது சொல்லக்கேளு
மைந்தனேபலமதுதா னென்றரையுமாகும்
பிணியனென்றுநோய்களுஞ் சாரந்தானும்
போக்கோடேபலமரைதான் புகழாய்க்கூட்டே. 269

கூட்டவேவெடியுப்பு பலந்தான்கேளு
குறையாமலொன்றரையாம் பலமேதூக்கி
வாட்டவேயிவையெல்லாங் கல்வத்திட்டு
வப்பனேதுருசுப்பு வறுத்துப்போடு
காட்டவேயொன்றுமில்லை திராவகத்தினாலே
கனக்கவேயறையாதே மந்திரத்தப்பா
ஊட்டவேசிறுதனலில் வறுத்துக்கொண்டு
உத்தமனேகுப்பிதனி லடைத்திடாயே. 270

அடைத்துமேயரைவாசி மட்டும்போட்டு
அப்பனேவாலுகையில் முன்போல்வைத்து
படைத்துமேமுச்சாமந் தீயைப்போட்டு
பருவமாய்ராக்கால மாறப்போட்டு
விடைத்துமேநாலாநாட் தீயைப்போடு
விபரமுடன்பனிரண்டுசாமமாகு
முடைத்துமேஐந்தாநாட்டன்னினீயு
முற்றுநீபார்த்திடவே வீரந்தானே. 271

[] குப்பி-அரக்குபுட்டி

தானென்றவீரமதை யென்னசொல்வேன்
சதாசிவனார்நெற்றிக்கண் தானேயாகுங்
கோனென்றவீரம்விட்டால் வாதம்போச்சு
கொடியதொருசுண்ணமையா விதனிற்கோடி
தேனென்றபரங்கிவைப்பு தீர்க்கமில்லை
திரும்பவதைமடித்துவைத்தாற்றிரமதாகும்
ஊனென்றவீரத்தின் போக்கைச்சொன்னேன்
உத்தமனேயெத்தொழிலு மிதுதானாமே. 272

ஆகுமேமற்றமற்ற வீரமெல்லாம்
அப்பனேபைத்தியத்துக் காகும்பாரு
மேகுமேயிந்தமுறை வீரந்தானும்
போக்கோடேயெத்தொழிலுஞ் செய்யலாகும்
வேகுமேயிவ்வீரச் சுண்ணமானால்
வெகுசூறுக்குவாதமுறை கைக்குள்ளாகுஞ்
சாகுமேசரக்கெல்லாஞ் சுண்ணமாகுந்
தனித்துநின்றபூரத்தின் வைப்புகேளே. 273

பூரவைப்பு,

கேளடாசூடனது பலந்தானொன்று
கெட்டியாய்ப்பூநீறு பலமதொன்றும்
நாளடாவெடியுப்புக் கழஞ்சிரண்டும்
நாட்டுவாய்கல்லுப்பு கழஞ்சியொன்று
சூளடாசாரமது கழஞ்சிவொன்று
துப்பறவாய்வெண்காரங் கழஞ்சியொன்று
கேளடாவாராமற் கல்வந்தன்னில்
கொட்டியேதானரைக்கக் கூறுவேனே. 274

கூறுவேன்கல்லுப்பைவறுத்துப்போட்டுக்
கொடியதொருசரக்கையெல்லாஞ் சுகமாய்ப்போடு
ஆறவேபசுவினெய் யதிலேகொஞ்சம்
அப்பனேவிட்டுநீ ரவியிற்போடு
ஊறவேசாமமது சென்றபின்பு
உத்தமனேசூடனது பொங்கிநிற்குந்
தேறவேபதமென்று மறுகால்நீயுந்
தீர்க்கமாஞ்சூடனதிற் கழஞ்சிபோடே. 275

போட்டுபுழுகதிலே கழஞ்சிகூட்டிப்
பொங்காமல்நெய்யைவிட்டு மறுகாலாட்டு
ஊட்டுமேயுறுதியா யாட்டிக்கொண்டு
உத்தமனேசாமமது சென்றபின்பு

நாட்டுமேகாசியென்றமேருக்கேற்றி
நாதாந்தசத்தியைநீபூசைபண்ணி
தேட்டுமேயிதைவிட்டாற்றேட்டமுண்டோ
சிவசிவாதாளிதனில்மணலைக்கொட்டே. 276

கொட்டியேநானுவிரற்கனந்தானப்பா
கூறுவேன்கல்லுப்பைப்பொடியாய்ப்பண்ணி
ஊட்டியேநெற்கனமாயதின்மேலிட்டு
உறுதிபெறக்குப்பிதனைநடுவில்வைத்து
கட்டியேமணலையதின்கழுத்துமட்டுங்
கனக்கவேசொப்பனிட்டுசொல்லக்கேளி
பட்டியாத்திரியாதேகுப்பிவாயை
பழக்கமாய்த்திரிந்துநீவைத்திடாயே. 277

வைத்திட்டுவாலுகையிற்றீபம்போல
மைந்தனே () கடிகையதுசென்றபின்பு
பொய்த்திட்டுப்போகாதுபுகைமேற்செல்லும்
பொருமியேகுப்பிவாயுடைத்துப்போகுங்
கைத்திட்டமாகவேதான்கமலத்தீயாய்க்
கவனமாய்ப்போட்டுவிடுசாமமூன்று
மெய்த்திட்டமாகவேதான்னல்தான்மீறி
வெடித்துவிடுங்குப்பிரியதுவீழ்வாய்ப்போமே. 278

போகாமற்பத்திரமாயிந்துக்கொண்டு
பூரணியையமனதில்வைத்துதியானஞ்செய்து
ஏகாமற்சரக்குகளைப்பார்த்துகொண்டு
என்மக்காள்கவனமதாயிருந்துகொண்டு
சாகாமனின்றதொருதலையுமாகுஞ்
தண்ணுமடாசரக்குகளையிந்தபுரம்
வேகாமற்சரக்குகளைவேகவைக்கும்
வெகுசுருக்குச்சுண்ணத்துக்காதியாமே. 279

ஆதியாங்குப்பிதனையாறப்போடு
அப்பனேயுடைத்துபார்பூரந்தானுஞ்
சோதியாமிளந்தேங்காய்போலநிற்குஞ்
சொல்லுவேனிதன்பெருமைசுண்ணத்தாதி
வாதிகளேயிதையெடுத்துவைத்துக்கொண்டு
மகத்தானசரக்குகளைச்சுண்ணம்பண்ணு
பாதியாய்நின்றதொரு () மதியைச்சூடும்
பரனெனக்குச்சொன்னவித்தைபார்த்தோநாமே. 280

() கடிகை-நாழிகை
() மதி-சந்திரன்

குடோரிவைப்பு.

பார்த்துமேசொல்லுகிறேன் * குடோரியொன்று
படிகபாய்வெடியுப்புநாவாங்காச்சற்
சேர்த்துவெண்காரம்பூநீற்கூதங்
திறவான 0 வெள்ளையொடுதாளகமுஞ்சாரம்
வார்வதுமேகல்லுப்புவகையொன்றுக்கு
வப்பனேபலமததானுலுங்கூட்டி
ஏர்த்துமேகல்லுப்பைவறுத்துப்போடு
இதமானரேக்கதிலேகழஞ்சுகூட்டே. 281

கூட்டவேவீரமதிற்கழஞ்சிக்கூட்டிக்
கொட்டியேயிவையெல்லாங்கல்வத்துள்ளே
நாட்டவேயெருக்கன்பாற்றன்னைவிட்டு
நலமாகவரைத்துவிடுசாமம்நாலு
ஆட்டவேவெருக்கனுடபழுப்பின்சாற்றல்
அரைக்கவேநாலுசாமமரைத்தபின்பு
வாட்டவேரவிதனிலேஊரவைத்து
மைந்தனேகாசியென்றமேருக்கேற்றே. 282

ஏற்றவேவாலுகையின்மேலேவைத்து
என்னசொல்வேன்தீபைவிடுகமலம்போலே
போற்றியேபன்னிரண்டுசாமமானுற்
பொருந்திநின்றபதமொன்றுநெளிப்பையாற்றி
மாற்றியேகுப்பிதனையப்பால்வாங்கி
மைந்தனேயுடைத்துப்பார்தேங்காய்ப்போலாம்
ஆற்றியேமஞ்சளுடரேக்கைப்பற்றி
யதிலிருக்குங்குடோரியைநீ யெடுத்துவையே. 283

எடுத்துநின்றகுடோரிதனைவாத்தான்முன்னே
இதமாகவைத்துநீபூசைபண்ணே
தொடுத்ததொருசரக்குகளைக்கரைத்துநீருய்ச்
சோதிபெறசக்திலதாய்ச்சவுலையாடு
மடுத்ததொருகுடோரிசென்றகாரமாகு
யப்பனேயிதன்பெருமையாருஞ்சொல்லார்
விடுத்ததொருசரக்கிதுதானுருக்கினத்துக்காதி
விபரமிதிற்சொல்லிவைத்தேன்விளம்பக்கேளே. 284

---

* குடோரி-கொடோரிபாஷாணம்

0 வெள்ளை-சங்குபாஷாணம்

சூடன்வைப்பு.

கேளடா || சூடனுடவைப்புதானுங்
கீர்த்தியாய்ச்சித்தர் சொல்லவேயான்
நாளடாவாழையைத்தான்வெட்டிப்போட்டு
நலமாக்கிழங்குதனைக்குடைந்துவைத்தாற்
சாளடாமறுநாட்டானுற்றுப்பாரு
சலமதுதான்னிறம்பிநிற்குமெடுத்துக்கொண்டு
வாளடாபடிதானுமிருபதாகு
மைந்தனேயெடுத்துநீபாண்டத்தூத்தே. 285

ஊத்தடாசெப்பினுடபாண்டந்தன்னி
லூத்தமனேவெடியுப்புஜந்தாங்காச்சல்
சேத்தடாவுப்பதுதான்மிறிக்கக்கேளுந்
திறமையாயுப்புத்தான்பாண்டத்திட்டு
வாத்தடாகாடியதுயமுங்கவிட்டு
மைந்தனேருங்கிலியம்பத்துக்கொன்று
பாத்தடாவெள்ளையாயெடுத்துக்கொண்டு
பக்குவமாயுருக்கியதிலிட்டிடாயே. 286

இட்டுமேயடுப்பிலிட்டுக்காய்ச்சும்போது
இதமாகக்குழம்பதுபோற்பதத்தைப்பார்த்து
தொட்டுமேயெலுமிச்சம்பழத்தின்சார்
சுருக்கிடவேகுத்திநீகாய்ச்சும்போது
கட்டுமேஉலையதனிற்கருதிப்பாரு
கனக்கவேயுரைந்துவிடும்பதமென்றேதாம்
போட்டுமேபுதுசட்டிதன்னிலேதான்
புகழ்பெறவேயூற்றிவிடுயுப்புநீரே. 287

நீரிட்டசட்டியைத்தான்மூடிப்போடு
நிறைந்துமேமூன்றுநாளானபின்பு
காரிட்டவுப்பதுதானென்னசொல்வேன்
கம்பியென்றால்பெருங்கம்பியாகும்பாரு
சீரிட்டவுப்பதனைக்காயப்போடு
தீர்க்கமாயெட்டுசேர்நிறுத்துக்கொண்டு
வாரிட்டவாழையுடஜலத்திலேதான்
மைந்தனேகலக்கிவிடுவகையிதாமே. 288

வகையானதொன்றுமில்லைபாண்டந்தன்னை
மைந்தனேயடுப்பில்வைத்துகாய்ச்சும்போது

|| சூடன் கருப்பூரம்.

இகையானகருவாப் பட்டைதன்னை
யிதமதாகத்தானெடுப்பாய் வீசையொன்று
துகையானவிதையிடித்துப்பாண்டத்திட்டு
துப்பறவாய்க்காடியதுதுணிபிட்டு
பகையில்லாவெல்லமொடாபனையின்வெல்லம்
பாங்குடனேசேரிரண்டுபார்த்துப்போடே. 289

போட்டுமேகலக்கிநீயூரப்போட்டு
போக்கோடேமத்தைவிட்டுக்கிண்டும்போது
ஊடுமேகையிடையிற்சிறியதானால்
உத்தமனேமறுபாண்டம்தன்னிலூற்றி
காட்டுமேயடுப்பிலிட்டுப்பாளைமூடி
கவிழ்த்தியேகுழையிலிட்டுவாங்குவாங்கு
நீட்டுமேதிராவகம்போலிறங்கும்பாரு
திறமானபீங்கானிற்பதனம்பண்ணே. 290

பண்ணவேமுன்னுரைத்தவாயைநீர்தான்
பற்றியேவருகையிலேதிராவகத்தைவாரு
எண்ணவேபடிரண்டுகூடவாரு
யிதமாகக்கிண்டியேமூடிப்போடு
கண்ணவேகாற்றில்லாவிடத்திலேதான்
கனமதாய்மூடியடாசெல்லக்கேளு
வண்ணவேயொன்பதுநாட்கழிந்ததானால்
வாங்குபெறத்திறந்துபார்சூடனுமே. 291

ஆகுமேயாலாத்திப்பூரமாச்சு
அப்பனேயதைக்கட்டவாராலாகும்
போகுமேசுண்ணமென்றகட்டுக்கெல்லாம்
போக்கோடேபாரையுப்புபண்ணினுக்கால்
எகுமேதலையென்றுமிதற்குப்பேரு
தாகுமேயக்கினியாங்கூர்மாச்சு
சச்சிதானந்தவெளிதானேபாரே. 192

அஞ்சனபாஷாணவைப்பு.

தானென்றவஞ்சனமாம்பாஷாணத்தைச்
சாற்றுவேன்வகைவிபரமாகக்கேளு
ஊனென்றரசமதுதான்பலமுமெட்டு
உத்தமனேசந்தியதுபலமிரண்டு

வானென்றகெந்தகத்தையோட்டிவிட்டு
மைந்தனேவுருகையிடலரசத்தைக்கொட்டித்
தேனென்றகுச்சியினாற்கிண்டும்போது
சிவந்துமேகரியாகவிருக்கும்பாரே 29௪

பாரேநீரசத்தூளைக்கல்வத்திட்டு
பருங்கம்பிவெடியுப்புப்பலமிரண்டு
காரேநீதாளகமும்பலமுமொன்று
கருவானவாள்காட்டிமுட்டைநீரால்
வாரேநீகல்வமதிற்றிரட்டிக்கொண்டு
மைந்தனேரவியில்வைத்துப்பொடியாய்ச்செய்து
ஆரேநீவயத்தாற்குப்பிதானும்
அப்பனேலேசாயடித்திடாபே. 294

அடித்துமேயொருசீலைமெதுவாய்ச்செய்து
அதனிலேரசத்தூளைக்கொட்டுவாய்நீ
பிடித்துமேதாளியிலேமணலையிட்டுப்
பேசாதேகுப்பிவைத்துவாயைமூடி
துடித்துமேதிரியாதேகமலத்தீயாய்த்
தோணவேபனிரண்டுசாமந்தானுங்
கடித்துமேதோளேர்வதுபோலேதானுங்
கட்டுமடாலேசாகப்பதங்கமாமே 295

ஆகுமேகுப்பியைத்தாநப்பால்வாங்கி
அதிதனக்குநீர்தெளித்தாறப்போட்டு
போகுமேகுப்பியைநீயுடைத்துப்பாரு
பொன்போலேபதங்கமதுமேரிகிற்குந்
தாகுமேயிதன்பெருமைசொல்லக்கேள்நீ
சார்வானவஞ்சனபாஷாணந்தான்
எதுமேபாண்டமதுயிருப்புத்தொட்டி
யினதடியில்நின்றதுரத்தம்பாரே. 296

சிங்கிவைப்பு

பாரேநீயின்னமொருதொழிலைக்கேளு
பாங்கானசிங்கியுடவைப்புதன்னை
சேரேநீகாரியஞ்சொல்லக்கேளு
திறமையாய்ப்பலமதுதானிருபதாகும்

நேரேநீகந்தகந்தான்பலமுமஞ்சு
நேரானவெடியுப்புரண்டரைப்பலந்தான்
வாரேநீதாளகமும்பலமிரண்டு
மைந்தனேவிதுவெல்லாம்பொடியாய்ப்பண்ணே. 297

பண்ணியேயியமதையோட்டிவிட்டுப்
பக்குவமாயடுப்பினில்வைக்கும்போது
கண்ணவேபொடிகளைநீதூவித்தூவிக்
கருகவேகருங்கிரிவிடியஞ்சாக
எண்ணவேயிவையெடுத்துக்கல்வத்திட்டு
விதமாகப்பொடிப்பண்ணித்தோண்டிவிட்டு
சொன்னதொருமேல்மூடிச்சீலைசெய்து
துடியாகவாலுகையில்வைத்திடாயே. 298

வைத்துமேபனிரண்டுசாமந்தீயை
மைந்தனேசலம்போலெரிநேர்ப்பாகப்
பொய்த்துமேபோகாதுயப்பால்வாங்கி
பூரிப்பாய்ச்சலமதனைத்தெளித்தேயாற்றி
அய்த்துமேபேசாதேயுடைத்துப்பாரு
அப்பனேசிறுகம்பிபோலேநிற்கும்
நைத்துமேதானெடுப்பாய்மஞ்சள்வன்னம்
நாதாக்கண்மகிமையிதிலாட்டுந்தானே. 299

ஆட்டானசிங்கியைத்தான்மெழுகுபண்ணு
அப்பனேசுன்னமதுவாகச்செய்நீ
பாட்டானதொன்றுமில்லைசிங்கிவிட்டால்
பாரிக்கும்வெகுகோடிதொழில்களாகுந்
தேட்டானதொன்றுமில்லைசிங்கிவிட்டால்
சிவசிவாரசந்தனக்குவழியுமாகும்
மூட்டானதொன்றுமில்லையென்பதாய்பூசை
முதன்மையாய்ச்செலுத்திடவேசித்தியாமே. 300

கற்பம்.

சித்திக்குமின்னமொருதொழிலைக்கேளு
திறம்பெறவேசொல்லுகிறேன்கற்பந்தன்னை
முத்திக்குஞ்செங்கடுக்காய்கொண்டுவந்து
முறைமைபெறச்சிறுநீரிலூறப்போட்டு
சுத்திக்குமிதுநல்லதாகுமாகுந்
தாள்பண்ணிக்கலசமதிலடைத்துக்கொண்டு

பத்திக்கும் * வெருகடிதான்வெந்நீரிற்கொள்ளு
பருவமுடன்மண்டலங்கொண்டுதேறே. 301

* வெருகடி-பூனையடியதே மூவிரற்பிரமாணம்.

கொண்டுமேயானபின்புசொல்லக்கேளு
கூறுவேன்மிளகதனைபெரிதாய்ப்பார்த்து
தண்டுமேரவநீர் ஊறப்போட்டுத்
தாக்கடாமிளகதனையஞ்சதாகப்
உண்டுமேதினந்தோறுமிந்தபாகம்
உத்தமனேயிருபதுநாலூறுமாகும்
பண்டுமேயைந்தாகக்குறைத்துவாநீ
பக்குவமாய்ச்சொல்லுகிறேனின்னங்கேளே. 302

கேளடாமிளகதுதான்கொள்ளும்போது
கிருபைபெற * வமுரியுடன்சேர்த்துக்கொண்டு
கேளடாவாராமலமுரிதன்னை
குறிப்பாகத்தேத்தாநின்வித்தைவிட்டு
பாளடாபோகாமலுப்புச்சுண்ணம்
பரிவாகவிராகனிடைகூடப்போட்டு
வாளடாதேய்த்துவிடுதெளிந்துபோகு
மைந்தனேகற்பத்துக்குறுதியாமே. 303

* அமுரி-மூத்திரம்.

உருதியாயிப்படியேசெய்துகொண்டு
உத்தமனேகொண்டுவாநீகாலைநேரம்
பருதியாய்காலையிலேசூரணந்தானுண்ணு
பக்குவமாய்ச்சொல்லுகிறேன்பாகங்கேளு
கருதியாய் § கரிசலைகுப்பைமேனி
கனசெருப்படைவிடைத்தலைவேரும்
அருதியாம்பொற்கொன்றை ¶ காந்தையோடு
அப்பனேதாதுவளையாகுமெண்ணே. 304

* கரிச்சாலை-கரசலாங்கண்ணி,

* கரந்தை-முதற்குறைசிவகரந்தை.

எண்ணவேவல்லாரையைங்கோல்வித்து
இதமானசாதிக்காய்பத்திரியுங்கிராம்பு
சொன்னதொருசரக்கெல்லாமூலாவைத்துச்
சொற்பெரியமந்தாரைவெள்ளைப்பூவும்

அன்னமேமல்லிகைப்பூசிலப்பனையின்கிழங்கு
அப்பனேவகையொன்றுபலமொன்றாகப்
பண்ணவேசூரணமாய்ச்செய்துகொண்டு
பாலகனேயெட்டிலொன்றுகற்கண்டைக்கூட்டே. 305

கூட்டியேவெருகடிதானெடுத்துக்கொண்டு
குலமானமுட்பன்றிநெய்யதனாற்
ஆட்டியேகொண்டுவிடுமண்டலந்தானென்று
அப்பனேமாலையென்றநேரந்தன்னில்
நீட்டியேகபலையின்குளகுகற்பம்
நினைவாகக்கொண்டுவரபருவஞ்சொன்னேன்
வாட்டியேதிரேகத்திலுள்ளநீரை
வாங்கியேயிறக்கிவிடுமைந்தாபாரே. 306

பாரேநீவாதபித்தம்பிரிந்துபோகும்
பார்க்கையிலேபித்தமதுபறந்துபோகும்
காரேநீசிரசினின்றகற்பகத்தைச்சாடுங்
கனமானகோழையதுகழன்றுபோகும்
வாரேநீயமூர்தமதுபெருகியூறும்
மைந்தனேநரம்பெல்லாமிறுகும்பாரு
சேரேநீவிந்துவதுமணிபோலாகும்
திறமையாமாயத்திற்சிக்கொணாதே. 307

சிக்காமலப்புறத்தில்நின்றுகொண்டு
தினந்தோறும்வாசியுடதாரணையைப்பாரு
தாக்காமல்போகுமடாபிரபஞ்சந்தான்
தன்மையாய்ச்சொல்லிவைத்தேனிந்தநூலிற்
பார்க்காமற்கெட்டார்களுலகத்தோர்கட்
பாழானமனதையெங்குவலையொட்டாதே
சேர்க்காமல்சேர்க்குமடாசித்தரோடே
சென்றபின்புசித்தரென்றபேருமாமே. 308

பேரானரோமனுடபிள்ளையென்று
பெருமைபெற்றுக்கொண்டுநீவந்தாயானாற்
கூராகுமெந்தனுக்குக்கீர்த்தியுண்டு
கூப்பிடுவேனுன்னையுந்தான்பிள்ளையென்று
ஆராகுஞ்சித்தருடநூலைப்பார்த்து
அங்கங்கேதேறுவதயருமைமெத்த
சீராகுமென்னாலோகுருவுமாகுஞ்
சித்தருக்குமெத்தொழிலுந்திரமாய்த்தானே. 309

திறமானகற்பமொன்றுசொல்லக்கேளு
சிவசிவாருத்திரனென்றகற்பமாகும்
முறமானசீந்தியடாபெரிதாய்ப்பாரு
மோகோகோவேரையுநீயுள்ளேதோண்டி
நிறமானவேராண்டுமெட்டுமானுள்.
நேரானகணேசனைப்போற்கிழங்குதோன்றுஞ்
சலமானவாசியைநீ யுள்ளேபூட்டித்
தம்பித்தேவாலேயைநீதியானம்பண்ணே. 310

பண்ணவேயென்தாயார்கிருபையாலே
பதனமாய்கிழங்குகளையெடுத்துக்கொண்டு
உண்ணவேமேற்றோலேச்சீவிப்போட்டு
வுறுதிபெறப்பாக்கதுபோற்றுண்டுபண்ணி
எண்ணவேநிழலுலர்த்தாலுலர்த்திக்கொண்டு
இடித்துமேதூளாக்கியப்பாற்கேளு
சண்ணவேயெட்டிலொன்று ¶ சீனிதானுஞ்
சரிகூட்டிரேகித்துயப்பால்வையே. 311

¶ சீனி-சருக்கரை.

வையென்றசூரணத்தையந்திசந்தி
மைந்தனேகொண்டுவரவிபரம்கேளு
பொய்யென்றுபோகாதேசீந்திற்றண்டை
போக்கோடேமேற்றோலேயப்பால்வாங்கி
நையென்றுதட்டியேபலமுமொன்று
நாட்டடாபடிநீருமளந்துவிட்டு
மெய்யென்றுமனதில்வைத்துத்தியானஞ்செய்து
விரவியேயெட்டொன்றாய்க்காட்டிடாயே. 312

காய்ச்சியதோர்கியாழத்திற்சூரணத்தோடொக்க
கருதியேகொண்டுவரமண்டலந்தானப்பா
பாய்ச்சியதோர்நரைதிரைகளெல்லாம்போகும்
பக்குவமாய்க்காயசித்திக்கிதுவேயாகும்
தாழ்ச்சியில்லேபொருளைநீகண்டாயானல்
சாவில்லேயுந்தனுக்குத்தாழ்வராது
வாய்ச்சியெனுமென்தாயார்கிருபையாலே
வருண்மீறும்பொருண்மீறுமறிந்துபாரே. 213

சதுரக்கள்ளிக்கற்பம்.

பார்க்கவேசித்திக்குஞ்சாவோயில்லே
பரிபாஷைக்கருவாகச்சொன்னார்பாரு

ஏர்க்கவேயிந்தமுறை கற்பந்தன்னை
யிணக்கமாய்ச்சொல்லிவைத்தா னிடையில்லாமற்
சேர்க்கவேகற்பத்தை யுண்டபின்பு
திறமானகற்பமொன்று சொல்லக்கேளு
தீர்க்கமாமன்மதனைக் காட்டிற்றானால்
திரமானசதுரமாங் கள்ளிக்காயே. (314)

காயனதொன்றுமே பலமொன்றுக்குக்
கைத்தாழஞ்சோறு மாகுஞ்சலமூன்றுந்
தாயானகடுக்காய்தான் பலமுமொன்று
தப்பாமல்விரைப்போக்கிட் பொடித்துக்கொண்டு
சேயானகைதன்னான் பிசைந்துக்கொண்டு
திறமையாய்வடிகட்டிச் சலத்தைவாங்கி
மேயான*யேரண்டத் தெண்ணெய்தானு
முருகழஞ்சுவிட்டதிலே யிதமாய்க்கொள்ளே. (315)

0ஏரண்டம்-ஆமணக்கு.

கொள்ளவேமலமொதுங்கத் தள்ளிப்போடுங்
கொடுமையென்ற0 வழலையெல்லாங்கக்கும்பாரு
மெள்ளவேபால்கஞ்சி வைத்துக்கொள்ளு
மேல்நின்றபித்தமெல்லாங் கீழேசாடுங்
கள்ளமொன்றுவாராது மலங்கடன்னை
கண்டிப்பாய்க்கழண்டுவிடுங் கருத்தாய்ச்சொன்னேன்
பள்ளமென்றபடிகுழியில் வீழ்ந்தாயானாற்
பயனறியக்காமமது கொல்லும்பாரே. (316)

0;வழலை-உப்பு.

மாரப்பாகற்பவிதி சட்டைநாதர்.
பாடிமதோர்சாஸ்திரந்தான் மெத்தநன்று
தேரப்பாவன்னாலு மின்னாலும்பார்
திறமாகுங்கற்பவிதி யுறுதிமெத்த
ஆரப்பாவெங்களைப்போல் சொல்வாரில்லை
அவரவர்களனேகவித்தை யாகச்சொன்னார்
காரப்பாகற்பங்கட் காணமாட்டார்
கருத்துவைத்துயிந்நூலைப் பாருபாரே. (317)

பார்க்கவேபத்தியத்தைச்சொல்லக்கேளு
பருவமுடன்புகையாகா புளியுமாகா
ஏர்க்கையிலேயுப்பாகா வெண்ணெயாகா
யிதமானபெண்ணோடு சுண்ணாம்பாகா

சேர்க்கையிலேமோராகா துவற்பமாகா
தீர்க்கமாய்கடுகாகா || உள்ளியாகா
தார்க்கையிலேநித்திரையும் கோபமாகா
தனிநாட்டகுறிதனிலே சார்ந்துநில்லே. 318

* உள்ளி-வெள்ளைப்பூண்டு.

நில்லென்றுலொருமனதாய் நிற்கவேணும்
நிலையானமவுனத்தைக் காணவேணும்
வெல்லென்றால் மனதரிவை வெல்லவேணும்
வேதாந்தசாஸ்திரத்தைக் காணவேணும்
பல்லென்றால்ஞானவிதி கற்கவேணும்
பன்மமென்ற ரசத்தைத்தள்ளவேணும்
இல்லென்றால்வையத்தை தோய்ந்துபோகும்
இதுதனுக்குவிசைவருவோ விண்ணுள்ளோர்க்கே. 319

உள்ளபடிசொல்லுகிறேன் கற்பத்துக்கு
உறுதிபெறப்பத்தியத்தைச்சொல்லக்கேளு
கள்ளமொன்றும்வாராது பசுவினெய்யாங்
கருகியதோர்பாலாகுந் தேனுமாகும்
விள்ளவேசிறுபயறு முறுங்கையாகும்
வெள்ளையென்றவழுதலைங்கா யிவைகளாகுங்
கொள்ளவேதூதுவேளை யிலையுமாகுங்
கூட்டுவாய்நெல்லிக்கா யவரக்காயே. 320

காயானபீர்க்கங்காய் பொன்னாங்கண்ணி
கருவாடுசிறுகீரை கஞ்சாவாகுந்
தாயானவெள்ளாடு காடையாகுஞ்
சாற்றுவேன்வல்லாரை முயலுமாகுங்
பாயானமானாகும் பறையுமாகும்
பக்குவமாப்பானைவெல்லவஸ்துவாகுஞ்
சேயானபிள்ளைகளா யுங்களுக்குத்
தீர்க்கமாய்ச்சொல்லிவைத்தேன்றிறமாய்த்தானே.

திறமானபத்தியத்துக் கழுதுகேளு
தீர்க்கமாய்க்கருங்குருவை நெல்லுக்குத்தி
உறமானவரிசியது வரியில்லாமல்
உத்தமனேதீட்டியதை வைத்துக்கொண்டு
திறமானகையதனால் சேரவாங்கி
தீர்க்கமாய்ச்சமைத்துநீ யொருபோதுண்ணும்

பரமானபராபரத்தைப்பூசைசெய்து
பாங்காகவொருபோதுவெந்நீர்கொள்ளே. 322

கொள்ளவேபழமாகுஞ்சீனுபாகுங்
கூறுவேனிப்படிநீபத்தியத்தையுண்டு
விள்ளவேவேண்டாங்காணூர்க்காணூம்
வேதாந்தவாலையைநீநித்தம்பூசி
வள்ளவேஞானமென்றவமூர்தந்தன்னை
வாகாசபரவெளியிலமர்ந்துநில்லு
தெள்ளவேவேணுமடாலோகவாழ்க்கை
சச்சிதாநந்தவெளிதன்னினில்லே 323

தன்னிலையைத்தானறிந்துபார்க்கவேணுஞ்
சதாநித்தியங்குருபதத்திற்சாரவேணூங்
கண்ணிலேமனக்கண்ணேபார்க்கவேணுங்
கவனத்தார்கெவுனமதிற்சொல்லவேணும்
மென்னிலையைநீயறிந்துவருகவேணு
மென்குருவாம்புசண்டருடகிருபைவேணும்
முன்னிலைக்குகற்பமறிந்துண்ணவேணு
மூர்க்கருடன்கோபத்தைத்தள்ளுதள்ளே. 324

மூதண்டகியாழம்.

தள்ளடாகற்பமதுண்ணும்போது
சரீரத்தில்வெட்டையதுமீறிற்றானகில்
கொள்ளடா 0 மூதண்டகியாழந்தன்னை
கூறுவோமறுகன்வேர்பிடிதானென்று
விள்ளடாமிளகதுதானிருபத்தஞ்சு
விசிதமாய்ப்படிசலத்திற்கூடப்போட்டு
தள்ளடாகியாழமதாழாக்கானல்
தேவாகவெண்ணெயிட்டுக்கொண்டிடாயே. 325

0 மூதண்டக்கியாழப்-அறுகுவேர்க்கியாழம்.

தலைமுழுகத்தைலம்.

கொண்டுவிடுபோக்களவுவெண்ணெயிட்டுக்
குடிலமென்றகுதிப்பெல்லாம்மடங்கிப்போகுங்
கண்டுகொள்ளுந்தலைமுழுகவரிசைகேளு
கனமானமிளகுடனேகடுக்காய்நெல்லி

உண்டுகொள்ளுசாதிக்காய்மஞ்சள்வேம்பு
வுக்தமனேபருப்புடனேமஞ்சள்கூட்டி
பண்டுகொள்ளுவாவின்பாற்நன்னுலாட்டி
பக்குவமாய்க்காச்சியதைமுழுகுவாயே 326

முழுகவே 0 பட்சமதுதனக்குநீயு
முறைமையுடன்வாரமதில்நெய்யுமூழ்கு
தமுகவேமாதரிடஞ்செல்லவேண்டாஞ்
சண்ணுமடாமாய்க்கையைநீதள்ளுதள்ளு
நழுகவேமாயத்திற்சென்றுயானல்
நன்றுகச்சண்ணுமடாமருந்துதானுங்
கழுகவேமனக்கசடுசுத்தியாகுங்
கன்மவினைதனைப்போக்குங்கண்டுகொள்ளே. 327

0 பட்சம்-பதினைந்துநாள்.

கண்டுகொள்ளுமிப்படியாகசித்தி
கருத்தில்வைத்துமனம்பிரக்கச்செய்தாயானல்
உண்டுகொண்டமூர்தமதையிருக்கலாகு
மொருவருஷமொருநாட்போலுனக்குதோணு
பண்டுசெய்பாழ்வினைகளெல்லாம்போகும்
பரமகுருபாதமதைக்காணலாகுந்
திண்டுமுண்டுசெய்யாதேமகனேநீயுஞ்
சிறப்பாகபதமிலேசேர்த்துநில்லே. 328

நில்லென்றன்மனக்குரங்குநிற்கொட்டாது
நினைவணங்கிமவுனத்தியானஞ்செய்நீ
கல்லென்றுற்கறையுமடாயெந்தநூலுங்
கருத்தறிந்துபாருநீகருவுந்தோணுஞ்
சொல்லென்றர்கோடிக்கொன்றேயாகுஞ்
சொன்னலுந்தெரியாவிட்டாளென்னசெய்வேன்
சொல்லென்றுற்பிரபஞ்சமுன்னைச்சொல்லுங்
கூடுதற்குமவுனத்தைகூறுவேனே. 329

கூறுமேமவுனமென்றஞானந்தன்னைக்
கூனதாற்சித்தரென்னூ ளொலித்தார்பாரு
சாறுவேன்மவுனத்தைசிக்கில்லாமற்
றுணிருந்தண்டமதின்மனதைப்பூணுங்
சாறுவேன்பண்பரிசார்மூலத்துள்ளே
கண்டுபாரசாரவடியனுவேயாகுஞ்
சேறுவேனென்றுசொல்லியகாரமேலே
செழுகதலவுச்சியிலேசேர்ந்துநில்லு 330

நிற்கையிலேமகாரமதுயண்ங்ணுதுகாணும்
மினைவையதிலோட்டையிலேநின்மயமாய்போச்சு
சொன்னமதுசாவில்லையுறுதியாச்சு
பார்க்கையிலேயொன்றுமில்லைபிரபஞ்சந்தான்
பரவெளியிலுன்மனதைப்பதியவைத்து
பார்க்கையிலேமகாரமென்றவெழுத்தைநீயுங்
கட்டாகவுச்சிநடுமையந்தானே. 331

தானென்றஞானமதுகோடியுண்டு
சமுசியங்கடீராதுசார்வுங்காணர்
ஊரென்றஞானங்கலொன்றுமில்லை
யொளித்தார்கட்சித்தரெல்லாம்பேசிக்கொண்டு
சேனென்றவமுர்தமென்னுவிந்துவிந்து
தின்றவனேசிவயோகிசித்தன்ஞானி
வானென்றமனதையல்லோவமுர்தத்துள்ளே
வாக்கினால்சிவயோகிசுத்தனுமே. 332

சித்தனென்றுபேர்படைத்தெனால்கள்பாரு
சிவசிவஞானவெளிதிறவுகோலார்
பத்தனென்றுலுயிர்காத்தோனவனேயோகி
பாரமலநின்றவனேயோகியாகும்
முத்தமென்றுபேர்படைத்துநின்றோனுசான்
மூர்க்கமுள்ளகோபத்தைகடந்தவனேயோகி
வத்தமென்றவாழ்வுதனைக்கடந்தோன்ஞானி
வாகனத்தின்பொருடனையறிவிப்போமே. 333

மவுனபெருமை.

அறிவிப்பேன்வானகத்தின்வெளியிற்குள்ளே
யரனிருக்குமிடமாகுமறிந்துபாரு
தெரிவிப்பேன்வகாரமென்றவெழுத்தைநீயுந்
திறமாகச்சங்கலிப்போன்மாட்டிக்கொண்டு
நெருவிப்பேனென்றுசொல்லுமனத்தைப்பூட்டு
நேருபடும்பரவெளியும்நிமிஷத்துள்ளே
தருவிப்பேன்வமுர்தத்தைமகாரம்வைத்துச்
சங்கிலியின்வழியிழுக்கத்தருகும்பாரே. 334

தருகுமேஞானமென்றவழிக்குமப்பா
சார்வானமனமொன்றேஞானம்ஞான

முருகுவேமனக்குரங்கைவெளிவிடாம
லூட்டடா அகார நுணிவுச்சிமீதிற்
பெருகுமேயமுர்தமதுயென்னசொல்வேன்
பிரளுமடாகரைகடந்துவெள்ளம்போலே
வருகுமேயோகமிதன்மவுனஞான
மனம்விட்டாலொன்றுமதுவந்திடாதே. 335

வந்திடாதென்றுசொல்லிபலவிதந்தான்
மாட்டினார்சாத்திரங்களனேகங்கோடி
முந்திடாதென்றுசொல்லிசொன்னதெல்லாம்
மோசமடாமனதுரிதியாகுமென்றுஞ்
சிந்திடாதென்றுசொல்லியமுர்தங்கொண்டார்
நீக்கமடாமனதுவேகுருவேயாகுங்
வெந்திடாதிடமல்லோமவுனமாகும்
வெருளாமலோரிடத்தில்நின்றுலசித்தே. 336

சித்தானமனந்தன்னைசித்திசெய்ய
தீர்க்கமாய்ச்சொல்லுகிறேனின்னங்கேளு
வித்தானமனமதனையறிவினாலே
விசிதமாய்பிடித்திழுத்துயகாரத்துள்ளே
முத்தானமகாரமென்றசங்கிலியினாலே
முட்டோடேவரிந்துசுட்டி அகாரத்துள்ளே
சுத்தானதடுமையங்கட்டிவைக்க
சுருதிமுடிஞானமென்றுசொல்லலாமே. 337

சொல்லிவிட்டேன்ஞானமெல்லாமவுனத்தாலே
சொற்பெரியவறுவுகருக்கவிடதமாம்
வல்லியெனுங் 0 திரோதாயின்மாய்கைபோச்சு
மயக்கமென்றவறிவெல்லரமாண்டுபோச்சு
கொல்லிமலைதனிலேறியென்னசெய்ய
குடிகொடுத்தபரமதுவந்துகூடுஞ்
சல்லியமெனவெண்ணாதேஞானந்தன்னைச்
சார்ந்தாக்கலுந்தனுக்குச்சாவுபோச்சே. 338

0 திரோதாயி பஞ்சசந்தியினாலென்று

பூரணலேகியம்.

போச்சென்றுசொல்லிவைத்தேனின்னங்கேளு
போக்கோடேபூரணத்தின்லேக்கியந்தான்மைந்தா
போச்சென்றசடைக்கஞ்சாகொண்டுவந்து
பிசைந்தெடுத்துகுச்சிவிரைதன்னைப்போக்கி

ஆச்சென்றுதிருநீற்றின்பச்சைதன்னை
யப்பனேகொண்டுவந்துசாறுவாங்கி
நீச்சென்றுவதைத்துவதைத்துகாயப்போடு
நீதிபெறசூரணமாய்ச்செய்துகொள்ளே. 349

கொள்ளவேசூரணத்தையப்பால்வைத்து
கூறுவேன்பாலிதுக்கின்னங்கேளு
விள்ளவேயாவின்பால்வெள்ளாட்டுப்பால்
விதமானபுங்கம்பால்பனம்பாலோடு
மெள்ளவேதேங்காய்ப்பாலத்திப்பாலும்
மேன்மையாய்வல்லாரைசீந்திற்போடு
தெள்ளவேகையாஞ்சார்வகையொன்றுக்கு
தீர்க்கமாய்படியரைதான்வீரஞ்சேரே. 340

சேர்க்கவேசொல்லுகிறேனிதையெல்லாந்தான்
திறமைபெறத்தானிலொன்றுவிட்டு
பார்க்கவேசீனியதுபலந்தான்பத்து
பக்குவமாய்ப்பனவெல்லம்பலமுமஞ்சு
கார்க்கவேயடுப்பில்வைத்து பாகாய்க்காய்ச்சி
கடைசரக்கைச்சொல்லுகிறேன்கருவாய்கேளு
ஏர்க்கவே ० திரிகடுகுதானிக்காயு
யினியதேவருகடுக்காயுங்கிராம்புமாமே. 341

० திரிகடுகு-சுக்கு-மிளகு-திப்பிலி.

ஆகுமேஅதிமதுரங்கர்ப்பூரந்தானு
மக்கிராகாரமுடன் ० கருவாப்பட்டை
போகுமேசாதிக்காய்சிறுகாகப்பூ
போஸ்தக்காய்பத்தியும்பொருந்தக்கூட்டி
வாகுபெறவேமுடல்வெட்டிவேரு
மல்லியொடுமுந்திரிகையபின்வெண்காரம்
ஏகுமேசீரகமும்விலாமிச்சோடு
யிவையெல்லாந்தானெடுத்தின்னங்கேளே. 342

० கருவாகப்பட்டை-சன்னலவுங்கப்பட்டை.

கேளடாமாசிக்காய்பெருத்தோடு
கிருபையொடுசொல்லுகிறென்வகையொன்றுக்கு
கேளடாவாராமற்பலங்கால்வீதங்
கொண்டுவந்துசூரணமாய்செய்துகொண்டு
வாளடாபாகத்திலேபோட்டுக்கிண்டி
மைந்தனேபடியரைதான்தேனுவிட்டு

சூளடாயாவினெய்ப்படிதான்விட்டு
சூட்டுவேனின்னமூந்தான்சொல்லுவேனே. 343

சொல்லுவேன் ⁰ பூநாகம்பலந்தானென்று
சொற்பெறிய ⁰ விந்திரகோபப்பூச்சி
வெல்லுவேன்வகையொன்றுபலமூன்றாக
விருதுபெற்றமூலைப்பாலிலரைத்துப்போட்டு
சொல்லுவேன்மங்கையுடநாமம்வாங்கி
தீர்க்கமாய்ச்சொல்லுகிறேன்திறமதாக
வல்லவனுநீயானால்சொல்லக்கேளு
மங்கையரைவிலகுநாட்டன்னைப்பாரே. 344

⁰ இந்திரகோபபூச்சி தம்பலப்பூச்சி ⁰ பூநாகம் நாக்குபூசி.

பாரப்பாவவளுடனேபோகஞ்செய்து
பரிவானவிந்துநாதம்வாங்கி
சேரப்பாநாலுநாள்சையோகித்து
தினந்தோறும்பீங்கானில்வாங்கிவைத்து
வூரப்பா ⁰ பூமதைபொடைத்துபோட்டு
அப்பனேபனியில்வைக்கசலமுமாகுங்
கூறப்பாய்ச்சலத்தைவிறுத்தநீயுங்
கொட்டுவாய் ⁰ மாகாணிபடியுமாமே. 345

⁰ பூரம்-ரசகர்ப்பூரம்.

⁰ மாகாணி-பதினாறிலொருபங்கு.

படியானசெயநீரையதிலேவார்த்து
பக்குவமாய்க்கிண்டிவிடுமெழுகுபோல
துடியானபதம்பார்த்திரக்கிக்கொண்டு
சொல்லுவேன்பீங்கானிற்பதனம்பண்ணி
வடிவானவென்தாயார்பகத்திற்றானே
வைத்துநீபூசைபண்ணியெடுத்துக்கொண்டு
விடியானகழஞ்சிநீரைகொண்டாயாகில்
வெல்லுவென்றுயோகத்தைமுடிக்கலாமே. 346

முடிக்கவேகபத்தையெல்லாமறுத்துசாடும்
மூபண்டரவிமதியுங்காட்டிகைக்கும்
நடிக்கவேபித்தத்தைக்கீழேநோக்குந்
தாதுகளையுண்டாக்குஞ்சார்வுகாட்டு
முடித்ததொருலேக்கியத்தைமண்டலமேகொள்ளு
முன்சொன்னவகைகளெல்லாந்திரந்துகாட்டும
பிடிக்கவேவேணுமடாயகாரவீட்டை
பேசாதேலேகியத்தின்றிறமிதாமே 347

ஆமென்றலேகியத்தையுண்டபோது
